# කෘෂිකර්ම අමාත්‍යාංශය
# கமத்தொழில் அமைச்சு
# Ministry of Agriculture



## කාර්ය සාධන වාර්තාව
## செயலாற்றுகை அறிக்கை
## PERFORMANCE REPORT
## 2014


“ගොවිජන මන්දිරය”
80/5, රජමල්වත්ත පටුමග,
බත්තරමුල්ල.

"கொவிஜன மந்திரய",
80/5, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

“Govijana Mandiraya”,
80/5, Rajamalwatte Avenue,
Battaramulla, Sri Lanka.

## நோக்கு

“உணவுப் பாதுகாப்பையும் தேசிய சுபீட்சத்தையும் நோக்காகக் கொண்ட வினைத்திறன் மிக்கதும், விளைவுப் பெருக்கமுடையதும், பலமானதுமான விவசாயத்துறை”

## செயற்பணி

“இயற்கை வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்வதினூடாக சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட புதுவடிவமுடையதும் வர்த்தக நோக்கத்துடன் கூடியதுமான,

பூகோல ரீதியில் போட்டிமிகு உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சி விவசாயத்துறையொன்றை அடைதல்”

# மாண்புமிகு கமத்தொழில் அமைச்சரின் செய்தி

**2014** ஆம் வருடத்திற்கான செயலாற்றுகை அறிக்கை வெளியிடப்படுகின்ற இவ் வேளையில், நாட்டை மென்மேலும் பலப்படுத்தும் விவசாயத்துறை சார்ந்த பயணப் பாதையில் பயணிக்கும் பணியில் பங்களிப்பு வழங்கக் கிடைத்தமையிட்டு கமத்தொழில் அமைச்சர் என்ற வகையில் பேருவகை அடைகின்றேன். விவசாயத்தின் தாய்வீடு எனப்படுகின்ற ரஜரட்ட நகரில் பிறந்தவன் என்ற வகையில் நாட்டு மக்களின் பட்டினியைப் போக்குவதற்கு அயராது உழைக்கும் விவசாயியைப் பாதுகாத்த வண்ணம், அவர்களுக்கு செழிப்பான சுபீட்சமான வாழ்க்கை முறையொன்றைப் பெற்றுக் கொடுப்பதே கமத்தொழில் அமைச்சின் பிரதான நோக்கமாகும்.

விவசாயியின் விவசாயத்துவத்தை அப்பாவி நிர்க்கதியான தன்மையாகக் காணும் சமூக எண்ணத்தை நாங்கள் மாற்றியமைக்க வேண்டிய காலம் எம்மை அடைந்துள்ளது. இத் தருணத்தில் நாட்டிற்குத் தேவை வளம் செழிக்கும் பலமான விவசாயிகள் சமூமொன்று என்பதை நாம் புரிந்து கொள்வது முக்கியமாகும். அதற்குத் தேவையான பின்னணியை வகுப்பது கமத்தொழில் அமைச்சின் பொறுப்பாக உள்ளதென்பதில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் திடமாக நம்பிக்கை கொண்டுள்ளேன். அதற்கமைய விவசாய மக்கள் சார்பில் எனது உச்ச பங்களிப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு நானும் எனது அமைச்சின் எல்லா உத்தியோகத்தர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கு ஆயத்தமாக உள்ளோம்.

பயிர்ச் செய்கைக்குத் தேவையான விதை நெல் உட்பட நடுகைப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல், உர விநியோகம் உள்ளிட்ட கமத்தொழிலுடன் பின்னிப் பிணைந்த எல்லா நடவடிக்கைகளையும் ஒரே அமைச்சின் கீழ் மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதானது, விவசாய மக்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளை இனங் கண்டு அவற்றுக்குத் துரித தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு வசதியாக உள்ளது. விவசாயத்துறை சார்ந்த எல்லாப் பொறுப்புகளும் ஒரே கூரையின் கீழ்க் கொண்டு வரப்பட்டிருப்பதானது, மிகவும் இலகுவாக தீர்மானங்களை எடுப்பதற்கும், அதன் விளைவாக தேவையானதை, தேவையான வேளையில் நிறைவேற்றக் கூடியதாக இருப்பதும் இந் நாட்டு மக்களுக்குக் கிடைத்த மிக முக்கிய வரம் மட்டுமல்லாது, அது விவசாயத்திற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதற்கு எனக்குக் கிடைத்த வரப்பிரசாதமும் ஆகும்.

தேசத்தின் உயிர்நாடியாக விளங்கும் விவசாயத்திற்குப் பக்கபலமாக இருந்து, நாட்டின் விளைச்சலை செழிப்பாக்க மேற்கொள்ள வேண்டியவற்றை உட்சாகத்துடன் நிறைவேற்றி விவசாயத்துறையில் முக்கிய பணியாற்றுவதே கமத்தொழில் அமைச்சரான எனது ஒரே எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்புடன், விவசாய மக்களின் உண்மையான தேவைகளை நிறைவேற்றிய வண்ணம், செழிப்புள்ள விவசாயப் பொருளாதாரத்திற்கு வழி திறப்பதற்கு கமத்தொழில் அமைச்சின் எல்லா உத்தியோகத்தர்களும் கைகோர்த்து செயற்படுவார்கள் என்பதில் திடமான நம்பிக்கை கொண்டுள்ளேன். எல்லோரதும் உச்ச அர்ப்பணிப்புடனும், பங்களிப்புடனும் விவசாயத்துறையில் செழிப்புற்ற சுபீட்சம் நிறைந்த எதிர்காலத்திற்கு பிரார்த்திக்கின்றேன்.

***துமிந்த திசாநாயக்க***
**கமத்தொழில் அமைச்சர்**

# மாண்புமிகு கமத்தொழில் பிரதி அமைச்சரின் செய்தி

தற்சமயம் நாம் முகங் கொடுத்து வரும் பிரதான சவால்களுள், இரசாயன உரப் பாவனையும், பீடைநாசினிப் பாவனையும் காணப்படுகின்றது. இதன் காரணமாக முகங் கொடுக்க நேர்ந்துள்ள அனர்த்தத்திலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டிய தேவை காணப்படுவதுடன், இப் பிரதான பொறுப்பு கமத்தொழில் அமைச்சைச் சார்ந்துள்ளது.

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் சனத்தொகைப் பெருக்கத்திற்கு அமைய உற்பத்தியைக் கூட்டுவதும், அடிக்கடி ஏற்படுகின்ற காலநிலை, தட்ப வெப்பநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படக் கூடிய அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்கக் கூடியவாறு நவீன தொழில்நுட்பம், புதிய விதையினங்களைக் கண்டுபிடித்தல், புதிய உபாயவழிகளைக் கடைப்பிடித்தல் என்பவற்றின் மீது துரித கவனம் செலுத்தி அவற்றின் பக்கம் செல்ல வேண்டியுள்ளது.

மண்வளப் பாதுகாப்பு, சேதனப் பசளைப் பாவனை, சுற்றாடல் நேசம் கொண்ட பீடைநாசினிப் பாவனை, சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல், நீர் முகாமைத்துவம், நீர்ப்பாசன முறைமையை மேம்படுத்தல், குறுகியகாலப் பயிர்ச் செய்கைகளை அறிமுகம் செய்தலும் கூடிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ளலும் போன்ற துறைகள் மீதும் இவ் அமைச்சு கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

வீட்டுத் தோட்டச் செய்கை தொடக்கம் பாரிய அளவிலான விவசாயப் பண்ணை வரை மக்களை ஈடுபடுத்துவதினூடாக நுகர்வின் மீது மட்டுமல்லாது உள்ளூர் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியை சம்பாதிப்பதிலும் இளைஞர் பரம்பரையை கமத்தொழிலின் பக்கம் திருப்பி வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் துரித வேலைத் திட்டமொன்றை அமுல் செய்வதற்கும் எமது அமைச்சு கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த எல்லா முயற்சிகள் ஊடாகவும் இலங்கைத் திருநாட்டை உணவில் தன்னிறைவடைந்த நாடாக மாற்றியமைப்பதற்காக கமத்தொழில் அமைச்சினால் அமுல் செய்யப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக்கிக் கொள்வதில் அமைச்சுடன் இணைந்த திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் பிற நிறுவனங்கள் அளிக்கும் பங்களிப்பை இவ் வேளையில் பெரிதும் பாராட்டுகின்றேன்.

***வைத்தியர் அனோமா கமகே***
**கமத்தொழில் பிரதி அமைச்சர்**

# முன்னுரை

இலங்கை புராதன பெருமிதமிக்க வரலாற்றுக்கு உரிமை கோரும் ஒரு நாடாகும். இப் பெருமிதமிக்க புராதன வரலாற்றுக்கு முன்னோடி பங்களிப்பை வழங்குவது கமத்தொழிலாகும். எனவே, இவ் அளப்பரிய துறையின் முக்கியத்துவத்தை உறுதி செய்து அபிவிருத்தி செய்யும் பணியையும், பொறுப்பையும் புதிய அரசாங்கம் கமத்தொழில் அமைச்சிடம் ஒப்படைத்துள்ளது.

கமத்தொழில் இந் நாட்டு மக்களின் அன்றாட வாழ்கையுடன் பின்னிப் பிணைந்து காணப்படுவதுடன், இதற்கமைய விவசாயத்துறையானது இந் நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 10% வீத பங்களிப்பைச் செலுத்துவதுடன், விவசாயத்துறையில் தொழில் வாய்ப்பு 30% வீதமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நாட்டை ஆட்சி செய்த ஒவ்வொரு அரசாங்கமும் விவசாயத்துறையின் மேம்பாட்டிற்கு மிக முக்கிய கவனத்தைச் செலுத்தி வந்துள்ளன. அதற்கமைய, பல்வேறுபட்ட கமத்தொழில், கமநல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்தமை, உள்ளூர் உணவுப் பாதுகாப்பையும், தேசிய சுபீட்சத்தையும் கருதி பரிபூரண பங்களிப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டாகும்.

ஒப்பீட்டளவில் பிற துறைகளுடன் நோக்கும் போது காலநிலை, தட்பவெப்ப நிலை போன்ற சூழல் தாக்கங்களுக்கும் அதே போன்று பிற பல்வேறுபட்ட தாக்கங்களுக்கும் நேரடியாக முகங் கொடுப்பதற்கு விவசாயத்துறைக்கு நேர்ந்துள்ளது. அவ்வாறான நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகங் கொடுத்து தற்சமயம் உயர் விவசாயத்துறை உற்பத்திகளை உற்பத்தி செய்து சாதனை படைப்பதற்கு முடிந்துள்ளமை விவசாயத்துறை அடைந்த பாரிய வெற்றியாகும். இவ் வெற்றியை அடைவதற்காக, அதற்காகப் பங்களிப்புச் செலுத்தி, உரிய அமைச்சுகள், திணைக்களங்கள், நிறுவனங்கள், கம்பனிகள் ஆற்றிய முக்கிய பணிகளை நன்றியுடன் இத் தருணத்தில் நிறைவுகூற விரும்புகின்றேன்.

2014 ஆம் வருடத்தில் விவசாயத்துறையில் குறித்த வெற்றிகளை அடைவதற்காக தமது பூரண பங்களிப்பைச் செலுத்திய அப்போதைய அமைச்சுகளின் மாண்புமிகு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட பணியாட் தொகுதியினர் வழங்கிய ஒத்துழைப்பைப் பணிவுடன் நினைவு கூறுவதுடன், குறித்த அமைச்சுகளின் செயலாளர்கள், பிரிவுத் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள், கம்பனித் தலைவர்கள் உள்ளிட்ட எல்லா உத்தியோகத்தர்களும் வழங்கிய பங்களிப்பை பெரிதும் பாராட்டுகின்றேன்.

கமத்தொழில் அமைச்சின் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்காக தற்சமயம் இதற்குத் தலைமை தாங்கிச் செயற்படும் மாண்புமிகு அமைச்சர் துமிந்த திசாநாயக்க அவர்களினதும், பிரதி அமைச்சர் வைத்தியர் (திருமதி) அனோமா கமகே அவர்களினதும் வழிகாட்டல்களையும், ஒத்துழைப்பையும் இத் தருணத்தில் பணிவுடன் நினைவு கூறுகின்றேன். 2014 ஆம் வருடத்திற்கான செயலாற்றுகை அறிக்கையை தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களையும், தரவுகளையும் வழங்கி பூரண ஒத்துழைப்பை வழங்கிய அமைச்சின் கீழுள்ள சகல பிரிவுகளுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும், கம்பனித் தலைவர்களுக்கும், பிற உத்தியோகத்தர்களுக்கும், இப் பணிகளை செவ்வனே நிறைவேற்றிய திட்டமிடல், நடவடிக்கை, மதிப்பீட்டுப் பிரிவிற்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

*பி. விஜயரத்ன*
செயலாளர்
கமத்தொழில் அமைச்சு

## உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | **மாண்புமிகு கமத்தொழில் பிரதி அமைச்சரின் செய்தி** | | 2 |
| | **மாண்புமிகு கமத்தொழில் அமைச்சரின் செய்தி** | | 3 |
| | **முன்னுரை** | | 4 |
| 01 | **பொதுவான நிருவாகம்** | | |
| | 1.1 | பணியாட் தொகுதி விபரம் | 7-11 |
| | 1.2 | மனிதவள அபிவிருத்தி | 12-15 |
| | 1.3 | சொத்துக்களை எடுத்துக் கொள்ளல் பழுதுபார்ப்பு, நிர்மாணிப்புகள், பராமரிப்புப் பணிகள் | 16 |
| 02. | **அமைச்சின் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | | |
| | 2.1 | உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 17-22 |
| | 2.2 | சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 23-24 |
| | 2.3 | விவசாயப் பயிர் உற்பத்தி விளைச்சல் முன்னறிவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 25-26 |
| | 2.4 | பெரிய வெங்காய/ சிறிய வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் | 27-28 |
| | 2.5 | அரிசி ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டம் | 29-30 |
| | 2.6 | "தேசத்திற்கு மகுடம்" தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் கண்காட்சியும் | 31-35 |
| 03. | **விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்/கருத்திட்டங்கள்** | | 36-39 |
| 04. | **கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்** | | 40-55 |
| 05. | **நிதி அறிக்கை** | | |
| | 5.1 | அமைச்சின் நிதி முன்னேற்றம் - 2014.12.31 வரை | 56-60 |
| | 5.2 | அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் | 61 |
| 06. | சிறு ஏற்றுமதிப் பயிர் ஊக்குவிப்பு அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்- 2014 | | 62-65 |
| 07. | **அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களினால் அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்/ கருத்திட்டங்கள்** | | |
| | 7.1 | விவசாயத் திணைக்களம் | 66-70 |
| | 7.2 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 71-77 |
| | 7.3 | கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 78-81 |
| | 7.4 | இலங்கை ஹதபிம அதிகார சபை | 82-93 |
| | 7.5 | ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் | 94-98 |
| | 7.6 | தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை | 99-101 |
| | 7.7 | அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் | 102-106 |
| | 7.8 | இலங்கை விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை | 107-111 |
| | 7.9 | விவசாய, கமநல காப்புறுதிச் சபை | 112-114 |
| | 7.10. | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | 115-121 |
| | 7.11 | தேசிய உரச் செயலகம் | 122-126 |
| | 7.12 | வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி | 127-128 |
| | 7.13 | வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி | 129-130 |
| | 7.14 | வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் கம்பனி | 131-132 |

## கமத்தொழில் அமைச்சிற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட அமைச்சர்கள்/ பிரதி அமைச்சர்கள்/ செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள் 2014 - 2015

- **கமத்தொழில் அமைச்சர்**
  மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள் (முன்னாள் அமைச்சர்)
  மாண்புமிகு துமிந்த திசாநாயக்க அவர்கள்

- **கமத்தொழில் பிரதி அமைச்சர்**
  மாண்புமிகு வய்.ஜீ. பத்மசிறி அவர்கள் (முன்னாள் பிரதி அமைச்சர்)
  மாண்புமிகு அனோமா கமகே அவர்கள்

- **அமைச்சின் செயலாளர்**
- திரு. ஆர்.எம்.டீ.பி. மீகஸ்முல்ல (முன்னாள் செயலாளர்)
  திரு. பி. விஜயரத்ன

## கமத்தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட திணைக்களத் தலைவர்கள் - 2014

| |
|---|
| 1. கலாநிதி (திரு.) ரொஹான் விஜேகோன் - விவசாயப் பணிப்பாளர் நாயகம் - விவசாயத் திணைக்களம் |
| 2. திரு. என்.கே.ஏ. ரூபசிங்ஹ - பணிப்பாளர் நாயகம் - ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் |
| 3. திரு. எம்.ஏ.எஸ். வீரசிங்ஹ - கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் - கமநல சேவைகள் திணைக்களம் |
| 4. திரு. நந்தசேன ஹேரத் - தலைவர் - இலங்கை ஹதபிம அதிகார சபை |
| 5. திரு. ஈ.எம். அபயரத்ன - பணிப்பாளர் - ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் |
| 6. திருமதி குமுதினி குணசேக்கர - தலைவர் - இலங்கை பட்டினி ஒழிப்பு இயக்க சபை |
| 7. திரு. ஜகத் பாலித ஜயவர்ண - தலைவர் - அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் |
| 8. கலாநிதி (திரு.) ஜே.டீ. சமரசிங்ஹ - தலைவர் - இலங்கை விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை |
| 9. திரு. பண்டுக்க வீரசிங்ஹ - பணிப்பாளர் நாயகம் - விவசாய, கமநல காப்புறுதிச் சபை |
| 10. திரு. என்.ஜீ. ரத்நாயக்க - பணிப்பாளர் - தேசிய உரச் செயலகம் |
| 11. திரு. புத்திக்க மடிஹஹேவா - தலைவர் - வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி |
| 12. திரு. என்.எஸ்.எம். சம்சுதீன் - தலைவர் - வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி |
| 13. திரு. ஜாலிய பீ. குலசேக்கர - தலைவர் - வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் கம்பனி |

# 01. பொதுவான நிருவாகம்

## *1.1. பணியாட் தொகுதி விபரம்*

<u>2014.12.31 ஆம் திகதிக்கு அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்</u>

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திரு. ஆர்.எம்.டி.பி. மீகஸ்முல்ல | செயலாளர் |
| 2. | திரு. ஏ.எல்.ஏ. அசோக்க சிறிவர்தன | மேலதிக செயலாளர் (நிருவாகம்) |
| 3. | கலாநிதி (திரு.) டி.பி.ரீ. விஜேரத்ன | மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்) |
| 4. | திரு. எஸ்.எல்.ஜீ. பந்துசிறி | பிரதம கணக்காளர் |
| 5. | திருமதி டி.என். ஹெட்டிஆரச்சி | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (தாபனம்) |
| 6. | திரு. என்.பீ. அமரதுங்க | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) |
| 7. | திரு. எச்.எஸ். தர்மவர்தன | பணிப்பாளர் (கமத்தொழில் சேவைகள்) |
| 8. | திருமதி எல்.யூ.என். சுமனசேக்கர | பணிப்பாளர் (தொழில்நுட்பம்) |
| 9. | கலாநிதி (திரு.) ஜே.டி.எச். விஜேவர்தன | பணிப்பாளர் (சேதனப் பசளை) |
| 10. | திரு. என்.ஜீ. ரத்நாயக்க | பணிப்பாளர் (தேசிய உரச் செயலகம்) |
| 11. | திரு. எம்.கே.ஜீ.எஸ்.பீ.கே. ஜயசேக்கர | பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 12. | திரு. டப்.கே.எல்.ஈ. வலல்லாவிட்ட | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் |
| 13. | திருமதி எஸ்.ஏ. ஸ்ரீயாணி | கணக்காளர் (கொள்முதல்) |
| 14. | திருமதி சீ.எஸ். ஹெட்டிஆரச்சி | கணக்காளர் (கொடுப்பனவு) |
| 15. | திருமதி ஜீ.கே.டி.எச். மெனிகே | புள்ளிவிபரவியலாளர் |
| 16. | திரு. பீ.என்.என். ஜயநெத்தி | பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம்) |
| 17. | திரு. எம்.ஜீ.ஏ.பீ. குமார | பிரதிப் பணிப்பாளர் (இயற்கை வளம்) |
| 18. | திரு. கே.யூ. ஜயசேக்கர | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 19. | திரு. ஈ.எம்.எஸ். ஏக்கநாயக்க | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 20. | திரு. எஸ்.ஏ.எஸ்.கே. சேனாதீர | உதவிப் பணிப்பாளர் (விவசாயத் தொழில்நுட்பம்) |
| 21. | திருமதி எம்.கே. ராஜபக்ஷ | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) |
| 22. | திருமதி கே.எம்.வய்.எஸ். பொரலஸ்ஸ | உதவிச் செயலாளர் (நிருவாகம்) |
| 23. | செல்வி ஆர்.ஜீ. உத்பலா ஏ. குணசேக்கர | உதவிச் செயலாளர் (தாபனம்) |
| 24. | திருமதி டப். மதூஷா ஆர். வீரக்கொடி | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) |
| 25. | திருமதி எஸ்.ஏ. நதீஷா தர்ஷனீ | உதவிச் செயலாளர் (நிருவாகம்) |
| 26. | திரு. எஸ். சகீ முஹமட் | இயந்திரவியல் பொறியியலாளர் |
| 27. | திரு. எல். பர்சி கித்சிறி பெரேரா | உதவிச் செயலாளர் (தொழில் உறவுகள்) |
| 28. | திரு. ஜீ.ஆர்.டி. குணரத்ன | உதவிப் பணிப்பாளர் (உரம்) |
| 29. | திரு. சிசிற விஜேசுந்தர | உதவிப் பணிப்பாளர் (உரம்) |
| 30. | திரு. கே.எச்.டப்.எம். கருணாரத்ன | உதவிப் பணிப்பாளர் (உரம்) |
| 31. | திரு. பி.எச். ரொஹான் இந்துக்க | உதவிப் பணிப்பாளர் (உரம்) |
| 32. | திரு. ஏ.ஆர்.எம்.ஜீ. நவரத்ன பண்டார | உதவிப் பணிப்பாளர் (உரம்) |
| 33. | திரு. கே. மகத்தன்தில | உதவிப் பணிப்பாளர் (உரம்) |
| 34. | திரு. டி.ஜீ.எஸ். தசநாயக்க | உதவிப் பணிப்பாளர் (உரம்) |
| 35. | திரு. என். தம்மிக்க எதிரிசூரிய | உதவிப் பணிப்பாளர் (உரம்) |
| 36. | திரு. ஆர்.எம்.ரீ. புஷ்பகுமார | உதவிப் பணிப்பாளர் (உரம்) |
| 37. | திரு. எஸ்.ஏ. தசநாயக்க | புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் |
| 38. | திருமதி சீ.பீ. சந்திரசேக்கர | புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் |
| 39. | திரு. பி. ஆரியபால | மொழிபெயர்ப்பாளர் |
| 40. | திருமதி எஸ்.வய். அபேவர்தன | செயலாளரின் இணைப்புச் செயலாளர் |
| 41. | திருமதி பீ.ஏ.எஸ். சந்திரிகா | நிருவாக உத்தியோகத்தர் (தாபனம்) |
| 42. | திரு. எஸ்.ஏ. சமத்தபால | நிருவாக உத்தியோகத்தர் (நிருவாகம்) |

## 2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரை இடமாற்றம் பெற்றுச் சென்ற பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிற உத்தியோகத்தர்கள், கனிஷ்ட ஊழியர்கள்

* பதவிநிலை உத்தியோகத்தர்கள்

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திருமதி கே.எஸ்.பீ. பியதிஸ்ஸ | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 2014.08.19 |
| 2. | திருமதி எம்.ஏ.எஸ்.கே. குணவர்தன | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | 2014.10.31 |
| 3. | திரு. எச்.ஜீ.ஜீ.ஜே. தர்மசேன | பணிப்பாளர் (அபிவிருத்தி) | 2014.12.01 |

* அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

| | உத்தியோகத்தரின் பெயர் | இடமாற்றம் பெற்றுச் சென்ற சேவை நிலையம் | இடமாற்றம் பெற்றுச் சென்ற இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திருமதி கே.என். ருக்ஷானீ | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.01.03 |
| 2. | திருமதி பி.ஏ.டி. நிலூஷிகா | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.01.03 |
| 3. | திரு. ஐ.எஸ்.டி. குலரத்ன | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.01.10 |
| 4. | திரு. பீ.ஜீ.எம்.பி. கமகே | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.02.03 |
| 5. | திருமதி எஸ். துல்சியா | கணக்காளர் சேவை | 2014.02.07 |
| 6. | திருமதி எல்.ஜீ.வீ. லக்மாலீ | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.02.25 |
| 7. | திருமதி ஜீ.என். பிரியதர்ஷனீ | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.05.12 |
| 8. | திருமதி எம்.ஆர்.வய். சௌமியபாலீ | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.05.12 |
| 9. | திரு. ஏ.டி.எஸ்.எல். கருணாதிலக்க | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.05.12 |
| 10. | திரு. பீ.டி.என். ஆரியரத்ன | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.05.12 |
| 11. | திருமதி எஸ்.என்.எம். சுபாஷினீ | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.05.21 |
| 12. | திரு. எஸ்.கே. வீரசிங்ஹ | மத்திய மாகாண ஆசிரியர் சேவை | 2014.06.10 |
| 13. | திரு. டி.எம்.ஆர்.என். தனபால | மத்திய மாகாண ஆசிரியர் சேவை | 2014.06.11 |
| 14. | திருமதி பி. மினிலி | இலங்கை கல்வி நிருவாக சேவை | 2014.06.16 |
| 15. | திரு. கே. சசிதரன் | நெடுஞ்சாலை, துறைமுக, கப்பற்றுறை அமைச்சு | 2014.07.17 |
| 16. | திரு. பீ.ஏ.டீ.டப். பெரியப்பெரும | வடமேல் மாகாண மாகாண சபை | 2014.07.23 |
| 17. | திரு. ஏ.ரீ. அபேகுணவர்தன | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 2014.07.28 |
| 18. | திரு. எல்.டி. காஹிங்கல | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 2014.07.30 |
| 19. | திருமதி என். நிரஞ்சனா | தொகை மதிப்பு, புள்ளி விபரத் திணைக்களம் | 2014.09.10 |
| 20. | திரு. ஆர்.டப்.டப். சில்வா | தென் மாகாண ஆசிரியர் சேவை | 2014.09.13 |
| 21. | திருமதி பீ.ஜீ. பிரசாதீ லக்மினி | தென் மாகாண மாகாண சபை | 2014.09.30 |
| 22. | திருமதி ஆர்.எச்.ஏ.டப். ருவினி | தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுது போக்கு அலுவல்கள் அமைச்சு | 2014.09.30 |
| 23. | திரு. டி.ரீ.எஸ். பதிரண | மேல் மாகாண ஆசிரியர் சேவை | 2014.10.01 |
| 24. | திருமதி டி.ஏ.என். நிர்மலீ | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சு | 2014.10.13 |

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரை இடமாற்றம் பெற்றுச் சென்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்**

| | உத்தியோகத்தரின் பெயர் | சேவை நிலையம் | இடமாற்றம் பெற்றுச் சென்ற சேவை நிலையம் | திகதி |
|---|---|---|---|---|
| 1. | செல்வி வய்.எம்.யூ. அஞ்சலீ | மெததும்பரை பிரதேச செயலகம் | தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுது போக்கு அலுவல்கள் அமைச்சு | 2014.10.02 |
| 2. | திரு. ஆர்.பீ.எஸ்.பீ. குமார | கலிகமுவ பிரதேச செயலகம் | தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுது போக்கு அலுவல்கள் அமைச்சு | 2014.09.26 |
| 3. | திருமதி டப்.எம்.ஏ.கே. வீரக்கோன் | வீரம்புகெதர பிரதேச செயலகம் | மாகோ பிரதேச செயலகம் | 2014.11.20 |
| 4. | செல்வி ஜே.எச்.ஐ.ஆர். ஜயமஹ | மகவெவ பிரதேச செயலகம் | வடமேல் மாகாண மாகாண சபை | 2014.11.04 |
| 5. | திரு. எச்.பி.என்.எஸ். குமார | பளுகஸ்வெவ பிரதேச செயலகம் | தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு | 2014.07.16 |
| 6. | திரு. ரீ.எஸ்.எம்.எஸ். செனவிரத்ன | சியம்பலாண்டுவை பிரதேச செயலகம் | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 2014.07.22 |
| 7. | திரு. கே.ஆர்.எஸ்.எஸ். விஜேநாயக்க | உக்குவளை பிரதேச செயலகம் | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 2014.07.21 |
| 8. | திருமதி எச்.ஜீ.என். சில்வா | கொத்மலை பிரதேச செயலகம் | கல்வி அமைச்சு | 2014.07.28 |
| 9. | திருமதி ஆர்.டீ.ஐ. மெனிகே | ஹிங்குராக்கொடை பிரதேச செயலகம் | கல்வி அமைச்சு | 2014.10.31 |
| 10. | திருமதி ரீ.டீ.எஸ்.பீ.கே. தேவரத்ன | ஹிங்குராக்கொடை பிரதேச செயலகம் | வடமேல் மாகாண மாகாண சபை | 2014.10.31 |
| 11. | திருமதி டப்.ஏ.ஜீ. உதயானீ | மாதம்பை பிரதேச செயலகம் | பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 2014.11.05 |
| 12. | திருமதி ஐ.எஸ். விதானகே | கதிர்காமம் பிரதேச செயலகம் | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 2014.11.05 |
| 13. | திருமதி கே.எஸ்.ஏ.எஸ். ஜயதுங்க | ராஜாங்கனய பிரதேச செயலகம் | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 2014.11.12 |
| 14. | திருமதி பீ.எஸ். நீலாரத்ன | நுவரெளியா பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.06.02 |
| 15. | செல்வி எச்.எம்.வய்.ஜீ.எஸ்.பி.கே. ஹேரத் | யட்டவத்தை பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.06.09 |
| 16. | திருமதி ஏ.எம்.ஏ.பீ. ஜயசேக்கர | நுவரெளியா பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.06.04 |
| 17. | திருமதி ஆர்.எஸ்.டீ.ஆர். ராமநாயக்க | அம்பகமுவ பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.06.03 |
| 18. | திருமதி எச்.ஏ.டீ. பண்டார | அம்பகமுவ பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.11.09 |
| 19. | திரு. டப்.ஜீ.சீ.எஸ்.பி. சுமனசிறி | நுவரெளியா பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.03.06 |
| 20. | திருமதி டீ.எம்.என்.பீ.கே. திசாநாயக்க | கல்நேவ பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.01.18 |
| 21. | திருமதி எம்.எம்.யூ.என்.எம். முதன்நாயக்க | ஹங்குரண்கெத்த பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.06.06 |

* **<u>அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை</u>**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திருமதி டப்.எம்.எஸ்.பீ. வீரசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.10 |
| 2. | திருமதி வய்.ஏ.டீ.எஸ். நிலந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.02.28 |

* **<u>நூலக அதிபர் சேவை</u>**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| **1.** | திரு. கே.ஜீ.எஸ். குணதிலக்க | நூலக அதிபர் | **2014.03.21** |

* **<u>இணைந்த சாரதி சேவை</u>**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. டப்.எம்.என்.கே. ஜயம்பதி | சாரதி II 'அ' | 2014.01.20 |
| 2. | திரு. எம்.ஜீ. ஜயரத்ன | சாரதி II 'ஆ' | 2014.07.09 |
| 3. | திரு. கே.எச்.ஜே.ஏ. குமார் | சாரதி II 'ஆ' | 2014.08.13 |
| 4. | திரு. பி.எம். குமாரதிலக்க | சாரதி II 'ஆ' | 2014.12.09 |
| 5. | திரு. எல்.ஜீ. ஜயரத்ன | சாரதி II 'அ' | 2014.12.11 |

* **அலுவலக உதவியாளர் சேவை**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திருமதி எம்.ஜீ.எஸ்.டீ. வித்தியாபதீ | அலுவலக உதவியாளர் சேவை III | 2014.08.24 |
| 2. | செல்வி எம்.எஸ். ஜீவந்தி | அலுவலக உதவியாளர் சேவை III | 2014.09.05 |

**<u>2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையிலான காலப்பகுதியில் இடமாற்றம் பெற்று வந்த பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிற உத்தியோகத்தர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்கள்</u>**

* **<u>பதவிநிலை உத்தியோகத்தர்கள்</u>**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| **1.** | திரு. எஸ்.ஏ.எஸ்.கே. சேனாதீர | உதவிப் பணிப்பாளர் (விவசாயத் தொழில்நுட்பம்) | **2014.06.18** |
| **2.** | திருமதி எஸ்.ஏ. நதீஷா தர்ஷனீ | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | **2014.10.01** |
| **3.** | திருமதி கே.எம்.வய்.எஸ். பொரலஸ்ஸ | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | **2014.10.29** |

* அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

| | உத்தியோகத்தரின் பெயர் | சேவையாற்றிய சேவை நிலையம் | சேவைக்காக வந்த சேவை நிலையம் | திகதி |
|---|---|---|---|---|
| 1. | திருமதி ஐ.எம்.சீ.எஸ். பந்துசேன | மாகோ பிரதேச செயலகம் | வீரம்புகெதர பிரதேச செயலகம் | 2014.02.08 |

* <u>அரச முகாமைத்துவ உதவியாளர்</u>

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. ஜீ.ஏ. பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.06 |
| 2. | திருமதி டப்.டீ. அனோமா நந்தனீ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.06 |
| 3. | செல்வி கே. வருணி ஷமிலா கோரலகே | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.06 |

**<u>2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரை பிற சேவைகளுக்காக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்</u>**

* அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

| | உத்தியோகத்தரின் பெயர் | சேவையாற்றிய சேவை நிலையம் | விடுவிக்கப்பட்ட சேவை | விடுவிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| 1. | திரு. எச்.எம்.ஏ.ஜீ. திலக்கரத்ன | வாரியப்பொலை பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.01.02 |
| 2. | திரு. ஜே.எச்.எம்.பி.ரீ. ஜயசுந்தர | குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.01.06 |
| 3. | திரு. ஜே.ஏ.பீ.எஸ். ஜயலத் | குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.01.06 |
| 4. | திரு. ரீ.எஸ். ருவன் | குருவிட்ட பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.01.30 |
| 5. | திருமதி என்.கே. வீரசிங்ஹ | யட்டிநுவர பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.02.03 |
| 6. | திருமதி ஆர்.எஸ்.டீ.எச். ராமநாயக்க | பஸ்பாகே கோறளை பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.02.03 |
| 7. | திரு. பி.பீ.யூ.ஆர். பண்டார | அளவ்வை பிரதேச செயலகம் | விவசாய உத்தியோகத்தர் - இராணுவ தொண்டர் படை | 2014.02.11 |
| 8. | திரு. ஏ. பிரேமசந்திர | கஹவத்தை பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.04.02 |
| 9. | திருமதி கே.ஐ. சந்தமாலீ | குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.05.12 |
| 10. | திருமதி பீ.ஜீ.சீ.சீ. குணசிங்ஹ | பஸ்பாகே கோறளை பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.05.23 |
| 11. | திரு. ஜே.எம்.என்.ஜே. வெலிவிட்ட | ஹத்தரலியத்த பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.06.04 |
| 12. | திருமதி ஜே.பி.டப்.எஸ்.எம்.ஜீ.டப்.ஜே.பி. கல்பொத்தாவல | தும்பனை பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.06.05 |
| 13. | திருமதி எல்.ஏ.ரீ.எஸ். விமல்சிங்ஹ | தும்பனை பிரதேச செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.06.06 |
| 14. | செல்வி கே.ஜீ.எம்.டீ. கருணாதிலக்க | கண்டி மாவட்டச் செயலகம் | ஆசிரியர் சேவை | 2014.06.13 |

**2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையிலான காலப்பகுதியில் ஓய்வுபெற்றுச் சென்ற பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிற உத்தியோகத்தர்கள்**

* **பதவிநிலை உத்தியோகத்தர்கள்**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | ஓய்வுபெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. எல்.கே. ஹத்துருசிங்ஹ | பணிப்பாளர் (கருத்திட்டம்) | 2014.04.09 |
| 2. | திரு. என்.ஜீ. ரத்நாயக்க | பணிப்பாளர் (தேசிய உரச் செயலகம்) | 2014.08.14 |
| 3. | கலாநிதி (திரு.) டீ.எம்.என். திசாநாயக்க | மேலதிக செயலாளர் (கமத்தொழில் அபிவிருத்தி) | 2014.10.30 |

* **அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | ஓய்வுபெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திருமதி பீ.ஏ.எம். சந்திரலதா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.11.27 |

* **இணைந்த சாரதி சேவை**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | ஓய்வுபெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.ஏ. ஜயசிறி | சாரதி I | 2014.04.17 |

* **கனிஷ்ட ஊழியர்கள்**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | ஓய்வுபெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. பீ.டப். ஜினதாச | அலுவலக உதவியாளர் | 2014.02.21 |
| 2. | திரு. என்.வீ. பியசிறி | அலுவலக உதவியாளர் | 2014.07.10 |

## 1.2. *மனித வள அபிவிருத்திப் பிரிவு*

**பயிற்சி நிகழ்ச்சிகள்**

| விபரம் | செலவு விடய இல. | செலவு செய்யப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி | 118-1-2-2401 அமைச்சு | 1,216,317.67 |
| | 118-2-3-2401 கமத்தொழில் அபிவிருத்திப் பிரிவு | 693,784.79 |
| வெளிநாட்டுப் பயிற்சி | 118-1-2-1102 அமைச்சு | 3,784,315.04 |
| | 118-1-2-1102 நிருவாகப் பிரிவு (உத்தியோகபூர்வ விஜயம்) | 179,917.50 |
| | 118-2-3-1102 கமத்தொழில் அபிவிருத்திப் பிரிவு (உத்தியோகபூர்வ விஜயம்) | 2,010,852.71 |
| | 118-1-2-2401 நிருவாகப் பிரிவு (பயிற்சி நிகழ்ச்சிகள்) | 775,958.17 |
| | 118-2-3-2401 கமத்தொழில் அபிவிருத்திப் பிரிவு (பயிற்சி நிகழ்ச்சிகள்) | 693,784.79 |

## உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

**2014 ஆம் வருடத்தில் பயிற்சிப் பாடநெறிகளைப் பின்பற்றிய உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரம்**

| | பயிற்சி நிகழ்ச்சி | பங்குபற்றிய உத்தியோகத்தர் |
|---|---|---|
| 1. | தமிழ் மொழி டிப்ளோமா பாடநெறி | திரு. கே.யூ. ஜயசேக்கர - உதவிப் பணிப்பாளர் |
| 2. | அமைச்சின் சாரதிகளுக்கும், அலுவலக உதவியாளர்களுக்குமாக நடாத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறி | மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு இணைப்பதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சாரதிகள், அலுவலக உதவியாளர்கள் அனைவரும் |
| 3. | REQUSETING FOR FINANCIAL PROVISIONS TO FOLLOW THE MASTER OF HUMAN RIGHTS | திருமதி பீ.ஏ.எஸ். ஹேவகே - சட்ட அலுவலர் |
| 4. | அலுவலக உதவியாளர்களின் பொறுப்புகளும் பணிகளும் | திரு. ஏ.பீ.ஏ. குணவர்தன - அலுவலக உதவியாளர் |
| 5. | திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சி | திருமதி என்.எஸ். திவுலஆரச்சி - மகளிர் நிலைய உத்தியோகத்தர் |
| 6. | கொள்முதல் செயலமர்வு | செல்வி லலனி லசந்திகா பெரேரா<br>செல்வி டீ. நாலிகா மனோரி கருணாரத்ன |
| 7. | நிதிப் பிரமாணங்கள் 104 - விசாரணை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | அமைச்சைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் |
| 8. | சிறாப்பர்/ காசாளர் பதவிக்குரிய பொறுப்புகளும் பணிகளும் | திரு. ஆஸ்லி பெரேரா - அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 9. | விசேட நூலக முகாமைத்துவச் செயலமர்வு | செல்வி டப்.எம்.சீ.எல். விஜேசிங்ஹ |
| 10. | OPEN ACCESS TO RESEARCH INFORMATION AWARCHESS RAISING | செல்வி டப்.எம்.சீ.எல். விஜேசிங்ஹ |
| 11. | வதிவிடமல்லாத 12 நாள் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சி | அமைச்சு உத்தியோகத்தர்கள் |

## வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

| தொடர் இல. | வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் - கமத்தொழில் அமைச்சு - 2014 | | | | |
|---|---|---|---|---|---|
| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | நிகழ்ச்சி | காலப்பகுதி | நாடு |
| 1. | திரு. என்.பீ. அமரதுங்க | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) | பன்முகப்படுத்தப்பட்ட நிருவாகம், நல்லாட்சி முறையிலான ஆலோசனைச் சேவைகள் தொடர்பான CIRDAP - NIRD சர்வதேச பயிற்சி நிகழ்ச்சி | 09.01.2014 - 18.01.2014 | இந்தோனேசியா |
| 2. | திரு. எல்.என்.ஜீ. கயான் ஹெக்டர் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | புலமைச் சொத்து உரிமை மற்றும் தொடர்புடைய பிற விடயங்கள் | 20.01.2014 14.03.2014 | இந்தியா |
| 3. | திரு. ஜீ.கே. முதலிகே | அபிவிருத்தி உத்தியோகத்தர் | கமத்தொழில் மற்றும் உணவு உற்பத்திப் பணிகளைத் திட்டமிடலும் ஊக்குவிப்பும் | 20.012014 - 14.03.2014 | இந்தியா |
| 4. | திரு. ஆர்.எம்.டீ.பி. மீகஸ்முல்ல | செயலாளர் | ஆசிய பசுபிக் வலய (Ria) திறமுறைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் | 28.01.2014 | பாங்கொக் |
| 5. | திரு. டீ.எல்.ஜீ. திலகரத்ன | விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் | கிராம அபிவிருத்திக்காக புவியியல் தகவல்களை தொடர்புபடுத்திக் கொள்ளல் | 10.02.2014 - 24.03.2014 | இந்தியா |
| 6. | திரு. எஸ்.ஏ. மகவத்தகே | விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் | மரக்கறி உற்பத்தி தொடர்பான பயிற்சிப் பாடநெறி | 15.02.2014 - 30.04.2014 | எகிப்து |
| 7. | திரு. டீ.எம்.என். திசாநாயக்க | மேலதிக செயலாளர் (கமத்தொழில் அபிவிருத்தி) | ஆசியாவில் உணவுப் பயிர் உற்பத்தி தொடர்பான முதலாவது வருடாந்த மாநாடு | 17.02.2014 - 21.02.2014 | வியட்நாம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | திருமதி யூ.பீ.சீ. துஷங்கா<br>திருமதி எஸ்.டீ. குசும் ஸ்ரீயாணீ | வரவு - செலவுத் திட்ட உதவியாளர் | கிராமிய அபிவிருத்தி தொடர்பான செயலமர்வும் பயிற்சி நிகழ்ச்சியும் | 23.02.2014 - 06.03.2014 | பங்களாதேஷ் |
| 9. | திருமதி எம்.கே. ராஜபக்ஷ | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | அபிவிருத்தியின் போது கிராமியத் தொழில்நுட்பங்களை ஈடுபடுத்திக் கொள்ளல் தொடர்பான சர்வதேச ஒத்துழைப்புச் செயலமர்வு | 18.02.2014 - 27.02.2014 | இந்தியா |
| 10. | திரு. பீ.என்.என். ஜயநெத்தி | பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம்) | ஆசிய பசுபிக் வலய பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான இலங்கை - ஈராக் இணைந்த குழுவின் 8 வது கூட்டத் தொடர் | 24.02.2014 - 25.02.2014 | ஈராக் |
| 11. | திரு. எம்.கே.ஜீ.எஸ்.பீ.கே. ஜயசேக்கர | பணிப்பாளர் (திட்டமிடல்) | விவசாயத்துறை முதலீட்டிற்கான CFS மூலதத்துவங்களை தொடர்புபடுத்திக் கொள்ளல் | 03.03.2014 - 04.03.2014 | தாய்லாந்து |
| 12. | கலாநிதி (திரு.) டீ.பி.ரீ. விஜேரத்ன | மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்) | குடும்ப விவசாயப் பண்ணை முறை தொடர்பான பூகோலச் செயலமர்வு | 04.03.2014 - 07.03.2014 | |
| 13. | திரு. ஏ.எல்.ஏ. அசோக்க சிறிவர்தன | மேலதிக செயலாளர் (நிருவாகம்) | கிராமிய அபிவிருத்தியில் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தை தொடர்புபடுத்திக் கொள்ளல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 10.03.2014 - 19.03.2014 | இந்தியா |
| 14. | கலாநிதி (திரு.) ஜே.டீ.எச். விஜேவர்தன | பணிப்பாளர் (சேதனப் பசளை) | நிலைபேறான விவசாய அபிவிருத்திக்காக சேதன விவசாயம் எனும் தொனிப் பொருளினாலான சர்வதேச செயலமர்வு | 15.03.2015 - 20.03.2015 | ஓமான் |
| 15. | திரு. எச்.ஆர்.ஜீ.பி. எரபதுபிட்டிய | மாவட்ட விவசாயப் பணிப்பாளர் (அநுராதபுரம்) | ஆசிய - ஐரோப்பிய நாடுகளுக்காக பச்சைவீடு மரக்கறிச் செய்கை தொடர்பான பயிற்சிப் பாடநெறி | 22.04.2014 - 16.05.2014 | சீனா |
| 16. | திரு. வய். கட்டிப்பெஆரச்சி | மாவட்ட விவசாயப் பணிப்பாளர் (பொலநறுவை) | பேணுதல் விவசாயம் தொடர்பான சர்வதேச செயலமர்வும் பயிற்சிப் பாடநெறியும் | 24.03.2014 - 02.04.2014 | இந்தியா |
| 17. | திரு. ஆர்.எம்.டீ.பி. மீகஸ்முல்ல<br>கலாநிதி (திரு.) டீ.பி.ரீ. விஜேரத்ன | செயலாளர்<br>மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்) | 3 வது பொதுக் கூட்டம் | 23.04.2014 - 25.04.2014 | வியட்நாம் |
| 18. | திரு. எச்.எம்.ஜ. தேசப்பிரிய | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | ஆசிய நாடுகளில் விவசாயத்துறையில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கருத்தரங்கு | 09.05.2014 - 29.05.2014 | சீனா |
| 19. | திரு. ஈ.எம்.எஸ். ஏக்கநாயக்க | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச செயலமர்வும் பயிற்சி நிகழ்ச்சியும் | 19.05.2014 - 23.05.2014 | சம்பியா |
| 20. | திரு. ஈ.எம்.டீ.எஸ்.என். ஏக்கநாயக்க | மாவட்ட விவசாயப் பணிப்பாளர் (பதுளை) | வினைத்திறன் மிக்க தொழில்நுட்ப முகாமைத்துவத்தினூடாக உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச செயலமர்வும் பயிற்சி நிகழ்ச்சியும் | 19.05.2014 - 28.05.2014 | இந்தியா |
| 21. | திருமதி எஸ். கைலேஸ்வரன் | மாவட்ட விவசாயப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்) | விவசாயத்துறை, கிராமிய அபிவிருத்தி தொடர்பான திறன் விருத்தி | 08.06.2014 - 21.06.2014 | கொரியா |
| 22. | திரு. ஆர்.எம்.டீ.பி. மீகஸ்முல்ல<br>கலாநிதி (திரு.) டீ.பி.ரீ. விஜேரத்ன | செயலாளர்<br>மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்) | குரக்கன் செய்கை ஊக்குவிப்பு தொடர்பான ஆய்வுச் சுற்றுலா | 13.06.2014 - 15.06.2014 | இந்தியா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23. | திரு. ஆர்.எம்.டீ.பி. மீகஸ்முல்ல | செயலாளர் | விதைக் கட்டுப்பாடு தொடர்பான சரிநேர்ச் செயலமர்வு | 26.07.2014 - 02.08.2014 | ஜப்பான் |
| 24. | கலாநிதி (திரு.) டீ.பி.ரீ. விஜேரத்ன | மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்) | வெப்ப மண்டலப் பழச் செய்கை தொடர்பான சர்வதேச செயலமர்வு | 12.08.2014 - 14.08.2014 | மலேசியா |
| 25. | திரு. ஏ.எல்.ஏ. அசோக்க சிறிவர்தன | மேலதிக செயலாளர் (நிருவாகம்) | 13 வது ஆசிய பசுபிக் வலய விவசாயக் கொள்கை தொடர்பான மாநாடு | 01.09.2014 - 02.09.2014 | கொரியா |
| 26. | திரு. ஆர்.எம்.டீ.பி. மீகஸ்முல்ல | செயலாளர் | விவசாயத்துறை தொடர்பாக உயர் மட்ட உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு | 14.09.2014 - 18.09.2014 | கொரியா |
| | கலாநிதி (திரு.) டீ.பி.ரீ. விஜேரத்ன | மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்) | | | |
| 27. | திரு. என்.பீ. அமரதுங்க | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) | கிராமிய மட்டத்தில் மாற்றங்கள் - மலேசிய அனுபவங்கள் | 21.09.2014 - 03.10.2014 | மலேசியா |
| 28. | திருமதி கே.சீ. ஈஷானீ | விவசாய அபிவிருத்தி உதவியாளர் | கமத்தொழிலில தட்பவெப்பநிலை மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்கள் | 30.09.2014 - 03.10.2014 | இந்தோனேசியா |
| 29. | திரு. எச்.எஸ். தர்மவர்தன | பணிப்பாளர் (கமத்தொழில் சேவைகள்) | பூகோல ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விவசாய உரிமைகள் தொடர்பான உயர் மட்ட பயிற்சி நிகழ்ச்சி | 14.09.2014 - 28.09.2014 | சீனா |
| 30. | திருமதி எல்.யூ.என். சுமனசேக்கர | பணிப்பாளர் (தொழில்நுட்பம்) | சார்க் நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகின்ற நேர்மறை விவசாய முறைகள் தொடர்பான வலயச் செயலமர்வு | 22.09.2014 - 24.04.2014 | பங்களாதேஷ் |
| 31. | திரு. பீ.என்.என். ஜயநெத்தி | பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம்) | சமூக பாதுகாப்பு கிராமிய வேலைவாய்ப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஆசிய பசுபிக் வலய மாநாடு | 08.10.2014 - 09.10.2014 | தாய்லாந்து |
| 32. | திரு. எச்.ஜீ.ஜீ.ஜே. தர்மசேன | பணிப்பாளர் (அபிவிருத்தி) | நிலைபேறான அபிவிருத்தியில் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச செயலமர்வும் பயிற்சி நிகழ்ச்சியும் | 13.10.2014 - 26.10.2014 | இந்தியா |
| | திரு. எம்.ஜீ. அஜித் புஷ்பகுமார | | | | |
| 33. | திரு. எஸ்.எல்.ஜீ. பந்துசிறி | பிரதம கணக்காளர் | பூகோல தலைமைத்துவச் செயலமர்வு | 21.10.2014 - 24.10.2014 | கொரியா |
| | திரு. பீ.என்.என். ஜயநெத்தி | பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம்) | | | |
| 34. | திரு. கே.எச்.டப்.எம். கருணாரத்ன | உதவிப் பணிப்பாளர் (உரம்) | உரத் தரக் கட்டுப்பாடு | 12.11.2014 - 16.12.2014 | இந்தியா |
| 35. | திருமதி டீ.என். ஹெட்டிஆரச்சி | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (தாபனம்) | சிறியளவிலான விவசாயிகளை ஒப்பந்த விவசாயச் செய்கை ஊடாக வலய மற்றும் பூகோல நடவடிக்கையுடன் இணைத்துக் கொள்வது தொடர்பான செயலமர்வு | 03.11.2014 - 07.11.2014 | வியட்நாம் |
| 36. | திரு. எம்.கே.ஜீ.எஸ்.பீ.கே. ஜயசேக்கர | பணிப்பாளர் (திட்டமிடல்) | உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல், வறுமையை ஒழித்தல் ஊடாக நிலைபேறான விவசாயத்திற்கான தேவை தொடர்பான செயலமர்வு | 24.11.2014 - 28.11.2014 | இந்தோனேசியா |
| 37. | கலாநிதி (திரு.) ஜே.டீ.எச். விஜேவர்தன | பணிப்பாளர் (சேதனப் பசளை) | நிலைபேறான அபிவிருத்தியில் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச செயலமர்வும் பயிற்சி நிகழ்ச்சியும் | 03.12.2014 | இந்தியா |

### 1.3. சொத்துக்களை எடுத்துக் கொள்ளல் பழுதுபார்ப்பு, நிர்மாணிப்புகள், பராமரிப்புப் பணிகள்

| வாகன இலக்கம் | உற்பத்தி வகை | தொகை (ரூ.மி.) | கொள்வனவு செய்த திகதி |
|---|---|---|---|
| WP – CAB - 3718 | டொயோட்டா லேண்ட் குறூஷர் ஜீப் | 33.0 | 2014.11.03 |
| WP – CAB - 4184 | டொயோட்டா லேண்ட் குறூஷர் ஜீப் | 38.5 | 2014.11.03 |
| WP – CAB - 4182 | டொயோட்டா லேண்ட் குறூஷர் ஜீப் | 38.5 | 2014.11.03 |
| WP – PF - 7317 | டொயோட்டா ஹைலக்ஸ் டபல்கெப் | 7.1 | 2014.12.08 |
| WP – PF - 7316 | டொயோட்டா ஹைலக்ஸ் டபல்கெப் | 7.1 | 2014.12.08 |
| WP – PF - 7319 | டொயோட்டா ஹைலக்ஸ் டபல்கெப் | 7.1 | 2014.12.08 |
| WP – PF - 8351 | டொயோட்டா ஹைலக்ஸ் டபல்கெப் | 7.1 | 2014.12.08 |
| WP – PF - 8350 | டொயோட்டா ஹைலக்ஸ் டபல்கெப் | 7.1 | 2014.12.08 |
| WP – PF - 7314 | டொயோட்டா ஹைலக்ஸ் டபல்கெப் | 7.1 | 2014.12.08 |
| WP – PF - 7313 | டொயோட்டா ஹைலக்ஸ் டபல்கெப் | 7.1 | 2014.12.08 |
| WP – PF - 7318 | டொயோட்டா ஹைலக்ஸ் டபல்கெப் | 7.1 | 2014.12.08 |
| WP – PF - 7320 | டொயோட்டா ஹைலக்ஸ் டபல்கெப் | 7.1 | 2014.12.08 |
| | கூட்டுத் தொகை | 173.9 | |

* **நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள்**

| வாகன இலக்கம் | உற்பத்தி வகை | தொகை (ரூ.மி.) | கொள்வனவு செய்த திகதி |
|---|---|---|---|
| **WP – KY - 3832** | நிசான் ரியானா மோட்டார் கார் | 14.7 | 2014.05.26 |
| **WP – PF - 7652** | மிட்சுபிஷி L200 கெப் | 7.2 | 2014.12.08 |
| **WP – PF – 7661** | மிட்சுபிஷி L200 கெப் | 7.2 | 2014.12.08 |
| **WP – PF - 7641** | மிட்சுபிஷி L200 கெப் | 7.2 | 2014.12.08 |
| **WP – PF - 7657** | மிட்சுபிஷி L200 கெப் | 7.2 | 2014.12.08 |
| **WP – PF - 7639** | மிட்சுபிஷி L200 கெப் | 7.2 | 2014.12.08 |
| | கூட்டுத் தொகை | 50.7 | |

### பழுதுபார்ப்பு, நிர்மாணிப்புகள், பராமரிப்புப் பணிகள்

| | பழுதுபார்ப்பு/ பராமரிப்புப் பணி | செலவு (ரூ.) |
|---|---|---|
| 1. | அமைச்சுக் கட்டிடத்தின் கூரை, சீலின் மற்றும் பிற பழுதுபார்ப்புகள் | 19,294,261.31 |
| 2. | கட்டிடத்திற்கும் தளபாடங்களுக்கும் சாயம் பூசுதல் | 19,297.72 |
| 3. | மலசல கூடங்களைப் பழுதுபார்த்தல் | 28,478.60 |
| 4. | திரைச் சீலைகளைக் கழுவித் துப்பரவு செய்தல் | 4,850.00 |
| 5. | கழிவுகளைச் சேகரிக்கும் தாங்கிகளைத் துப்பரவு செய்தலும், கழிவுகளைக் கொண்டு செல்லும் வாகனங்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளலும் | 72,173.12 |
| 6. | அறைகளைப் பிரித்தல் | 4,828.65 |
| 7. | மின்தூக்கியைப் பழுதுபார்த்தலும், சேவையும் | 178,002.00 |

## 02. அமைச்சின் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

2014 நிதியாண்டில் திறைசேரி நிதி ஒதுக்கீடுகளின் கீழ் கீழ்க் காணும் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டதுடன், இவ் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் வருடத்தில் மீண்டும் திருத்தப்பட்டன. 2014.12.31 ஆம் திகதிக்கு 81% வீத நிதி முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அமைச்சு நிதி ஒதுக்கீடுகளின் கீழ் 2014 ஆம் வருடத்தில் அமுல் செய்யப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்:**

| தொடர் இல. | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்/ கருத்திட்டம் | நிதி ஒதுக்கீடு (ரூ. மி.) | திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூ. மி.) | செலவு (ரூ. மி.) | முன்னேற்ற வீதம் (%) |
|---|---|---|---|---|---|
| 01. | உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 420.0 | 281.85 | 281.80 | 100% |
| 02. | சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 270.0 | 197.17 | 197.16 | 100% |
| 03. | விவசாயப் பயிர் உற்பத்தி விளைச்சல் முன்னறிவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 5.0 | 2.70 | 2.70 | 100% |
| 04. | பெரிய வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் | 30.0 | 15.50 | 15.50 | 100% |
| 05. | தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் கண்காட்சியும் | 50.0 | 32.90 | 29.70 | 66% |
| 06. | அரிசி ஏற்றுமதி வலயங்களை நிறுவும் நிகழ்ச்சித் திட்டம் | 75.0 | 39.00 | 39.00 | 100% |
| | **கூட்டுமொத்தம்** | 850.0 | 569.12 | 565.86 | 99% |

**2014** இல் அமுல் செய்யப்பட்ட சகல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமும் நாட்டின் விவசாயத்துறையின் அபிவிருத்திக்கு நேரடிப் பங்களிப்புச் செய்யப்பட்டது. இதன் போது அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் அடையப் பெற்ற பௌதீக முன்னேற்றம் வருமாறு:

### 2.1. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

#### 2.1.1. உப உணவுப் பயிர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்

| | |
|---|---|
| **நிதி ஒதுக்கீடு : ரூ. மி.** 300.0 | **நிதி முன்னேற்றம் : ரூ. மி.** 130.579 |

2014 திசெம்பர் மாதம் பொதுத் திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 72.0 மில்லியன் வரை குறைக்கப்பட்டது.

உப உணவுப் பயிர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கம் யாதெனில், 2016 ஆம் வருடமாகும் போது இலங்கையை உப உணவுப் பயிர் உற்பத்தியில் தன்னிறைவடைந்த நாடாக மாற்றயமைப்பதாகும்.

சோயா, உளுந்து, பயறு, மிளகாய், பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம், நிலக்கடலை, குரக்கன், எள்ளு முதலான பயிர்கள் பிரதானமாக உப உணவுப் பயிர்களாகக் கருதப்படுகின்றது. இந் நிகழ்ச்சித் திட்டம் 2014 ஆம் வருடத்தில் பிரதானமாக விவசாயத் திணைக்களத்திற்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமும், தெரிவு செய்யப்பட்ட ஒருசில மாவட்டங்களின் விவசாயப் பணிப்பாளர்கள் மூலமும் அமுல் செய்யப்பட்டது. இதன் கீழ் 4,178.1 ஹெக்டயாரில் மிளகாய், 402.23 ஹெக்டயாரில் பயறு, 403.7 ஹெக்டயாரில் பெரிய வெங்காயம், 40 ஹெக்டயாரில் பொப்கோன், சோளம் முதலான பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன. இவற்றிற்கு மேலதிகமாக கவுப்பி, நிலக்கடலை, எள்ளு முதலான பயிர்களும் சிறியளவில் செய்கை பண்ணப்பட்டன. விவசாயத் திணைக்களத்தினால் அமுல் செய்யப்பட்ட தேசிய மிளகாய்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டமானது, மிளகாய்ச் செய்கை முழு நிலப்பரப்பில் 3,710 ஹெக்டயாருக்கு உரிமை கோருகின்றது. இதற்கு மேலதிகமாக, இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு மில்லியன் பயிர்ச் செய்கை உறைகளில் மிளகாய்ச் செய்கையை மேற்கொள்ளும் திட்டமும் தேசிய மிளகாய்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் அத்தியவசிய உணவுப் பொருளாக விளங்கும் மிளகாய்க்கான கேள்வியில் குறிப்பிடத்தக்க அளவை வழங்குவதற்கு இந்த மிளகாய்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் பங்களிப்புச் செய்துள்ளது. இதற்கு மேலதிகமாக உப உணவுப் பயிர் விதைகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக அரசாங்க விவசாயப் பண்ணைகளில் விதைக் களஞ்சிசாலை வசதிகளை மேம்படுத்தல், நீர்வழங்கல் முறைமையை மேம்படுத்தல், மனிதநேய விவசாய உபசரணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேலதிக விதைகளையும், விவசாய உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்தல், விவசாயப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாங்க விவசாயப் பண்ணைகளிலுள்ள உபகரணங்களைப் பழுதுபார்த்தலும், விவசாயக் கிணறுகளை அமைத்தலும், உப உணவுப் பயிர் சார்ந்த உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் உபகரணங்களைக் கொள்வனவு செய்தலும் அவ் உபகரணங்களைப் பாவிப்பதை ஊக்குவித்தலும் முதலான பணிகள் விவசாயத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, அநுராதபுரம், மாத்தளை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, மாத்தறை, புத்தளம், குருணாகல், களுத்துறை ஆகிய மாவட்டங்களில் மாவட்டச் செயலகங்கள் ஊடாக நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டன.

#### 2.1.2. <u>வணிக விவசாயப் பண்ணை நிகழ்ச்சித் திட்டம்</u>

| | |
|---|---|
| **நிதி ஒதுக்கீடு : ரூ. மி. 60.0** | **நிதி முன்னேற்றம் : ரூ. மி. 51.305** |

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வர்த்தக நோக்கில் வணிக மட்டத்தில் விவசாயச் செய்கையில் ஈடுபடும் 500 விவசாயிகளுக்கு 50% வீத விவசாயிகளின் பங்களிப்புடன் அவர்களுக்குத் தேவையான பயன்பாட்டுப் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டது.

இதற்கமைய எல்லா மாவட்டங்களிலிருந்தும் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கான வெளிக்களச் சுற்றுலாக்களையும், பயிற்சி நிகழ்ச்சிகளையும் திட்டமிடுவதற்காகவும், விவசாய பயன்பாட்டுப் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் மாவட்ட விவசாயப் பணிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இனங் காணப்பட்ட வணிக விவசாயிகளுள் 264 விவசாயிகளுக்கு பயன்பாட்டுப் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக ரூ. 51.305 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ், கை உழவு இயந்திரம் 01, தெளி கருவி 01, நீர் இறைக்கும் பம்புகள் 05, கொங்கிறீட் தூண்கள் 524, குளாய்க் கிணறு 01, காளாண் வீடுகள் 17, பாதுகாப்பு வீடுகள் 47, நீர்வழங்கல் முறைமைகள் 10, பீடைநாசினி தெளி கருவி 01, சேதனப் பசளை உற்பத்தி செய்யும் கட்டிடம் 01, மண்வெட்டிகள் 05, எள்ளு விதை 05 கி.கி., பிளாஸ்ரிக் கூடைகள் 30, அண்ணாசிச் செடிகள் 63,000, தேனீ வளர்ப்புப் பெட்டிகள் 06, தேனீ வளர்ப்பு பெரல்கள் 30 என்பவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.



பாதுகாக்கப்பட்ட விவசாயச் செய்கை
வீட்டினுள் கெக்கிரிச் செய்கை.
திரு. ஜானக சிறிமான்ன,
இல. 41/6, ஹொரணை வீதி, பாதுக்கை.



பாதுகாக்கப்பட்ட விவசாயச் செய்கை
வீட்டினுள் ஓர்கிட் மலர்ச் செய்கை
செல்வி ரசிகா தில்ருக்ஷி,
இல. 92, மாக்கும்புற, பன்னிப்பிட்டிய.

2.1.3. **<u>இளைஞர் விவசாயத் தொழில் முயற்சிகள் நிகழ்ச்சித் திட்டம்</u>**

| | |
|---|---|
| **நிதி ஒதுக்கீடு : ரூ. மி. 60.0** | **நிதி முன்னேற்றம் : ரூ. மி. 43.55** |





விவசாய நடவடிக்கைகள் தொடர்பில் ஆர்வமுள்ள இளைஞர் சமூகத்தை விவசாயத்துறையின் பக்கம் ஈர்த்தெடுக்கும் நோக்குடன் 2013 ஆம் வருடத்திலிருந்து அமுல் செய்யப்படுகின்ற இளைஞர் விவசாயத் தொழில் முயற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக தீவின் 25 மாவட்டங்களிலிருந்தும் 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட 1,000 இளைஞர், யுவதிகளைத் தேர்ந்தெடுத்து, ஐந்து வருடங்கள் முழுவதும் அமுல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு, அரச துறையிலும், தனியார் துறையிலும் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற துறைகளை ஆய்வு செய்யும் பணிகளும், விவசாயத்துறை சார்ந்த அறிவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் வதிவிட தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சியொன்று வீதம் நடத்தும் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கமைய இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2014 ஆம் வருடத்திற்கு ரூ. 60.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1,000 இளைஞர் யுவதிகளுக்குப் பயிற்சியளிக்க இலக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், 2014.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம் 994 பயிற்சியாளர்கள் ஆகும். இதற்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 43.55 மில்லியனாகும்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுடன் கமத்தொழில் அமைச்சு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிற்கு வந்ததன் பின்னர், அவர்களுக்கு 50% வீத நிதிப் பங்களிப்பில் மிளகாய் விதை, அண்ணாசி, பப்பாசிச் செடிகளும், விதையும், விவசாய உபகரணங்கள், நடுகைப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டன. இதற்கமைய 2014 ஆம் வருடத்தில் பல மாவட்டங்களில் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு பாதுகாப்பு வீடுகள் 12, வளை வீடுகள் 04, காளாண் வீடுகள் 27, மாட்டு மடுவங்கள் 80, மாட்டுத் தொழுவம் 01, நீர் இறைக்கும் இயந்திரங்கள் 19, குளாய் நீர் முறைமை, விவசாயக் கிணறுகளை அமைத்தல், நடுகைப் பொருட்களை வழங்குதல் முதலான பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்ந்தும் இணைந்து கொண்டிருக்கும் விவசாயத் தொழில் முயற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் அதே வேளை, எதிர்வரும் காலங்களில் வணிக விவசாயப் பண்ணை நிகழ்ச்சித் திட்டத்திற்கு அவர்களை இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

#### 2.1.4. மனிதநேய விவசாய உபசரணை நிகழ்ச்சித் திட்டம் - 1,300 குடும்பங்கள்

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் மீண்டும் அம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன், அவர்களை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் வகையில் **“மனிதநேய விவசாய உபசரணை”** கருத்திட்டம், இனங் காணப்பட்ட 1,300 விவசாயக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு இலங்கை ஹதபிம அதிகார சபையினால் அமுல் செய்யப்பட்டது.

**மனிதநேய விவசாய உபசரணை - 1,000 குடும்பங்கள்**

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி.** 4.0 | நிதி முன்னேற்றம் : **ரூ. மி.** 3.525 |

### பௌதீக முன்னேற்றம்:

வவுனியா தெற்குப் பிரதேசத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட விவசாயச் சமூகங்களுக்காக 05 ஆரம்ப தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட 1,000 குடும்பங்களுக்கு 1,000 விவசாய உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டதுடன், 1,000 ஏக்கரில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் 1,198 கி.கி. பயறு விதை, 1,250 கி.கி. கவுப்பி விதை, 100 கி.கி. மிளகாய் விதை, 1,000 கி.கி. நிலக்கடலை விதை என்பன விநியோகிக்கப்பட்டன.

### மனிதநேய விவசாய உபசரணை - 300 குடும்பங்கள்

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி.** 1.251 | நிதி முன்னேற்றம் : **ரூ. மி.** 0.974 |

### பௌதீக முன்னேற்றம்:

வவுனியா தெற்குப் பிரதேசத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட விவசாயச் சமூகங்களுக்காக 02 ஆரம்ப தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு 300 விவசாய உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டதுடன், 300 ஏக்கரில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் 600 கி.கி. பயறு விதை, 524 கி.கி. கவுப்பி விதை, 15 கி.கி. மிளகாய் விதை என்பன விநியோகிக்கப்பட்டன.

### 2.1.5. <u>தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்</u>

* **போசாக்குப் பொதி கருத்திட்டம்**

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி. 67.575** | நிதி முன்னேற்றம் : **ரூ. மி. 39.279** |

**பௌதீக முன்னேற்றம்:**

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கேகாளை மாவட்டத்தில் 24,436 போசாக்குப் பொதிகளும், மொனறாகலை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் முறையே 21,009, 33,288 போசாக்குப் பொதிகளும் என மொத்தம் 78,733 போசாக்குப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

* **உள்ளூர் உணவு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்**

உள்ளூர் உணவுப் பாவனையை ஊக்குவிக்கும் நோக்குடன் மாவட்ட மட்டத்திலும், கிராம மட்டத்திலும் மக்களைத் தெளிவூட்டும் செயன்முறைச் செயலமர்வுகள் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டன.

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி. 6.21** | நிதி முன்னேற்றம் : **ரூ. மி. 5.227** |

**பௌதீக முன்னேற்றம்:**

கிளிநொச்சி, மொனறாகலை, பொலநறுவை மாவட்டங்களில் கிராம மட்டத்தில் 105 நிகழ்ச்சிகளும், மாவட்ட மட்டத்தில் 31 நிகழ்ச்சிகளும் அமுல் செய்யப்பட்டன.

## விவசாயப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

நிதி ஒதுக்கீடு - ரூ. 6.21 மில்லியன்  நிதி முன்னேற்றம் - ரூ. 3.00 மில்லியன்

| விவசாயப் பண்ணை | நெற் செய்கை | மரக்கறிச் செய்கை | உப உணவுப் பயிர்ச் செய்கை | விவசாயப் பண்ணை உபகரணங்கள் பழுது பார்ப்பு | விவசாயக் கிணறுகளை அமைத்தல் | பழைய கட்டிடங்களைப் பழுதுபார்த்தல் | மின்சார வேலி அமைத்தல் | பயிர்ச் செய்கை பராமரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| தனமல்வில விவசாயப் பண்ணை | 4.5 ஏக்கரில் சுவந்தில் விதை நெல் தூவப்பட்டுள்ளது. | 100 முருக்கைச் செடிகள் செய்கை பண்ணப்பட்டுள்ளது.<br><br>வட்டக்காய் ¼ ஏக்கரிலும், பயற்றம் ¼ ஏக்கரிலும் செய்கை பண்ணப்பட்டுள்ளது.<br><br>கத்தரி நாற்றுமேடையில் தூவப்பட்டுள்ளது | 01 ஏக்கரில் சோளம் செய்கை பண்ணப்பட்டுள்ளது. | உழவு இயந்திரம் 01, கலப்பை 01 என்பன பழுதுபார்க்கப்பட்டன.<br><br>உழவு இயந்திரத்தின் ஹைட்ரொலிக் முறைமை புதிதாக பொருத்தப்பட்டது.<br><br>மண்வெட்டி, கத்தி, டிராக்டர் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | 01 | 01 | | மா மரங்கள் 60, தென்னை மரங்கள் 50 நடப்பட்டன. 01 ஏக்கரில் வாழை, தோடை என்பன செய்கை பண்ணப்பட்டன |
| புத்தலை விவசாயப் பண்ணை | | கத்தரி (¼ ஏக்கருக்கு 5 கி.கி. விளைச்சல்), போஞ்சி (¼ ஏக்கருக்கு 6 கி.கி. விளைச்சல்), மிளகாய், தக்காளி, கத்தரி, பயற்றம், வட்டக்காய், பாகற்காய் என்பன 01 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டுள்ளது. | 3 1/2 ஏக்கரில் சோளம் செய்கை பண்ணப்பட்டுள்ளது. | டிராக்டரும், பெட்டியும் பழுது பார்க்கப்பட்டன, புல் வெட்டும் இயந்திரம் 01, மண்வெட்டி, கத்தி என்பன கொள்வனவு செய்யப்பட்டன. | 02 | | 1 கி.மீ. நீளமான வேலி அமைக்கப்பட்டது. | |

## 2.2. சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம்

| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி.** 270.0 | நிதி முன்னேற்றம் : **ரூ. மி.** 197.17 |
|---|---|

எமது நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இரசாயன உரத்தில் சுமார் 95% வீதம் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதுடன், உள்நாட்டில் உரமாக உற்பத்தி செய்யப்படுவது எப்பாவளை ரொக் பொஸ்பேற் மற்றும் மக்னீசியம் போசாக்குப் பதார்த்தத்தைப் பெற்றுத் தருகின்ற டொலமைற் மட்டுமே. இரசாயன உர இறக்குமதிக்காக வருடாந்தம் பெருந் தொகை அந்நியச் செலாவணி செலவு செய்யப்படுவதுடன், நாளுக்கு நாள் உலக சந்தையில் இரசாயன உரத்தின் விலையும் கூடிக் கொண்டே செல்கின்றது. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு இந் நிலவரங்களுக்குத் தாக்குப் பிடிப்பதென்பது சிரமமான காரியமாகும்.

தீவின் பெரும்பாலான பிரதேசங்களில் பயிர்ச் செய்கை நிலங்களின் வளம் குன்றியிருப்பதாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலமும், பகுப்பாய்வுகள் மூலமும் தெரிய வந்துள்ளன. மண்ணின் ஒட்டுமொத்த வளத்தையும் பேணிப் பாதுகாப்பதற்கு சேதனப் பசளை இட வேண்டியது கட்டாயமாகும். அதே போன்று சேதனப் பசளை இடுவதன் மூலம் பயிர்ச் செய்கைகளுக்கு இட வேண்டிய இரசாயன உரத்தின் அளவைக் குறைத்துக் கொள்ள முடியுமென, இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் பிரபல்யப்படுத்துவது தேசிய தேவையாக உள்ளதென்பதை கமத்தொழில் அமைச்சு இனங் கண்டிருப்பதுடன், அதற்கமைய, 2008 ஆம் வருடம் தொடக்கம் சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிப்பதற்காக தீவு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த வருடங்களைப் போன்றே 2014 ஆம் வருடத்திலும் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தீவின் எல்லா மாவட்டங்களிலும் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. கிராமிய மட்டத்தில் சேதனப் பசளையைப் பயன்படுத்தி நெல், மரக்கறி, பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு என 4,894 மாதிரிச் செய்கைகள் நிறுவப்பட்டுள்ளன. இம் மாதிரிச் செய்கைகளுக்கு 3,092 மெற்றிக் தொன் சேதனப் பசளை இடப்பட்டதுடன், சேதனப் பசளையைப் பயன்படுத்தி 465 ஏக்கரில் பயறு செய்கை பண்ணப்பட்டது.

2014 ஆம் வருடத்தில் மாவட்ட மட்டத்திலும், சேதனப் பசளை கருத்திட்டத்தின் முன்னோடி நிலையமான மாக்கந்துற பிரதேச விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தின் மூலமும் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் என 25,752 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதுடன், சேதனப் பசளை உற்பத்தி, பாவனை தொடர்பில் தெளிவூட்டும் வகையில் 154,070 துண்டுப் பிரசுரப் பிரதிகள் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டன.

இக் கருத்திட்டத்தின் பங்களிப்புடன் 2014 ஆம் வருடத்தில் மாக்கந்துற பிரதேச விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், இலங்கை ஹதபிம அதிகார சபை மற்றும் மாவட்ட மட்டத்தில் 92,919 மெற்றிக் தொன் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



பொலநறுவை, மகாவலி 'பி' வலயத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சியொன்றின் போது சேதனப் பசளை உற்பத்தி செய்யப்படும் முறையை விளக்கும் நிகழ்வு

1 கி.கி.  சேதனப் பசளையின் விலை ரூ. 7.00 எனக் கொள்ளும் போது, உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளையின் பணப் பெறுமதி சுமார் ரூ. 650.0 மில்லியனாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட மொத்த நிதியிலும் பார்க்க உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளையின் பணப் பெறுமதி அதிகமாக இருப்பது இங்கு முக்கியமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இதற்கு மேலதிகமாக இக் கருத்திட்டத்தின் கீழ் பல்வேறு பிற செயற்பாடுகளும் அமுல் செய்யப்பட்டுள்ளன. மாக்கந்துற பிரதேச விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தின் மூலம் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் 5 கி.கி. எடைகொண்ட 16,722 பண்படுத்திய உரப் பொதிகள் விவசாயிகளிடத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், சேதனப் பசளைப் பாவனையை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் 4 கண்காட்சிகளும் நடாத்தப்பட்டன. சேதனப் பசளை உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு மூலப் பொருட்கள், மண், சேதனப் பசளை மாதிரிகள் என்றவாறு 2,329 மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கு இலக்கு வைக்கப்பட்டு, அந்த இலக்கு அடையப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவற்றில் அடங்கியுள்ள போசனைப் பதார்த்தங்கள் மற்றும் பார உலோகங்கள் என்பன தொடர்பிலும் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்சொன்ன செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் பிரபல்யப்படுத்தும் வகையில்  30 நொடிகளைக் கொண்ட 06 குறும் விளம்பரங்கள் தயாரிக்கப்பட்டு 50 நாட்கள் விளம்பரப்படுத்தல், 15 வினாடிகள் வீதம் கொண்ட 04 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்புச் செய்தல், 15 நொடிகளைக் கொண்ட 420 வானொலி குறுஞ் செய்திகளை ஒலிபரப்புப் செய்தல் என்றவாறு பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தீவு முழுவதும் உட்படுமாறு செய்கை பண்ணாது கைவிடப்பட்ட 850 ஏக்கர் வயல் காணிகளை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக செய்கை பண்ணுவதற்கு இலக்கு வைக்கப்பட்டு, 894 ஏக்கர் வயல் காணிகள் செய்கை பண்ணப்பட்டு இவ் இலக்கு அடையப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று 1,540 கி.கி. இலை உர விதை உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.



மாக்கந்துற முன்னோடி நிலையத்தில் அமைக்கப்பட்ட விரிவுரை மண்டபம்

மேற்சொன்ன செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடி நிலையமாகச் செயற்படும் மாக்கந்துற பிரதேச விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திற்காக பயிற்சி நடவடிக்கைகளுக்கென கட்டிடமொன்றை அமைப்பதற்கு 2012 மே மாதம் 10 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்சமயம் இக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் முற்றுப் பெற்றுள்ளது.

## 2.3. விவசாயப் பயிர் உற்பத்தி விளைச்சல் முன்னறிவிப்பு நிகழ்ச்சித் திட்டம்

| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி.** 5.0 | நிதி முன்னேற்றம் : **ரூ. மி.** 2.70 |
|---|---|

**குறிக்கோள்கள்**

விவசாய உற்பத்திகள் அதிக அளவில் சந்தைக்கு வரும் காலங்களில் இறக்குமதியைக் கட்டுப்படுத்தி, அவ் உற்பத்திகளுக்கு நியாயமான விலையொன்றைப் பெற்றுக் கொடுத்தல், உள்ளூர் உற்பத்திகள் பற்றாக்குறையாகக் காணப்படும் காலங்களில் நுகர்வோருக்கு நியாய விலைக்கு உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு இறக்குமதி வரிகளில் திருத்தங்களைச் செய்தல், சந்தையை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கைத் திட்டமொன்றையும், பயிர்ச் செய்கை முறைமையொன்றையும் தோற்றுவித்து சந்தைப்படுத்தல் பிரச்சினைகளைக் குறைத்தல், தேசிய தேவைகளை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த இலக்குகளின் அடிப்படையில் உற்பத்திகளை மேறகொள்வதற்கு விவசாயிகளைத் தூண்டுவதினூடாக மிகை உற்பத்தியையும், வீண் விரயத்தையும் கட்டுப்படுத்தல், உற்பத்தியாளர்களுக்கு தமது உற்பத்திகளுக்கு நல்ல விலையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும், நுகர்வோருக்கு அவ் உற்பத்திகள் தொடர்பாகவும், சந்தை நிலவரங்கள் தொடர்பாகவும் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதினூடாக உற்பத்தியாளர், வியாபாரி, நுகர்வோரைத் தெளிவூட்டல், பயிர் உற்பத்தி விளைச்சல் முன்னறிவிப்பினூடாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்ற உயர் நம்பகத் தன்மையையும், மிகச் சரியான தன்மையையும் கொண்ட தகவல்களை பிரதேச திட்டமிடலுக்கும், தேசிய கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதற்கும் முன்வைத்தல் என்பன இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

**நிதி முன்னேற்றம்:**

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக **2014** ஆம் வருடத்திற்கு ரூ. **5.0** மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், **2014** ஆம் வருட இறுதிக் காலாண்டில் இத் தொகை ரூ. **2.35** மில்லியனாகத் திருத்தப்பட்டது. இதற்கமைய திசெம்பர் மாதம் **31** ஆம் திகதியாகும் போது ரூ. **2.70** மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது.

**பௌதீக முன்னேற்றம்:**

**2014 ஆம் வருடத்தில் கீழ்க் காணும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன.**

- 2013/2014 பெரும் போகத்தின் ஜனவரி மாத இறுதிக்கு விவசாயப் பயிர் உற்பத்தி முன்னேற்றமும், முன்னறிவிப்பும்.
- 2014 மே மாதம் வரை விவசாயப் பயிர் உற்பத்தி நிலவரங்கள்.
- 2014 சிறு போகத்தில் பெரிய வெங்காயச் செய்கை முன்னேற்றமும், உற்பத்தி விளைச்சல் முன்னறிவிப்பும்.
- 2014 சிறு போகத்தில் நெற் செய்கையில் காணப்படுகின்ற முன்னேற்றமும், உற்பத்தி விளைச்சல் முன்னறிவிப்பும். 2014 ஆம் வருடத்தில் நெல், அரிசி என்பன பரவலாகக் காணப்படுவது தொடர்பான அறிக்கை.
- 2014 யூன் வரை விவசாயப் பயிர் உற்பத்தி முன்னேற்றம்.
- விவசாயப் பயிர் உற்பத்தி முன்னேற்றமும், பயிர் உற்பத்தி விளைச்சல் முன்னறிவிப்பும் - 2014 சிறு போகம், இலங்கை.

அரிசி, பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு இறக்குமதியின் போது இறக்குமதி வரியில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு மேற்சொன்ன அறிக்கைகள் உபயோகப்படுத்திக் கொள்ளப்பட்டன. இத் திருத்தங்கள் மூலம், விவசாய உற்பத்திகள் அதிக அளவில் சந்தைக்கு வரும் காலங்களில் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கும், இதன் மூலம் புதிய உற்பத்திகளை நியாய விலைக்குப் பெற்றுக் கொள்வதற்கும் முடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

**படிவங்களையும் ஆவணங்களையும் விநியோகித்தலும், உத்தியோகத்தர்களைத் தெளிவூட்டலும்**

2014 சிறு போகத்திற்கும் 2014/2015 பெரும் போகத்திற்கும் உரியதாக ஆவணங்கள், படிவங்கள், பொழிப்பு அறிக்கைகள் என்பன அச்சிடப்பட்டு தீவின் 18 மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

ஆரம்ப தரவு வழங்குனர்களாகச் செயற்படும் விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களின் மேற்பார்வை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளரின் தலைமையில் நடைபெறும் மாதாந்த மாவட்டக் கூட்டங்களின் போது தொடர்ந்தும் தெளிவூட்டப்பட்டனர். அத்துடன் 2014 ஆம் வருடத்தில் 08 மாவட்டங்களில் இத் தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நிதி ஒதுக்கீடுகள் ஈடுபடுத்தப்படாத பிற நிகழ்ச்சித் திட்டங்கள் - 2014

**1. 2014 ஆம் வருடத்திற்கான பயிர் உற்பத்தித் திட்டத்தைத் தயாரித்தல்**

விவசாயத் திணைக்களத்தின் பயிரின நிபுணர்களின் இணக்கப்பாட்டுடன், இலங்கையில் உணவுத் தேவையை நிறைவு செய்வதற்குத் தேவையான விவசாயப் பயிர் உற்பத்தி இலக்குகள் அடங்கிய திட்டம் தயாரிக்கப்பட்டதுடன், இத் திட்டம் எல்லா அரச நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன.

**2. விவசாயத்துறை விடயம் சார்ந்த தரவுத் தளத்தைப் பேணிச் செல்லலும், தரவுகளைப் பெற்றுக் கொடுத்தலும்**

இத் தரவுத் தளத்தை இற்றைப்படுத்துவதற்காக, தொகை மதிப்பு, புள்ளி விபரத் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம், விவசாயத் திணைக்களம், வளி மண்டலவியல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன், இலங்கை மத்திய வங்கி, பொதுத் திறைசேரி உள்ளிட்ட பல்வேறு அரச நிறுவனங்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும், நபர்களுக்கும் இத் தரவுகள் வழங்கப்பட்டன.

**3. போக முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகளைத் தயாரித்தல்**

போக இறுதியில் அப் போகங்களின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை களத்திலிருந்து பெற்று, போக மீளாய்வு, 2013/2014 பெரும் போக அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

**4. இலக்குகளுக்குரிய முன்னேற்றத்தை மாதாந்தம் மீளாய்வு செய்தல்**

பிரதி விவசாயப் பணிப்பாளர்கள் ஊடாக மாதாந்த இலக்குகளுடன் தொடர்புடைய முன்னேற்றத்தைப் பெற்று, இவற்றின் முன்னேற்றம் தொடர்பாக மாதாந்தம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது.

## 2.4. பெரிய வெங்காய/ சிறிய வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

### 2.4.1. பெரிய வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

2010 ஆம் வருடத்தில் மாத்தளை மாவட்டத்தைப் பிரதானமாகக் கொண்டு இந் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அநுராதபுரம், பொலநறுவை, குருணாகல், பதுளை ஆகிய மாவட்டங்களுக்கும் இந் நிகழ்ச்சித் திட்டம் விஸ்தரிக்கப்பட்டு அமுல் செய்யப்படுகின்றது. 2014 ஆம் வருடத்தில் இந் நிகழ்ச்சித் திட்டம் அநுராதபுரம் (மாகாண மற்றும் மாகாணங்களுக்கிடையேயான ஆளுகைப் பிரதேசங்கள்), பதுளை (ஹசலக்க), பொலநறுவை, குருணாகல் ஆகிய மாவட்டங்களில் விவசாயத் திணைக்களத்தினதும், மாகாண விவசாயத் திணைக்களங்களினதும் ஒருங்கிணைப்பின் கீழ் அமுல் செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2014 ஆம் வருடத்திற்கு ரூ. 20.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், அநுராதபுரம் (மாகாண) ரூ. 8.0 மில்லியன், அநுராதபுரம் (மாகாணங்களுக்கிடையேயான ஆளுகைப் பிரதேசங்கள்) ரூ. 5.5 மில்லியன், பொலநறுவை ரூ. 3.0 மில்லியன், பதுளை (ஹசலக்க) ரூ. 0.5 மில்லியன் என்றவாறு இந் நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்யும் வகையில் 24,261 கி.கி. தாய்ப் பூண்டுக் கிழங்கு கொள்வனவு செய்யப்பட்டதுடன், விவசாயிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட தாய்ப் பூண்டுக் கிழங்கு உட்பட 205,139 கி.கி. தாய்ப் பூண்டுக் கிழங்கை ரஹங்கல மற்றும் சீதாஎளிய பிரதேசத்திற்குக் கொண்டு சென்று, பதப்படுத்தலுக்கு உட்படுத்தி மீண்டும் கொண்டு வந்து விவசாயிகளிடத்தில் விநியோகிக்கப்பட்டது. பெரிய வெங்காயச் செய்கைக்குத் தேவையான பயன்பாட்டுப் பொருட்களை வழங்குதல், வெங்காயப் பூக்களை மழையிலிருந்தும், பனியிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்காக பொலித்தீன் மூடும் உறைகளைப் பெற்றுக் கொடுத்தல், பூக்கள் உடைந்து விழாது தடுக்கும் வகையில் மீன்வளைகளைப் பெற்றுக் கொடுத்தல், பொதி செய்யும் கூடைகளைப் பெற்றுக் கொடுத்தல், சிறு போக விதை உற்பத்திக்காக விளைச்சலைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு றாக்கைகளைப் பெற்றுக் கொடுத்தல், பெரிய வெங்காய விதையின் தரம் பாதுகாக்கப்படுமாறு விதைப் பொதியொன்றைப் பெற்றுக் கொடுத்தல் முதலான பணிகள் விவசாயிகளின் 50% வீத பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

2014 ஆம் வருட இறுதியாகும் போது பெரிய வெங்காயச் செய்கை களத்தில் நிறுவப்பட்டதுடன், அநுராதபுரம், பொலநறுவை, ஹசலக்க ஆகிய பிரதேசங்கள் சார்ந்ததாக விளைச்சல் அறுவடை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2015 ஆம் வருடத்தின் மார்ச் மாதமாகும் போது எஞ்சிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதே போன்று கடந்த வருடத்தின் சிறு போகத்தில் நாடு முழுவதும் நிலவிய வரட்சிக் காலநிலை காரணமாக, பெரிய வெங்காய தாய்ப் பூண்டுக் கிழங்கை பதப்படுத்தும் பணிகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் இடம்பெறவில்லை என்பதுடன், களத்தில் பயிர் நடப்படும் காலப்பகுதியில் நிலவிய கடும் மழை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலைப் பெற்றுக் கொள்ளவும் முடியமால் போனது. தாய்ப் பூண்டுக் கிழங்கை பதப்படுத்தும் பணிகளை தமது ஆளுகைப் பிரதேசத்திலேயே மேற்கொள்ளும் பொருட்டு புதிய குளிரூட்டி வசதிகளை செய்து கொடுக்கும் பணிகளை இவ் வருடத்தில் அமுல் செய்யப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் ரஹங்கல/ சீதாஎளிய பிரதேசத்திற்குக் கொண்டு சென்று பதப்படுத்துவதற்குச் செலவாகும் பணத்தை மீதப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கடந்த வருட இறுதியாகும் போது அநுராதபுரம் (மாகாண) ரூ. 7.107 மில்லியன், அநுராதபுரம் (மாகாணங்களுக்கிடையேயான ஆளுகைப் பிரதேசங்கள்) ரூ. 3.025 மில்லியன், பொலநறுவை ரூ. 0.545 மில்லியன், பதுளை (ஹசலக்க) ரூ. 0.136 மில்லியன் என்றவாறு நிதி ஒதுக்கீடு செலவு செய்யப்பட்டுள்ளது.

### 2.4.2. சிறிய வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

சிறிய வெங்காயச் செய்கை பண்ணப்படுகின்ற நிலப்பரப்பைக் கூட்டி உள்ளூர் சிறிய வெங்காய உற்பத்தியை அதிகரிப்பதினூடாக, உள்ளூர் சிறிய வெங்காயத் தேவையில் தன்னிறைவு மட்டத்தை அடைவதற்கு இக் கருத்திட்டத்தை அமுல் செய்வதினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. சிறிய வெங்காயச் செய்கைக்காக தாய்ப் பூண்டுக் கிழங்கைப் பயன்படுத்தும் போது, 1 ஹெக்டயாரில் சிறிய வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு சுமார் 1.2 - 1.8 மெற்றிக் தொன் தாய்ப் பூண்டுக் கிழங்கு தேவைப்படுகின்றது. உள்ளூர் சிறிய வெங்காயத் தேவையில் தன்னிறைவு மட்டத்தை அடைவதற்கு எதிர்பார்க்கபடுகின்ற சிறிய வெங்காய உற்பத்தி சுமார் 100,000 மெற்றிக் தொன்னாக இருப்பதுடன், இதற்காக சுமார் 15,000 மெற்றிக் தொன் தாய்ப் பூண்டுக் கிழங்கு தேவையாகும். உண்மையான விதைப் பாவனையின் பக்கம் ஈடுபடுவதினூடாக, இவ்வாறு விதையாகப் பயன்படுத்துகின்ற தாய்ப் பூண்டுக் கிழங்கையும் நுகர்வுக்காகப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். நடுகைப் பொருளாக உண்மையான விதையைப் பயன்படுத்தும் போது செலவாகும் செலவானது, தாய்ப் பூண்டு கிழங்கைப் பயன்படுத்துவதிலும் பார்க்க மிகக் குறைவானது. எனவே, 2016 இல் சிறிய வெங்காயத் தேவையில் தன்னிறைவு மட்டத்தை அடையும் இலக்கு வைக்கப்பட்ட நோக்கின் அடிப்படையில், விசேட கருத்திட்டமொன்றாக இந் நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்தும் அமுல் செய்வது முக்கியமாகும்.

இக் கருத்திட்டத்தை அமுல் செய்யும் பொருட்டு கடந்த வருடத்தில் 08 மாவட்டங்களில் ஊடக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூ. 10.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கமைய, இரத்தினபுரி - ரூ. 2.0 மில்லியன், யாழ்ப்பாணம் - ரூ. 1.5 மில்லியன், திருகோணமலை, புத்தளம், கிளிநொச்சி, அம்பாறை, ஹம்பாந்தோட்டை (மாகாண), ஹம்பாந்தோட்டை (மாகாணங்களுக்கிடையிலான) ஆளுகைப் பிரதேசங்களுக்கு ரூ. 10.0 மில்லியன் வீதம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இக் கருத்திட்டத்திற்காக 25,126 கி.கி. தாய்ப் பூண்டுக் கிழங்கு கொள்வனவு செய்யப்பட்டு, இத் தாய்ப் பூண்டுக் கிழங்கு பதப்படுத்தலுக்காக ரஹங்கல, சீதாஎளிய பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு பதப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு, அவை மீண்டும் விவசாயிகளிடத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

சிறிய வெங்காயச் செய்கைக்குத் தேவையான பயன்பாட்டுப் பொருட்களையும், பொதி செய்தல் கூடைகளையும் வழங்குதல், நாற்றுமேடைகளை மழையிலிருந்து பாதுகாப்பதற்காக மூடும் பொலித்தீன் உறைகளைப் பெற்றுக் கொடுத்தல், பூக்கள் உடைந்து விழாது தடுக்கும் வகையில் மீன்வளைகளைப் பெற்றுக் கொடுத்தல் முதலான நடவடிக்கைகள் விவசாயிகளின் 50% வீத பங்களிப்பில் மேற்கொள்ளப்பட்டது. திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்கள் சார்ந்ததாக தற்சமயம் சிறிய வெங்காய விதை விளைச்சல் அறுவடை செய்யப்பட்டு வருவதுடன், 2015 மார்ச் மாத இறுதியாகும் போது எஞ்சிய விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருட சிறு போகத்தில் தீவு முழுவதும் நிலவிய கடும் வரட்சி காரணமாக சிறிய வெங்காய தாய்ப் பூண்டுக் கிழங்கை பதப்படுத்தும் பணிகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் இடம்பெறவில்லையாதலால், இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள் சார்ந்ததாக உற்பத்தி மட்டம் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. மேலும், கிளிநொச்சி பிரதேசத்திற்கு ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக செய்கை பண்ணப்பட்ட பயிர்ச் செய்கைகளுக்கும் சேதம் ஏற்பட்டது.

2014 ஆம் வருட இறுதியாகும் போது, திருகோணமலை - ரூ. 0.892 மில்லியன், யாழ்ப்பாணம் - ரூ. 0.595 மில்லியன், கிளிநொச்சி - ரூ. 0.622 மில்லியன், அம்பாறை - ரூ. 0.98 மில்லியன், இரத்தினபுரி - 1.022 மில்லியன், ஹம்பாந்தோட்டை (மாகாண) - ரூ. 0.519 மில்லியன், ஹம்பாந்தோட்டை (மாகாணங்களுக்கிடையிலான) - ரூ. 0.426 மில்லியன் நிதியும், ஊடக பிரசார நடவடிக்கைகளுக்காக ரூ. 0.461 மில்லியன் நிதியும் செலவு செய்யப்பட்டது.

### 2.4.3. பொப்கோன் செய்கையைப் பிரபல்யப்படுத்துவதற்காக சோள இன வகையை மேம்படுத்தலுக்கும், அவை சார்ந்த தொழில்நுட்பங்களை விருத்தி செய்வதற்குமான நிகழ்ச்சித் திட்டம்

இந் நிகழ்ச்சித் திட்டம் 2014 ஆம் வருடத்தில் மகஇளுப்பள்ளமையில் அமைந்துள்ள களப் பயிர் ஆராய்சி, அபிவிருத்தி நிலையத்தினால் அமுல் செய்யப்பட்டது. இதற்காக ரூ. 1.612 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், ரூ. 0.542 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்தின் கீழ் விவசாயக் களங்களில் 800 கி.கி. விதை உற்பத்தி செய்யப்பட்டது. இவற்றை அடுத்து வரும் போகத்தில் விதையாகப் பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.5. அரிசி ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டம்

அரிசி ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டதிற்காக ரூ. 35.5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதன் கீழ் கீழ்க் காணும் கருத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

### 2.5.1. அரிசி ஏற்றுமதி வலயங்களை நிறுவும் கருத்திட்டம்

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி.** 25.0 | நிதி முன்னேற்றம் : **ரூ. மி.** 2.620 |

ஏற்றுமதித் தரத்திலான அரிசி உற்பத்தியை மேற்கொள்வதை இலக்காகக் கொண்டு, விவசாயத் திணைக்களமும், இலங்கை மகாவலி அதிகார சபையும் இணைந்து, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, பொலநறுவை, மகாவலி **B, C** ஆகிய அரிசி ஏற்றுமதி வலயங்களில் பச்சைப்பெருமாள், சுவந்தில், **BG**11/65 ஆகிய நெல்லினங்கள் 162 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டதுடன், இதன் கீழ் ஏற்றுமதித் தரத்திலான 660 மெற்றிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. மேலும், ஏற்றுமதித் தரத்திலான நெல் உற்பத்தியை விவசாய மக்களிடையே பிரபல்யப்படுத்தும் வகையில் 20 மாதிரிச் செய்கைகள் நிறுவப்பட்டன. அம்பாறை அரிசி ஏற்றுமதி வலயத்திலிருந்து வழங்கப்படுகின்ற அரிசி 50 மெற்றிக் தொன் வீதம் எம்பிலிப்பிட்டியில் அமைந்துள்ள சியரா கம்பனி நிறுவனத்தினால் மாதாந்தம் ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

### 2.5.2. பாரம்பரிய நெல்லினங்களின் தரத்தில் சிறந்த விதை நெல் உற்பத்தி

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி.** 3.738 | நிதி முன்னேற்றம் : **ரூ. மி.** 2.407 |

பாரம்பரிய நெல்லினங்களின் தரத்தில் சிறந்த விதை நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு 16 மாவட்டங்களில் 30 யாய மாதிரிச் செய்கைகள் நிறுவப்பட்டதுடன், இதன் கீழ், சுவந்தில், பச்சைப் பெருமாள் ஆகிய பாரம்பரிய நெல்லினங்களின் 8,500 புசல் தரத்தில் சிறந்த விதை நெல்லைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விவசாயிகளை இச் செய்கையில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கும் வகையில் விதை நெல்லை இடுவதற்காக கவர்ச்சிகரமான முறையில் தயாரிக்கப்பட்ட 1,000 பொலித்தீன் உறைகள் விவசாயிகளிடத்தில் விநியோகிக்கப்பட்டன.

### 2.5.3. கீழ் நாட்டு ஈர வலயத்தில் நெற் செய்கையின் உற்பத்தி விளைவுப் பெருக்கத்தைக் கூட்டும் கருத்திட்டம்

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி. 3.5** | நிதி முன்னேற்றம் : **ரூ. மி. 2.288** |

கீழ் நாட்டு ஈர வலயத்தில் நெல் விளைச்சலைக் கூட்டும் வகையில், மாத்தறை, காலி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாளை ஆகிய மாவட்டங்களில் பரஷூட் முறையைப் பயன்படுத்தியும், சின்க் சல்பேற் இட்டும் விளைச்சலை அதிகரிக்கும் 205 மாதிரிச் செய்கைகள் அமுல் செய்யப்பட்டன. மேலும், இக் கருத்திட்டத்தின் கீழ் 38,750 பரஷூட் தட்டுகள் பயனாளிகளிடத்தில் விநியோகிக்கப்பட்டன.

### 2.5.4. ஏற்றுமதியின் பொருட்டு தரத்தில் சிறந்த நெல்லினங்கள் சார்ந்த தொழில்நுட்பங்களையும், உள்ளூர் தரத்தையும் மேம்படுத்தல்

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2014 ஆம் வருடத்திற்கு ரூ. 25.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், ரூ. 16.6 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. பத்தலகொடையில் அமைந்துள்ள நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம், பிராந்திய மட்டத்தில் அமைந்துள்ள நெல் ஆராய்ச்சி நிலையங்கள் உட்படுமாறு இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படுகின்றது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் விருத்தி செய்யப்பட்ட தரத்தில் சிறந்த நெல்லினங்களை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஒரு கள ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டமொன்றாகையால், சில வருடங்கள் தொடர்ந்தும் அமுல் செய்யப்பட வேண்டிய கருத்திட்டமொன்றாகக் காணப்படுகின்றது. இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட நெல்லினங்கள், அவற்றின் பரம்பரை நெல்லினங்கள், சம்பிரதாய நெல்லினங்கள் என்பவற்றின் பண்புகளை (இயல்புகளை) ஒப்பீட்டுப் பார்த்தல், அரிசியின் தரத்தில் சூழல் காரணிகளினதும், முகாமைத்துவ முறைமைகளினதும் தாக்கங்கள், ஏற்றுமதிச் சந்தைக்குப் பொருத்தமான அரிசி வகைகளை உற்பத்தி செய்தல், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களை ஈடுபடுத்துதல் என்பன தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

### 2.5.5. வயல் காணிகளில் பொஸ்பேற் உரத்தை வினைத்திறன் மிக்கவாறு பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல்

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2014 ஆம் வருடத்திற்கு ரூ. 3.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1.86 மில்லியனாகும். இவ் ஆராய்ச்சித் திட்டம் பத்தலகொடை நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் அமுல் செய்யப்படுகின்றது. போகம் விட்டுப் போகமொன்றுள் பொஸ்பேற் உரத்தைப் பாவிப்பதிலுள்ள சாத்தியக் கூறுகள் தொடர்பில் பல்வேறு பிரதேசங்களும் உட்படுமாறு கள மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை ஒப்பீட்டளவில் பகுப்பாய்வு செய்வதற்கு இக் கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த வருடத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டம் 120 பயிர்ச் செய்கை மாதிரிகள் உட்படுமாறு முன்னெடுக்கப்பட்டதுடன், அடையப் பெற்ற பெறுபேறுகளின் பிரகாரம் தீர்வுகளுக்கு வருவதற்கு, தொடர்ந்தும் இவ் வெளிக்களப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

### 2.5.6. ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்ட அரிசி உற்பத்திகளின் தரத்தை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான இயந்திர முறைமையொன்றை இனங் காணும் நிகழ்ச்சித் திட்டம்

இக் கருத்திட்டம் மகஇளுப்பள்ளமையில் அமைந்துள்ள விவசாயப் பண்ணை இயந்திரோபகரண ஆராய்ச்சி நிலையத்தினால் அமுல் செய்யப்பட்டதுடன், இதற்காக 2014 ஆம் வருடத்திற்கு ரூ. 10.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. கருத்திட்டத்திற்கான செலவு ரூ. 8.77 மில்லியனாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நெற் பயிரை களத்தில் நிறுவுதல், விளைச்சலை அறுவடை செய்தல், பதப்படுத்தல் என்பவற்றிற்குத் தேவையான விவசாய இயந்திரோபகரணங்களை உற்பத்தி செய்து விவசாயிகளிடத்தில் விநியோகிக்கப்படுவதுடன், இவ் இயந்திரோபகரணங்களை களத்தில் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்கும், விவசாயிகளுக்கும் விளக்கமளிக்கும் பயிற்சிப் பாடநெறிகள் சில பிரதேசங்கள் உட்படுமாறு நடாத்தப்பட்டது.

### 2.5.7. கீழ்நாட்டு ஈர வலய வயல் காணிகளில் உற்பத்தி விளைவுப் பெருக்கத்தை அதிகரித்தல்


இக் கருத்திட்டத்திற்காக 2014 ஆம் வருடத்திற்கு ரூ. 1.5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1.122 மில்லியனாகும். இந் நிகழ்ச்சித் திட்டம் பத்தலகொடையில் அமைந்துள்ள நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் அமுல் செய்யப்படுவதுடன், இதன் கீழ் அடிப்படை விதை உற்பத்திக்குப் பொருத்தமான 12 வகையான நெல்லினங்கள் இனங் காணப்பட்டன. தற்சமயம் இந் நெல்லினங்கள் 12.5 ஏக்கர் பரப்புக் கொண்ட களத்தில் நடப்பட்டுள்ளது.

## 2.6. “தேசத்திற்கு மகுடம்” தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் கண்காட்சியும்

**“தேசத்திற்கு மகுடம்** - 2014” தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் கண்காட்சியும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கேகாளை, குருணாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்கள் உட்படுமாறு கமத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டதுடன், குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி வளவை மையமாகக் கொண்டு விவசாயக் கண்காட்சி நடாத்தப்பட்டது.

இவ் அனைத்துப் பணிகளையும் வெற்றிகரமாக அமுல் செய்வதற்காக கமத்தொழில் அமைச்சின் கீழுள்ள எல்லா நிறுவனங்களும் தமது பூரண பங்களிப்பைப் பெற்றுத் தந்ததுடன், இதற்காக 2013/2014 நிதியாண்டில் தேசத்திற்கு மகுடம் செலவினத் தலைப்பின் கீழ், அமைச்சு நேரடி நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அதற்கமைய அமைச்சின் கீழுள்ள அந்தந்த நிறுவனங்களினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் அவற்றின் முன்னேற்றங்களும் வருமாறு.



**2.6.1. <u>விவசாயத் திணைக்களம்</u>**

சுமார் 3 ஏக்கர் விசாலமான விவசாயக் கண்காட்சிப் பூமியின் எல்லா அபிவிருத்திப் பணிகளும், விவசாயத் திணைக்களத்தின் கற்புல, செவிப்புல நிலையத்தின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டதுடன், இதற்காக ரூ. 17.0 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டது.

இதற்காக திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களின் தனித்துவம் வெளிக் கொணரப்படுகின்ற கண்காட்சிக் கூடங்கள் மற்றும் நெல், உப உணவுப் பயிர், மரக்கறி, இலை மரக்கறி, கிழங்கு வகை, குறைப் பாவனை பழச் செய்கை மாதிரிகள், உள்ளூர் உணவு வகைகள், புதிய விவசாயத்துறை சார்ந்த அறிவு, சேதனப் பசளைப் பாவனை, நடுகைப் பொருள் ஊக்குவிப்பு என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

**இதற்கு மேலதிகமாக,**

i. விவசாயத் திணைக்களத்தின் கீழுள்ள பத்தகொடையில் அமைந்துள்ள நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் அமுல் செய்யப்பட்ட பரஷூட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நெற் செய்கையின் உற்பத்தியைக் கூட்டும் கருத்திட்டத்திற்காக ரூ. 0.5 மில்லியன் நிதி வழங்கப்பட்டதுடன், இத் தொழில்நுட்பத்தின் கீழ் 113 ஏக்கரில் நெற் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான பரஷூட் தட்டுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அத்துடன், விவசாயிகளுக்கான பயிற்சியும் அளிக்கப்பட்டது.

ii. மாக்கந்துறையில் அமைந்துள்ள பிரதேச விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திற்கும் ரூ. 0.88 மில்லியன் நிதி வழங்கப்பட்டதுடன், இதன் கீழ் விவசாயிகளுக்கு விநியோகிக்கும் நோக்குடன் 5 ஏக்கர் நிலப்பரப்பில் 15,000 முருசி அண்ணாசிச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

iii. ரூ. 0.275 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு, அநுராதபுரம் பிரதி விவசாயப் பணிப்பாளர் (மாகாணங்களுக்கிடையேயான) ஊடாக அமுல் செய்யப்பட்ட TOM EJC மாம்பழ வகையை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 500 மாம்பழச் செடிகள் கொள்வனவு செய்யப்பட்டு பயனாளிகளிடத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

iv. கேகாளை பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தினூடாக, மாவட்டத்தின் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மலர்ச் செய்கையாளர்களின் பாவனையின் பொருட்டு, இழைய வளர்ப்பு ஆய்வுகூடமொன்றை அமைப்பதற்கு ரூ. 2.4 மில்லியன் நிதி வழங்கப்பட்டதுடன், இதன் ஆரம்ப கட்டமாக இரசாயனப் பொருட்களையும், உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காக மட்டும் அந் நிதியிலிருந்து ரூ. 1.8 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டது.

**2.6.2. <u>இலங்கை ஹதபிம அதிகார சபை</u>**

உப உணவுப் பயிர்களை பரவலாக்கும் கருத்திட்டமும், கிராமிய விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் வலையமைப்புக் கருத்திட்டமும் இலங்கை ஹதபிம அதிகார சபையினால் குருணாகல் மாவட்டத்தில் அமுல் செய்யத் திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களாவதுடன், இக் கருத்திட்டங்களுக்காக முறையே ரூ. 1.236 மில்லியன், ரூ. 1.246 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது.

இவற்றுள் நிலத்தை நிர்ணயம் செய்து தீர்த்துக் கொள்வதற்கு முடியாமல் போனதின் காரணமாக, கிராமிய விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் வலையமைப்பு ஊக்குவிப்புக் கருத்திட்டம் அமுல்

செய்யப்படவில்லையென்பதுடன், உப உணவுப் பயிர் பரவலாக்கும் கருத்திட்டத்தின் கீழ் 1,000 ஏக்கரில் உப உணவுப் பயிர்களைச் செய்கை பண்ணுவதற்காக 2,500 கி.கி. பயறு விதையும், 50 கி.கி. மிளகாய் விதையும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. இதற்காக ரூ. 1.105 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டது.

**2.6.3. <u>தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை (இலங்கை பட்டினி ஒழிப்பு இயக்க சபை)</u>**

குருணாகல், கேகாளை, புத்தளம் ஆகிய மாவட்டங்கள் உட்படுமாறு அமுல் செய்யப்பட்ட உள்ளூர் உணவு நுகர்வினை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக தேசிய உணவு ஊக்குவிப்புச் சபைக்கு 2013 நிதி வருடத்திலிருந்து ரூ. 2.08 மில்லியன் நிதி வழங்கப்பட்டதுடன், இதன் கீழ் 6,500 பயனாளிகள் சார்பில் 121 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பபட்டன.

இதற்கு மேலதிகமாக, கேகாளை மாவட்டச் செயலாளரின் வேண்டுகோளுக்கு அமைய மேற்சொன்ன நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்யும் பொருட்டு 2014 நிதியாண்டிலிருந்து ரூ. 0.002 மில்லியன் நிதி வழங்கப்பட்டது.

**2.6.4. <u>அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம்</u>**

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்திற்கு ரூ. 1.124 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதில் ரூ. 0.907 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு குருணாகல், கேகாளை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி சார்ந்த உற்பத்தித் தொழில் முயற்சியாளர்ளைப் பிரபல்யப்படுத்தல், ரைஸ்கிரீம் உற்பத்தியைப் பிரபல்யப்படுத்தல், பழம் சார்ந்த உற்பத்திகளைப் பிரபல்யப்படுத்தல், மாதிரி அரிசி வகுத்தமைத்தல் குடும்பங்களை நிறுவுதல், விவசாயப் பயிர்களுக்கென விருத்தி செய்யப்பட்ட அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்தல் முதலான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்கள் தொடர்பான 36 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு 1,652 பயனாளிக்குப் பயிற்சி அளிக்கப்பட்டன. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

**2.6.5. <u>குருணாகல் மாவட்டச் செயலகத்திற்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்</u>**

பழச் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான நடுகைப் பொருட்களைப் பெற்றுக் கொடுக்கும் கருத்திட்டத்திற்காக குருணாகல் மாவட்டச் செயலகத்திற்கு ரூ. 4.44 மில்லியன் நிதி வழங்கப்பட்டதுடன், மாவட்டத்தின் 30 பிரதேச செயலாளர் பிரிவுகள் உட்படுமாறு அண்ணாசி - 95 ஏக்கர், ஒட்டுமுறை மாம்பழம் - 293 ஏக்கர், ஒட்டுமுறை தோடை - 27 ஏக்கர், ஒட்டுமுறை ரம்புட்டான் - 16 ஏக்கர், ஒட்டுமுறை மாதுளை - 39 ஏக்கர், எழுமிச்சை - 20 ஏக்கர் என்றவாறு பழச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

**2.6.6. <u>புத்தளம் மாவட்டச் செயலகத்திற்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்</u>**

நடமாடும் சேவைகளுக்குரியதாக விதை மற்றும் நடுகைப் பொருட்களை விநியோகித்தல், விவசாய உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், சிறியளவிலான அண்ணாசிச் செய்கைக் கிராமங்களை ஊக்குவித்தல் முதலான கருத்திட்டங்கள் சிலவற்றை அமுல் செய்யும் பொருட்டு புத்தளம் மாவட்டச் செயலகத்திற்கு ரூ. 3.297 மில்லியன் நிதி வழங்கப்பட்ட போதிலும், தவிர்க்க முடியாத காரணிகள் காரணமாக இக் கருத்திட்டம் அமுல் செய்யப்படவில்லை. இந் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூ. 2.816 மில்லியன் நிதி, புத்தளம் மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்ட இளைஞர் விவசாயத் தொழில் முயற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக அமைச்சினால் செலவு செய்யப்பட்டது.

இதன் கீழ், வென்னப்புவை, முந்தல், ஆரச்சிக்கட்டுவை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள் உட்படுமாறு 03 ஓர்கிட் மலர்ச் செய்கைக் கருத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டதுடன், இதன் கீழ் 2,000 ஓர்கிட் மலர்ச் செடிகள், 02 பாதுகாப்பு வீடுகள், 02 நுண் நீர்ப்பாசன முறைமைகள், 01 விவசாயக் கிணறு, 01 நீர் இறைக்கும் இயந்திரம் என்பன பயனாளிகளுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**2.6.7. <u>கேகாளை மாவட்டச் செயலகத்திற்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்</u>**

கேகாளை மாவட்டச் செயலகத்தின் விவசாயப் பிரிவினால் அமுல் செய்யப்பட்ட, விவசாயத் தொழில் முயற்சியாளர்களின் காணிகளில் வர்த்தகப் பழச் செய்கைகளை நிறுவும் கருத்திட்டத்திற்கும், சிறிய குழுக்களை வலுவூட்டும் தொழில் முயற்சி அபிவிருத்தி கருத்திட்டத்திற்கும் 2013 நிதி ஆண்டிலிருந்து ரூ. 6.9 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், 2014 நிதி ஆண்டிலிருந்து பழச் செய்கைகளை நிறுவும் நிகழ்ச்சித் திட்டத்தின் செடிகளைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து நடவடிக்கைகள் சார்பில் ரூ. 0.1 மில்லியன் நிதி வழங்கப்பட்டது.

இதன் கீழ் 1,200 தூரியன் செடிகள், 250 ரம்புட்டான் செடிகள், 1,000 பப்பாசிச் செடிகள், 250 டிரகன் புரூட் செடிகள், 2,500 ஒரு மாத வயதுடைய சாடிகளில் நடப்பட்ட மிளகாய்ச் செடிகள் என்பன பயனாளிகளிடத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மேலும், விவசாயத் திணைக்களத்திற்கு மேலதிகமாக, அமைச்சின் கீழுள்ள இலங்கை ஹதபிம அதிகார சபை, இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைப் பேரவை, அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம், தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை, ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம், வ/ப இலங்கை உரக் கம்பனி, வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி ஆகிய நிறுவனங்களினாலும் தத்தமது நிறுவனங்களினால் ஆற்றப்படுகின்ற பணிகள் வெளிக் கொணரப்படுமாறு கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு நடாத்திச் செல்லப்பட்டன.

2014 நிதி வருடத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 50.0 மில்லியன் (திறைசேரி திருத்தங்களுக்கு அமைய பின்னர் இத் தொகை ரூ. 40.0 மில்லியனாகத் திருத்தப்பட்டது) நிதி ஒதுக்கீடுகள் மூலம் 2014 குருணாகல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூ. 24.5 மில்லியன் நிதி வழங்கப்பட்டதுடன், எஞ்சிய ரூ. 15.5 மில்லியன் நிதி 2015 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது.

**<u>2015 - தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டம் - மாத்தறை</u>**

i. **<u>விவசாயக் கண்காட்சிப் பூமியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்</u>**

சுமார் 08 ஏக்கர் பரப்பளவுடைய விவசாயக் கண்காட்சிப் பூமியின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பதற்காக விவசாயத் திணைக்களத்தின் கற்புல, செவிப்புல நிலையத்திற்கு ரூ. 5.0 மில்லியன் நிதி வழங்கப்பட்டது.

ii. **<u>மாத்தறை மாவட்டச் செயலகத்திற்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்</u>**

தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்குச் சமாந்திரமாக மாத்தறை மாவட்டத்தில் நடமாடும் சேவையூடாக இனங் காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமுல் செய்வதற்குத் திட்டமிடப்பட்ட 24 சிறியளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ரூ. 5.5 மில்லியன் நிதி வழங்கப்பட்டதுடன், இதில் ரூ. 0.608 மில்லியன் நிதி மட்டும் செலவு செய்யப்பட்டு 3 கருத்திட்டங்கள் மட்டும் அமுல் செய்யப்பட்டன. காலம் போதாமை காரணமாக எஞ்சிய கருத்திட்டங்கள் அமுல் செய்யப்படவில்லை. இந் நடமாடும் சேவைகள் ஆகஸ்ட், செத்தெம்பர், ஒக்றோபர் மாதங்களில் அமுல் செய்யப்பட்டன.

iii. **<u>பதுளை மாவட்டச் செயலகத்திற்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்</u>**

பதுளை மாவட்டத்தில் நடமாடும் சேவையூடாக இனங் காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமுல் செய்வதற்குத் திட்டமிடப்பட்ட பச்சை வீடுகளைப் பெற்றுக் கொடுத்தல், ரோசா மலர்ச் செய்கைக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல், காளாண் செய்கையை ஊக்குவித்தல் முதலான கருத்திட்டங்களுக்காக ரூ. 1.56 மில்லியன் நிதி வழங்கப்பட்ட போதிலும் இக் கருத்திட்டங்கள் அமுல் செய்யப்படவில்லை.

iv. **<u>இரத்தினபுரி மாவட்டச் செயலகத்திற்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்</u>**

ஏற்றுமதிக்காக அந்தூரியம் மலர்ச் செய்கையை மேற்கொள்ளும் கருத்திட்டத்திற்காக ரூ. 1.478 மில்லியன் நிதி வழங்கப்பட்டதுடன், இதில் ரூ. 0.980 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

## 03. விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்/ கருத்திட்டங்கள்

1. தோட்டப் பயிர் அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைப்பதுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப ஒத்துழைப்புக் கருத்திட்ட யோசனை ஐக்கிய நாடுகள் உணவு, விவசாய அமைப்பினால் (FAO) அங்கீகரிக்கப்பட்டதுடன், இக் கருத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2. கிராமிய அபிவிருத்திக்குரிய நிபுணத்துவரொருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ளலும், பயிர் தடுப்புக் காப்பு நிலையத்திற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான 2 கருத்திட்ட யோசனைகள் JICA நிறுவனத்திடம் முன்வைக்கப்பட்டு, இதனை தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் முன்வைத்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. ஆசிய உணவு மற்றும் விவசாய ஒத்துழைப்பிற்கான துவக்க அமைப்பு (AFACI) அமைப்பின் கீழ் தென் கொரிய அரசின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியின் கீழ் 11 ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் முடிவுற்ற 02 கருத்திட்டங்களை மேலும் 02 வருடங்களினால் நீடிப்பதற்கு முடிந்தது. அத்துடன், விவசாயத்துறை இயந்திரமயமாக்கலுடன் தொடர்புடைய புதிய கருத்திட்ட யோசனையொன்றை முன்வைக்கவும் முடிந்துள்ளது.

   கருத்திட்டத்திற்குப் பொறுப்பான ஆராய்ச்சியாளர்களை (Principal Investigators) பல்வேறு நாடுகளுடனும் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் பங்குபற்றச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், செடி மரபுவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கருத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் 2014 ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் நடாத்தப்பட்டது.

4. நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கருத்திட்ட யோசனையொன்று சார்க் அபிவிருத்தி நிதியத்திடம் (SDF) முன்வைக்கப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் சார்க் அபிவிருத்தி நிதியத்திடம் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட **Highland Food Security with High Value Chain** கருத்திட்ட யோசனைக்கு விவசாயத்துறையுடன் தொடர்புடைய தகவல்கள் வழங்கப்பட்டன.

5. புதிதாக அங்கத்துவம் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிய - ஆபிரிக்க கிராமிய அபிவிருத்தி அமைப்பின் (AARDO) நிதி உதவியின் கீழ் விவசாயத்துறையுடன் தொடர்புடையதாக 22 உத்தியோகத்தர்களை பல்வேறு நாடுகளில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சிகளிலும், செயலமர்வுகளிலும் பங்குபற்றுவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

   "காலநிலை மாற்றங்களும் விவசாயமும்; ஏற்றலும் பாதிப்புகளைக் குறைத்தலும்" எனும் தொனிப் பொருளில் சர்வதேச செயலமர்வொன்றை செப்தெம்பர் 22 தொடக்கம் 26 வரை இலங்கையில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இச் சர்வதேச செயலமர்வில் பங்களாதேஷ், தாய்வான், கானா, இந்தியா, ஈராக், ஜோர்தான், லெபனான், மலாவி, நைஜீரியா, ஓமான், பாகிஸ்தான் உள்ளிட்ட 16 நாடுகளைச் சேர்ந்த உயர்மட்டப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

6. உள்ளூர் விவசாயத்துறை அபிவிருத்தி மற்றும் விவசாயத்துறை ஒத்துழைப்பு ஊக்குவிப்பு எனும் தொனிப் பொருளில் **ஆசிய விளைவுப் பெருக்க அமைப்பின்** (APO) சர்வதேச

செயலமர்வொன்று 2014 யூன் மாதம் ஏற்பாடு செய்யப்பட்டு இலங்கையில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இச் சர்வதேச செயலமர்வில் மக்கள் சீனக் குடியரசு, பிஜீ, ஈரான், இந்தியா, இந்தோனேசியா, மொங்கோலியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 14 நாடுகளைச் சேர்ந்த 24 உயர் மட்டப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

7. பல்வேறு நாடுகளுடனும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்து கொள்ளும் வகையிலும் விவசாயத்துறையில் இருதரப்பு உறவுகளைக் கட்டியெழுப்பும் வகையிலும், பெலரஸ், ஷீஷெல் குடியரசு, ஈராக், ஜப்பான், சீனா ஆகிய நாடுகளுடன் 04 புரிந்துணர்வு உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் வகையில் இதற்கான ஆரம்ப வரைவு தயாரிக்கப்பட்டு அந் நாடுகளின் இணக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதே போன்று இப் புரிந்துணர்வு உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் வகையில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

8. உணவு மற்றும் விவசாய அமைப்பு, ஆசிய, ஆபிரிக்க கிராமிய அபிவிருத்தி அமைப்பு (AARDO), ஆசிய பசுபிக் வலய ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி ஆகிய அமைப்புகளுக்கான 2014 ஆம் வருடத்திற்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

9. புதிதாகக் கைச்சாத்திடப்படவுள்ள இலங்கை - பங்களாதேஷ் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் BIMSTEC சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்வற்றிற்காக விவசாயத்துறையுடன் தொடர்புடைய தகவல்கள் வணிகத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| | நிதி ஒதுக்கீடு ரூ. | செலவு செய்யப்பட்ட தொகை ரூ. | முன்னேற்றம் % |
|---|---|---|---|
| அங்கத்துவப் பணம் | | | |
| **FAO** | | 17,169,785.06 | |
| **CIRDAP** | | 2,261,142.37 | |
| **AARDO** | | 3,047,910.71 | |
| செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல் | | | |
| **APO** | | 3,248,769.48 | |
| **AARDO** | | 2,710,208.62 | |
| | **35,000,000.00** | **28,437,816.24** | **81.25%** |

**வாழ்வின் எழுச்சி (திவிநெகும) தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் VI**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் கமத்தொழில் அமைச்சினால் கீழ்க் காணும் உப கருத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

1. **<u>மரக்கறி விதைகளையும், செடிகளையும் விநியோகிக்கும் கருத்திட்டம்</u>**

| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி.** 70.0 | நிதி முன்னேற்றம் : **ரூ. மி.** 47.308 |
|---|---|

தீவு முழுவதும் உட்படுமாறு அமுல் செய்யப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இருபத்தைந்து இலட்சம் (25,00,000) பயனாளிகளுக்கு 07 வகையான மரக்கறி விதைகள் அடங்கிய விதைப் பக்கற் வீதமும், 04 வகையான மரக்கறிகள் அடங்கிய செடிகளில் நடப்பட்ட 9 செடிகள் வீதமும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

2. **<u>பழச் செடிகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டம்</u>**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் அமுல் செய்யப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தீவின் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்தும் 100 பயனாளிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, அந்தந்த வலயங்களுக்குப் பொருத்தமான 100 பழச் செடிகள் இலவசமான விநியோகிக்கப்பட்டன.

3. **<u>அகத்திச் செடிகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டம்</u>**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் அமுல் செய்யப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தீவின் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்தும் 75 பயனாளிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, அகத்திச் செடிகள் இலவசமான விநியோகிக்கப்பட்டதுடன், தீவு முழுவதும் இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டது.

4. **<u>பாடசாலைத் தோட்டங்களுக்கு பழச் செடிகளையும், மரக்கறி விதைகளையும் விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டம்</u>**

தீவு முழுவதும் உட்படுமாறு அமுல் செய்யப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம், 10,012 பாடசாலைத் தோட்டங்களுக்கு பழச் செடிகளும், மரக்கறி விதைகளும் விநியோகிக்கப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் அமுல் செய்யப்பட்டது.

**<u>அரச உத்தியோகத்தர்களுக்கு பழச் செடிகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டம்</u>**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் தீவு முழுவதும் உட்படுமாறு அமுல் செய்யப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அரச உத்தியோகத்தர்களுக்கு இலவசமாக பழச் செடிகள் விநியோகிக்கப்பட்டன.

## <u>கமக்காரர் வாரம்</u>

| ஒதுக்கப்பட்ட தொகை : **ரூ. மி.** 44.03 | நிதி முன்னேற்றம் : **ரூ. மி.** 43.12 |
|---|---|

2014 தேசிய கமக்காரர் வாரமும் கமத்தொழில் கண்காட்சியும் தெலிஜ்ஜவிலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இக் கண்காட்சிக்குச் சமாந்திரமாக பிரதேச அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு “பொன் விளைச்சல் பூக்கும் நில்வலா அருணோதயம்” எனும் தொனிப் பொருளில் இம்முறை தேசிய கமக்காரர் வாரம் நடாத்தப்பட்டது. விவசாயத்துறையில் எமது நாடு அடைந்துள்ள

முன்னேற்றத்தையும், விவசாயத்துறை சார்ந்த புதிய தொழில்நுட்பங்களையும் விவசாயத்துறைக்கு ஈடுபடுத்திக் கொள்வது தொடர்பில் எடுத்துக் காட்டும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்ட கண்காட்சி வளவைக் கொண்ட தேசிய கமக்காரர் வாரம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கீழ்க் காட்டப்பட்ட கருத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

- தெலிஜ்ஜவிலை விவசாயப் பண்ணையை அபிவிருத்தி செய்யும் பணிகள்.
- தெரிவு செய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கென 100 பாதுகாப்பு வீடுகளை அமைத்தல்.
- மாத்தறை மாவட்டத்தில் செய்கை பண்ணப்படாத காணிகளில் புல் வளர்த்தலும், பசுமாடு வளர்ப்பும்.
- மாத்தறை மாவட்டத்தில் தோட்டச் செய்கைத் திட்டம்.
- தெலிஜ்ஜவிலை விவசாயப் பண்ணை வயல் வரப்புகளில் பயிர் செய்யும் திட்டம்.
- மாதிரிப் பாடசாலை வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித் திட்டம்.







## 04. கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

1994 இல் தாபிக்கப்பட்ட கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், 2002 ஆம் வருடத்தில் அமைச்சரவை அங்கீகாரத்துடன் அதன் குறிக்கோள்கள் விஸ்தரிக்கப்பட்டு தற்சமயம் கீழ்க் காட்டப்பட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

- இலங்கையில் விவசாயத்துறையில் அபிவிருத்தியை மேற்கொள்ளலும், விவசாய மக்களின் சேமநலனை மேம்படுத்தலும்.

- சிறியளவிலான விவசாயிகளுக்கு குறுகியகால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல்.

- சிறியளவிலான விவசாயிகளுக்கு விவசாய பயன்பாட்டுப் பொருட்களை வழங்குதல்.

- சிறியளவிலான விவசாயிகளின் நிதிச் சிரமங்களை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, அவர்களுக்கு சந்தைக் கடன் வசதிகளை செய்து கொடுத்தல்.

- சிறியளவிலான விவசாயிகளின் விவசாயத்துறை அபிவிருத்தி, சேமநலன் என்பன தொடர்பில் தெளிவூட்டல் நிகழ்ச்சிகளை அமுல் செய்தல்.

- பயிர் மற்றும் பண்ணை விலங்கு உற்பத்தித் தொழிற்பாடு மற்றும் அதேபோன்று உற்பத்தி மீள் வகுத்தமைத்தலுக்காக சிறியளவிலான விவசாயிகளுக்குத் தேவையான பிற அனுசரணைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- விவசாயத்துறையின் அபிவிருத்திக்குத் தேவையான வசதிகளைச் செய்யும் வகையில் விசேட விவசாயத்துறை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்தல்.

### 1. அமுல் செய்யப்படுகின்ற முறை

அந்தந்த வருடத்திற்காக பணிப்பாளர் சபையூடாக கருத்திட்டங்களை அங்கீகரிப்பதினூடாக குறித்த நிறுவனங்கள் மூலம் கருத்திட்டங்கள் அமுல் செய்யப்படுகின்றன. இந் நிதியத்தின் பணிப்பாளர் சபையின் கட்டமைப்பு வருமாறு:

- தலைவர் - கமத்தொழில் அமைச்சின் செயலாளர்
- உறுப்பினர் - கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்
- உறுப்பினர் - பிரதம கணக்காளர், கமத்தொழில் அமைச்சு
- உறுப்பினர் - திறைசேரியின் விசேட பிரதிநிதி

### 2. நிதியத்தின் பிரதான வருமானமீட்டல் வகை

நிதியத்தின் பிரதான வருமானமீட்டல் வழி கொவிசெத்த லொத்தர் சீட்டு விற்பனை வருமானத்தில் குறிப்பிடத்தக்க ஒரு வீதமாகும் எனவும், அதனை அவ்வப்போது தேசிய லொத்தர் சபையுடன் கலந்துரையாடி தீர்மானித்துக் கொள்ள வேண்டுமெனவும் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2014 ஆம் வருடத்தில் நிதி விடுவிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்கள் சிலவற்றின் நிதி முன்னேற்றமும் பௌதீக முன்னேற்றமும் (2014.08.31 ஆம் திகதிக்கு)**

## 4.1. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான கொடைகள்

### 4.1.1. விவசாயத் திணைக்களம்

| நிகழ்ச்சித் திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூ. | விடுவிக்கப்பட்ட தொகை ரூ. | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| விவசாய இரசாயனப் பொருள் வர்த்தகம் தொடர்பில் பயிற்சியளித்தல் | 2,915,000.00 | 1,700,000.00 | 58% |
| | 2,915,000.00 | 1,700,000.00 | |

### 4.1.2. விவசாய இரசாயனப் பொருள் வர்த்தகம் தொடர்பில் பயிற்சியளித்தல் (ASTA)

விவசாயிகளுக்கு தமது களத்தில் காணப்படுகின்ற பீடைநாசினிப் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல், முறையற்ற பீடைநாசினிப் பாவனையைத் தவிர்ப்பதற்காக விவசாய இரசாயனப் பொருள் சந்தைப்படுத்தல், தொழில்நுட்ப உதவியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் என்பவற்றுக்காக விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து தேசிய பயிலுனர், கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை நடாத்தும் பயிற்சிப் பாடநெறியாகும்.

| | மாவட்டம் | பயிற்சிப் பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அநுராதபுரம் | 90 |
| 2. | கம்பஹா | 30 |
| 3. | இரத்தினபுரி | 30 |
| 4. | ஹம்பாந்தோட்டை | 30 |
| 5. | மாத்தளை | 30 |
| 6. | பதுளை | 60 |
| கூட்டு மொத்தம் | | 270 |

## 4.2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்

### 4.2.1. உரக் களஞ்சியசாலைகளை அமைத்தல்

| நிகழ்ச்சித் திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூ. | விடுவிக்கப்பட்ட தொகை ரூ. | நிதி முன்னேற்றம் (%) | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| ஊருபொக்க கமநல சேவை நிலையத்தை அமைத்தல் | 1,657,442.00 | 1,657,442.00 | 100% | 100% |
| மாவட்ட மட்டத்தில் உரக் களஞ்சியசாலைகளை அமைத்தல் | 1,800,000.00 | 1,796,727.30 | 99.8% | 100% |
| மொத்தம் | 3,457,442.00 | 3,454,169.30 | | |

**ஊருபொக்க கமநல சேவை நிலையத்தின் உரக் களஞ்சியசாலை**

மாவட்டம்: மாத்தறை
பிரதேச செயலாளர் பிரிவு: பஸ்கொடை
கமநல சேவை நிலைய ஆளுகைப் பிரதேசம்: ஊருபொக்க
செய்கை பண்ணப்படுகின்ற வயல் காணி அளவு: 1,067 ஏக்கர்
உரக் களஞ்சியசாலையின் கொள்ளளவு: 50 மெற்றிக் தொன்
பதிவு செய்யப்பட்ட கமநல அமைப்புகளின் எண்ணிக்கை: 12

### 4.2.2. <u>கிராமீய சிறிய நீர்ப்பாசன புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டம்</u>

கிராமிய மட்டத்தில் விவசாய மக்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அமைக்கப்பட்ட சிறியளவிலான ஏரி, குளங்களைப் புனரமைப்பதற்காக இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படுகின்றது.

| | நிகழ்ச்சித் திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூ. | விடுவிக்கப்பட்ட தொகை ரூ. | நிதி முன்னேற்றம் (%) | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| 1. | வவுனியா, மொனறாகலை மாவட்டங்களில் சிறிய நீர்ப்பாசனப் புனரமைப்பு | 16,910,000.00 | 10,228,640.41 | 60% | 100% |
| 2. | மாத்தறை மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனப் புனரமைப்பு | 19,000,000.00 | 8,000,000.00 | 42% | 100% |
| 3. | கண்டி மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனப் புனரமைப்பு | 4,000,000.00 | 4,000,000.00 | 100% | 100% |
| | | 39,910,000.00 | 22,228,640.41 | | |

## <u>கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் அமுல் செய்யப்பட்ட சிறிய நீர்ப்பாசன புனரமைப்புகள்</u>

**<u>பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில்</u>**

- விவசாயிகள், பாடசாலைகள், விவசாயத் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்கள் ஆகியோர்களுக்காக 847 பயிற்சித் திட்டங்கள் (53,174 மனித நாட்கள்) 03 சேவைக்காலப் பயிற்சி நிறுவகங்கள், 04 மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்கள், பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் நடாத்தப்பட்டன.

**<u>விவசாயக் கல்வி</u>**

- குண்டசாலை, அங்குணகொலபெலஸ்ஸ, வவுனியா, பெல்வெஹெர, கரபிஞ்சா ஆகிய விவசாயப் பாடசாலைகள் முன்னர் வழங்கிய டிப்ளோமா கற்கை நெறி 2014 ஆம் ஆண்டிலிருந்து என்.வீ.கியு மட்டம் 6 என விவசாய உற்பத்தித் தொழில் உயர் தேசிய டிப்ளோமாவாக திருத்தப்பட்டுள்ளது.
- 248 டிப்ளோமா மாணவர்கள் விவசாயப் பாடசாலைகளிலிருந்து சித்தியடைந்து வெளியேறியதுடன் 485 மாணவர்கள் விவசாய உற்பத்தி தொழில்நுட்ப தேசிய டிப்ளோமாவினை பின்பற்றி வந்தனர்.
- புதியதோர் தகுதி அடிப்படையிலான பயிற்சி (த.அ.ப) பாடத்திட்டம் விவசாயப் பாடசாலைகளின் முறைமைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

- என்.வீ.கியு மட்டம் 5 விவசாய உற்பத்தி தொழில்நுட்ப தேசிய டிப்ளோமாவுக்கான ஐந்து புதிய விவசாயப் பாடசாலைகள் வாரியபொல, லபுதுவ, பிபில, பாலமுனை, வட்டக்கச்சி ஆகிய இடங்களில் 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் 230 மாணவர்கள் இப்பாடசாலைகளில் வசதியினைப் பெற்றுக் கொள்ள முடியும்

**விவசாயத் தகவல், தொடர்பாடல்**

- நூற்றிரெண்டு தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் (கொவி பிமட்ட அறுநலு - 50, மிஹிகத தினுவோ - 52) தாபிக்கப்பட்டு ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டன.
- "தெயட்ட கிறுல" குளியாபிட்டிய, 'ஜாதிக கொவி சதிய' தெலிஜ்ஜவில, ஆகிய இடங்களில் பொருட்காட்சிகள் நடாத்தப்பட்டதுடன் 'கிராம் 200' பழ மேம்பாட்டு வாரம் ஹொரண பழ ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகத்தில் நடாத்தப்பட்டது.
- 140,000 உள்நாட்டு, வெளிநாட்டு பார்வையாளர்கள் கண்ணொறுவ, பட்டஅத்த விவசாயப் பூங்காக்களுக்கு வருகை தந்தனர்.
- விவசாயத் தகவல்களை வழங்க இரண்டு இணையத் தளங்கள் (www.goviya.lk and www.knowledegebank.irrri.org/srilanka) பராமரிக்கப்பட்டு வருகின்றன.
- இலவச தொலைபேசி விவசாய தகவல் முறைமையினூடாக (1920) 33,638 விசாரணைகளுக்கு உதவி வழங்கப்பட்டது.
- மிளகாய், பூசனிக்குடும்பம், காளாண், இலை மரக்கறிச் செய்கை தொடர்பான நான்கு புதிய பல்லூடக இறுவட்டு ரொம்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 32 வானொலி நிகழ்ச்சிகள் பண்ணை ஒலிபரப்பு சேவையினூடாக ஒலிபரப்பப்பட்டன.

## 02. 2014 ஆண்டு நிதிசார் முன்னேற்றம்

**அட்டவணை 2: 2014 ஒதுக்கீடுகளும் செலவுகளும்.**

| வாக்கு | ஒதுக்கீடு (ரூபா மில்) | செலவு (ரூபா மில்) |
|---|---|---|
| மூலதனம் | 1,517 | 1,428 |
| மீண்டு வரும் செலவு | 2,758 | 2,752 |
| விவசாயத் திணைக்கள வாக்கின் கீழுள்ள கருத்திட்டங்கள் | 1,012 | 981 |
| விவசாய அமைச்சு வாக்கின் கீழுள்ள கருத்திட்டங்கள் | 78 | 42 |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வாக்கின் கீழுள்ள கருத்திட்டங்கள் | 91 | 91 |
| **மொத்தம்** | **5,456** | **5,294** |

## 7.2 ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

ஏற்றுமதி அளவைக் கூட்டுவதினூடாகவும் உற்பத்தித் தரத்தை மேம்படுத்துவதினூடாகவும் கூடுதலான அந்நியச் செலாவணி சம்பாத்தியத்தை சம்பாதிக்கும் வகையில் ஏற்றுமதி விவசாயத்துறையின் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்டு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்வதே ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பிரதான பணியாகும். உத்தியோகபூர்வ வகைப்படுத்தலுக்கு அமைய மொத்த வருடாந்த உற்பத்தியில் 50% வீதத்திற்கும் கூடுதலான அளவு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பல்லாண்டுப் பயிர் மற்றும் அதற்கு மேலதிகமாக, சிறு ஏற்றுமதிப் பயிர் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் விடயப் பரப்பிற்குள் உட்சேர்க்கப்பட முடியுமென சிபாரிசு செய்யப்படுகின்ற எந்தவொரு பயிரும் ஏற்றுமதி விவசாயப் பயிராகக் கருதப்படுகின்றது. (தேயிலை, இறப்பர், தெங்கு, மரமுந்திரிகை ஆகிய ஏற்றுமதிப் பயிர்கள் இவ் வகைப்படுத்தலில் அடங்காது). மேற்சொன்ன வகைப்படுத்தலுக்கு அமைய கறுவா, மிளகு, கராம்பு, சாதிக்காய், ஏலம், கோப்பி, கொக்கோ, வெற்றிலை, கமுகு, வெனிலா, பங்கிரி, சேர, கொறுக்காய், கித்துல், இஞ்சி, மஞ்சள் முதலான சம்பிரதாயப் பயிர்களின் அபிவிருத்தி மீது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. பிரதானமாக தொழில்நுட்பத் திணைக்களமான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பிரதான பணிகள் ஏற்றுமதி விவசாயப் பயிர்த் துறைக்குரிய ஆராய்ச்சி, அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது.

### 7.2.1. பிரதான செயற்பாடுகள்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தில் 1992 செப்தெம்பர் 22 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டத்தின் மூலம், கீழ்க் காட்டப்பட்ட பணிகளையும், சேவைகளையும் நிறைவேற்றும் வகையில் ஏற்றுமி விவசாயத் திணைக்களத்திற்கு நியதிச் சட்ட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கை, வகுத்தமைத்தல், ஒழுங்கமைப்பு, ஊக்குவிப்பு.
- பயிர் அபிவிருத்தி, பயிர்ச் செய்கை, பயிர் பாதுகாப்பு, அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவம் மற்றும் இவற்றுடன் இணைந்த சமூக, பொருளாதார செயற்பாடுகள்.
- தரத்தில் சிறந்த நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தலும், விநியோகித்தலும்.
- பயிர் உற்பத்தி, உற்பத்தி விளைவுப் பெருக்க ஊக்குவிப்பு, தரத்தை விருத்தி செய்தல் என்பவற்றிற்காக ஏற்றுமதி விவசாயப் பயிர் உதவித் திட்டங்களை அமுல் செய்தல்.
- பயிர்களைப் பேணிப் பாதுகாத்தல் தொடர்பிலான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ ஊக்குவிப்பு.
- ஒருங்கிணைந்த செடிப் போசாக்கு முகாமைத்துவ ஊக்குவிப்பு.
- சேதனப் பசளைப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு.
- சந்தைப்படுத்தல், தர நிர்ணயங்கள், விலை நிலவரங்கள் முதலான தரவுகளை வெளியிடல்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தி சார்ந்த நடுகைப் பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடு.
- ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தி, வகுத்தமைத்தல், சந்தைப்படுத்தல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- பெருந் தோட்டத்துறையினுள் ஏற்றுமதி விவசாயப் பயிர்களை விருத்தி செய்வதற்கான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.

- ஏற்றுமதி விவசாயப் பயிர் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் இடையில் உள்ள தொடர்பினை வலுப்படுத்தல்.
- 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாயச் சட்டத்தின் கீழான நிறைவேற்று அதிகாரம்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர் சார்ந்த கொள்கை ரீதியிலான விடயங்கள் தொடர்பில் பிற அரச அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குதல்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர் சார்ந்த தொழில்நுட்பங்களைப் பிரபல்யப்படுத்தும் வகையில் மாதிரிச் செய்கைகளைப் பேணிச் செல்லல்.

**7.2.2. அபிவிருத்திப் பிரிவு**

**அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணிகள்**

- புதிய/ மீள் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம்.
- ஏற்கனவே உள்ள பயிர்ச் செய்கைகளுக்கான உற்பத்தி விளைவுப் பெருக்க நிகழ்ச்சித் திட்டம்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் தரத்தை மேம்படுத்தல்.
- தரப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சித் திட்டம்.

**7.2.2.1. புதிய பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம்**

1972 இல் இத் திணைக்களம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து புதிய பயிர்ச் செய்கைகளுக்கான ஏற்றுமதி விவசாய உதவித் திட்டம் ஆரம்பமானது. இத் திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் இலவசமாக நடுகைப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், இதற்கு மேலதிகமாக தொழில்நுட்பத் தகவல்கள், வெற்றிகரமான பயிர்ச் செய்கைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட ஏற்றுமதி விவசாயப் பயிர்களைச் செய்கை பண்ணும் பொருட்டு நேரடி நிதி உதவி என்பனவும் வழங்கப்பட்டன. புதிய பயிர்ச் செய்கை உதவித் திட்டமானது, நீண்டகால பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தெரிவு செய்யப்பட்ட ஒருசில பயிர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 2014 ஆம் வருடத்தில் பயிர்ச் செய்கை பண்ணப்பட்ட நிலப்பரப்பு தொடர்பான விபரம் வருமாறு:

| 2014 ஆம் வருடத்தில் புதிய பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| பௌதீக இலக்கு/ முன்னேற்றம் (ஹெக்டயார்) | 2,357.0 | 2,794.7 |
| நிதி இலக்கு/ முன்னேற்றம் (ரூ.மி.) | 134.00 | 133.992 |

**7.2.2.2. புதிய பயிர்ச் செய்கைகளுக்காக முதலீட்டு உதவிகளை வழங்குதல்**

புதிய பயிர்ச் செய்கைகளுக்கான முதலீட்டு உதவிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 ஆம் வருடத்தில் அடையப் பெற்ற முன்னேற்றம் வருமாறு:

| புதிய பயிர்ச் செய்கைகளுக்காக முதலீட்டு உதவிகளை வழங்குதல் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| பௌதீக இலக்கு/ முன்னேற்றம் (ஹெக்டயார்) | 1,600 | 977.8 |
| நிதி இலக்கு/ முன்னேற்றம் (ரூ.மி.) | 16.00 | 10.709 |

#### 7.2.2.3.உற்பத்தி விளைவுப் பெருக்க ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்

ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கைக்கான நிலப்பரப்பை விஸ்தரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டே காணப்படுகின்றது. இதன் காரணமாக குறைந்த பயிர் அடர்த்தி, பலவீனமான பயிர் முகாமை என்பன காரணமாக குறைந்த உற்பத்தியைக் காட்டும் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கைகளின் பயிர்ச் செய்கை அலகொன்றிலிருந்து கிடைக்கும் விளைச்சலைக் கூட்டுவதற்காக உற்பத்தி விளைவுப் பெருக்க ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. தற்போதுள்ள மிளகு, கறுவா, கொக்கோ, கோப்பி, ஏலம், கராம்பு, சாதிக்காய் முதலான பயிர்ச் செய்கைகளை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், பாழடைந்த இடங்களில் நடுவதற்காக நடுகைப் பொருட்களை இலவசமாக வழங்குதலும், மூன்று வருடங்களுக்கு நிதி உதவிகளை வழங்குதலும் என்பன இதன் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது. இவ் உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கான தகைமைகளைப் பெற, பாழடைந்த இடங்களில் நடுதல், மண்வளப் பாதுகாப்பு முறைகள், கவ்வாத்து, சேதனப் பசளைப் பாவனை, ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் முதலான முறையான விவசாயச் செய்கை நடைமுறைகளைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்.

**<u>உற்பத்தி விளைவுப் பெருக்க ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2014</u>**

| உற்பத்தி விளைவுப் பெருக்க ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| பௌதீக இலக்கு/ முன்னேற்றம் (ஹெக்டயார்) | 1,990 | 1,980.2 |
| நிதி இலக்கு/ முன்னேற்றம் (ரூ.மி.) | 29.00 | 28.457 |

**உற்பத்தி விளைவுப் பெருக்க ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கான முதலீட்டு உதவித் திட்டம்**

**இந் நிகழ்ச்சித் திட்டத்தின் 2014 ஆம் வருடத்திற்கான முன்னேற்றம் வருமாறு:**

| உற்பத்தி விளைவுப் பெருக்க நிகழ்ச்சித் திட்டத்திற்கான முதலீட்டு உதவித் திட்டம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| பௌதீக இலக்கு/ முன்னேற்றம் (ஹெக்டயார்) | 5,040 | 4,456.1 |
| நிதி இலக்கு/ முன்னேற்றம் (ரூ.மி.) | 51.00 | 17.5 |

#### 7.2.2.4. ஏற்றுமதி அளவு

2014 ஆம் வருடத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தி அளவும் ஏற்றுமதி வருமானமும் வருமாறு:

| | |
|---|---|
| ஏற்றுமதி அளவு (மெ.தொ.) | 59,827.3* |
| ஏற்றுமதி வருமானம் (ரூ.மி.) | 43,223.5* |

**தற்காலிக*

### 7.2.2.5. அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப ஆலோசனைச் சேவை

ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு 1998 இல் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப ஆலோசனைச் சேவை ஆரம்பிக்கப்பட்டதுடன், இந் நிகழ்ச்சித் திட்டம் கடந்த வருடத்திலும் தொடர்ந்தும் அமுல் செய்யப்பட்டது. அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளுக்கான உதவித் திட்டம் 2007 யூன் மாதத்தில் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டது. இதன் போது பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த தரப்பினர்களுக்கு ஏற்ற விதத்தில் மூன்று வகையான உதவித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. வெளிநாட்டுச் சந்தையில் காணப்படுகின்ற போட்டித் தன்மைக்கு முகங் கொடுக்கக் கூடியவாறு உற்பத்திகளின் தரத்தைப் பேணுதல், உற்பத்திப் பல்வகைப்படுத்தல், பெறுமதி சேர்த்தல், ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான வசதிகளைச் செய்தல் என்பனவே இம் மூவகை உதவித் திட்டங்களினதும் பிரதான நோக்கமாகும். இவ் உதவித் திட்டங்கள் தொடர்பான சுருக்கமான விளக்கம் வருமாறு:

#### i. குழு வகுத்தமைத்தல் அலகுகள்

திணைக்களத்தில் பதிவு செய்து கொண்ட கமநல அமைப்புகளே இத் திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதி பெறுகின்றன. இதன் கீழ் உற்பத்தி வகுத்தமைத்தலுக்குத் தேவையான இயந்திரோபகரணங்கள் இலவசமாக கமநல அமைப்புகளுக்கு வழங்கப்படும். இவ் வகுத்தமைத்தல் அலகுகளை நிருவகிக்கும் பொறுப்பும், இயந்திரோபகரணங்களை பாவிக்கும் பொறுப்பும் கமநல அமைப்புகளைச் சாரும். மேலும், எல்லாவித இயந்திரோபகரணங்களையும் நிறுத்தி வைப்பதற்குத் தேவையான வகுத்தமைத்தல் கட்டிடங்களை அமைப்பதற்குப் பொருத்தமான நிலத்தை அடையாளம் காணும் பணியையும் கமநல அமைப்புகள் மேற்கொள்ளல் வேண்டும். இவ் வகுத்தமைத்தல் நிலையங்களை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் தேவையான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுத்து, திணைக்களப் பணியாட் தொகுதியினர் கமநல அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

#### ii. மத்திய வகுத்தமைத்தல் அலகுகள்

அறுவடைக்குப் பிந்திய வகுத்தமைத்தல் வசதிகளை நிறுவிக் கொள்வதற்காக ரூபா ஒரு மில்லியனுக்குக் கூடிய முதலீடொன்றைச் செய்து, பாரிய அளவிலான வகுத்தமைத்தல் வேலைத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான ஆற்றல் உள்ளவர்களுக்காகவே இத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இவ் உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 0.5 மில்லியன் உச்ச தொகைக்குக் கட்டுப்பட்டு மொத்த முதலீட்டில் 25% வீதத்திற்குச் சமமான தொகையை அளிப்பாக முதலீட்டாளருக்குப் பெற்றுக் கொள்ள முடியும். நிலையத்தைப் பராமரிக்கும் பொறுப்பும், இலாபத்தை பாவிக்கும் உரிமையும் முதலீட்டாளரைச் சாரும்.

#### iii. தனிநபர் வகுத்தமைத்தல் அலகுகள்

ஏற்றுமதி விவசாயப் பயிர் அறுவடைக்குப் பிந்திய வகுத்தமைத்தலுக்காக தனிப்பட்ட வகுத்தமைத்தல் நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்கு விருப்பமுள்ள பயிர்ச் செய்கையாளர்களுக்கு அல்லது உற்பத்தி வகுத்தமைத்தலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இவ் உதவித் திட்டத்திற்காக விண்ணப்பிக்க முடியும். அவர்கள், இயந்திரோபகரண வசதிகளை அல்லது திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அறுவடைக்குப் பிந்திய வகுத்தமைத்தல் வசதிகளுக்காக நிதி உதவிகளைப் பெறத் தகுதி பெறுகின்றனர்.

**2014 ஆம் வருடத்தில் அறுவடைக்குப் பிந்திய உதவித் திட்டத்தின் முன்னேற்றம் வருமாறு:**

| | **அலகு** | **2014** |
|---|---|---|
| 1. | வகுத்தமைத்தல் நிலையங்கள் | 55 |
| 2. | ஆவியாதல் மூலம் எண்ணெய் பிரித்தெடுக்கும் அலகுகள் | 14 |
| 3. | மிளகுக் கொட்டைகளை பிரித்து வேறாக்கும் இயந்திரம் | 27 |
| 4. | வெந்நீர் பரிகாரத் தொகுதிகள் | 29 |
| 5. | உலர்த்தும் இயந்திரங்கள் | 7 |
| 6. | பாதுகாக்கப்பட்ட களங்கள் | 2 |
| 7. | தரப்படுத்தல் இயந்திரங்கள் (Graders) | 1 |
| 8. | தரப்படுத்தல் இயந்திரங்கள் (Shifters) | 1 |
| 9. | கோப்பி தோல் உரிக்கும் இயந்திரங்கள் | 3 |
| 10. | வெள்ளை மிளகு உற்பத்தி இயந்திரங்கள் | 12 |
| 11. | பிற | 7 |
| 12. | கறுவா தகர்க்கும் தொகுதிகள் | 1,100 |

குறிப்பாக கறுவாச் செய்கை தொடர்பில் முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்ற கறுவா தகர்ப்பவர்களுக்கு நிலவுகின்ற பற்றாக்குறையை குறைப்பதற்காக கறுவா தகர்ப்பவர்களுக்காக பயிற்சி அளிக்கப்படுவதுடன், பயிற்சி பெறும் எல்லோருக்கும் கறுவா தகர்க்கும் உபகரணத் தொகுதி வீதம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்கமைய 2014 ஆம் வருடத்தில் 1,008 கறுவா தகர்ப்பவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**7.2.2.6. மனித வள அபிவிருத்தி**

இற்றைப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத் தகவல்கள் ஊடாக விவசாயிகளினதும் பிற தரப்பினர்களதும் அறிவையும், திறன்களையும் விருத்தி செய்வதற்காகவும், ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கையின் போதும் உற்பத்தி வகுத்தமைத்தலின் போதும் விருத்தி செய்யப்பட்ட விவசாய நடைமுறைகளுக்கு ஒத்திசைவதற்காகவும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, அந்தந்த மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளரினால் அவரது உதவித் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் இணைந்து விவசாயப் பயிற்சி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்படுகின்றது. இப் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குத் தேவையான வளவாளர்களும் ஏனைய வசதிகளும் ஆராய்ச்சிப் பிரிவினால் வழங்கப்பட்டன. இதற்கமைய 2014 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல்கள் வருமாறு:

| **செயற்பாடுகள்** | **பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை** | **பங்குபற்றியோரின் எண்ணிக்கை** |
|---|---|---|
| விவசாயிகள் பயிற்சியும் வெளிக்கள நாட்களும் | 3,065 | 86,482 |
| உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி | 568 | 4,394 |

**7.2.2.7. சேதனப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம்**

சர்வதேச சந்தையில் சேதனப் பயிர்ச் செய்கை உணவு வகைகளுக்குக் காணப்படுகின்ற அதிகரித்த கேள்வியைக் கருத்திற் கொண்டு திணைக்களத்தினால் **1998** ஆம் வருடத்தில் சேதனப் பயிர்ச் செய்கை உணவு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சேதனப் பயிர்ச் செய்கையுடன் இணைந்த அடிப்படை அம்சங்கள் தொடர்பாக பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தெளிவூட்டல், சாதனைகளைப் படைப்பதற்காக அவர்களை ஊக்குவித்தல், சேதனப் பசளைப் பாவனையும் பீடை முகாமைத்துவமும், ஊக்குவிப்பு, சுத்தம் சுகாதாரம் பேணப்பட்ட வகுத்தமைத்தல் குழுமங்களுக்கு உதவியளித்தல், நியாயமான விலையை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் ஏற்றுமதியாளர்களைத் தொடர்புபடுத்தல் என்பன திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்தது.

**2014 சேதனப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் வருமாறு:**

| | **பயிர்** | **பயிர்ச் செய்கை நிலப்பரப்பு (ஹெக்டயார்)** |
|---|---|---|
| 1. | கறுவா | 44.5 |
| 2. | மிளகு | 4.1 |
| 3. | கராம்பு/ சாதிக்காய் | 0.6 |
| | **மொத்தம்** | **49.2** |

2014 ஆம் வருடத்தில் சேதனப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ரூ. 0.43 மில்லியன் நிதி முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

**7.2.2.8. மக்கள் தொடர்பாடலும், பிரசார நடவடிக்கைகளும்**

2014 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளினதும், கண்காட்சிகளினதும் முன்னேற்றம் வருமாறு:

| **நிகழ்ச்சி** | **பௌதீக முன்னேற்றம்** | **நிதி முன்னேற்றம் (ரூ.மி.)** |
|---|---|---|
| தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 20 | 4.57 |
| கண்காட்சிகளின் எண்ணிக்கை | 1 | |

**7.2.2.9. வாசனைத் திரவியப் பயிர்த் தோட்டங்களை நடாத்திச் செல்லல்**

| | |
|---|---|
| பௌதீக இலக்கு/ முன்னேற்றம் | 4 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 3.74 |

**7.2.2.10. வீட்டுத் தோட்ட மட்டத்தில் செடிகளை விநியோகித்தல்**

சிறியளவிலான வீட்டுத் தோட்ட உரிமையாளர்களுக்கு பொருளாதார ரீதியில் விளைவுப் பெருக்கமுடைய வீட்டுத் தோட்டமொன்றை அமைத்துக் கொள்வதற்காக, தமது வீட்டுத் தோட்டத்திற்குத் தேவையான கறுவா, மிளகு, கோப்பி, கமுகு, கொறுக்காய், சாதிக்காய், கராம்பு முதலான செடிகள் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விநியோக்கிக்கப்படுகின்றது. இதன் கீழ் 2014 ஆம் வருடத்தில் 580,246 செடிகள் விவசாயிகளுக்கு விநியோக்கிகப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**7.2.2.11. வர்த்தக ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கை அலகுகளை நிறுவுதல்**

ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கை ஊடாக விவசாயிகளின் பொருளாதார மட்டத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படுகின்றது. அந்தந்தப் பயிருக்காக கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்ற பிரதேசங்களிலிருந்து ½ ஏக்கர் தொடக்கம் 2 ½ ஏக்கர் வரை காணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்காகச் செலவாகும் தொகையில் 50% வீதத்தை, ரூ. 30,000/- எனும் உச்ச எல்லைக்குக் கட்டுப்பட்டு மீளளிக்கப்படும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ் வருடத்தில் 903 ஏக்கர் நிலப்பரப்பில் 853 வர்த்தக ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கை அலகுகள் நிறுவப்பட்டன.

**7.2.2.12. இல்லப் பொருளாதார அலகுகள்**

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தரத்தில் சிறந்த ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்திகளை வகுத்தமைப்பதையும், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை சந்தைக்கு விநியோகிப்பதையும் நோக்காகக் கொண்டு, அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப உபகரணத் தொகுதிகளும், இயந்திரங்களும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. அதற்கமைய 29 இல்லப் பொருளதார அலகுகள் சார்பில் ரூ. 0.815 மில்லியன் நிதி முதலீட்டு உதவியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

**7.2.2.13. செடி உற்பத்திக்காக நிழல் வலை மடுவங்களை அமைத்தல்**

தரத்தில் சிறந்த செடிகளை உற்பத்தி செய்யும் பொருட்டு, 10 நிழல் வலை மடுவங்களை அமைப்பதற்காக ரூ. 1.26 மில்லியன் நிதி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

**7.2.3. ஆராய்ச்சிப் பிரிவு**

ஆராய்ச்சிப் பிரிவின் தொழில்நுட்பச் செயற்பாடுகளும் ஒழுங்கமைப்பும் மேலதிக பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி) அவர்களின் மேற்பார்வையில் இயங்குவதுடன், இவ் ஆராய்ச்சிப் பிரிவினுள், விடயம்சார் ஆராய்ச்சி அலகு, பொருளாதார ஆராய்ச்சி அலகு, செடிப் பாதுகாப்பு அலகு ஆகிய மூன்று பிரதான அலகுகள் அடங்கும். விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதினூடாக ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தி, உற்பத்தி விளைவுப் பெருக்கம், தரம் என்பவற்றை மேம்படுத்துவதற்காக பொருத்தமான தொழில்நுட்ப முறைகளை ஊக்குவிப்பதற்காக மாத்தளை மத்திய ஆராய்ச்சி நிறுவனமும், ஆறு உப ஆராய்ச்சி நிறுவனங்களும் தொடர்ந்தும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

**2014 ஆம் வருடத்தில் அமுல் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் வருமாறு:**

| | செயற்பாடு | எண்ணிக்கை | பௌதீக முன்னேற்றம் (%) | நிதி இலக்கு (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|
| 1. | பயிர்ச் செய்கை நிலப்பரப்பைக் கூட்டுதல் | 11 | 95% | 2.6 | 2.13 |
| 2. | உற்பத்திச் செலவைக் குறைத்தல் | 20 | 95% | 5.5 | 4.51 |
| 3. | செடிப் பாதுகாப்பு ஆராய்ச்சி | 23 | 96% | 4.5 | 3.69 |
| 4. | உற்பத்தி விளைவுப் பெருக்கத்தை அதிகரித்தல் | 54 | 95% | 24.3 | 19.93 |
| 5. | பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் | 05 | 97% | 1.6 | 1.31 |
| 6. | உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல் | 23 | 95% | 4.5 | 3.69 |
| 7. | சமூக பொருளாதார, சந்தைப்படுத்தல் தொடர்பான ஆராய்ச்சிகள் | 03 | 90% | 1.3 | 1.07 |

## 7.3 கமநல அபிவிருத்தித் திணைக்களம்

**கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பங்களிப்பு**

விவசாய நிலங்கள் சார்ந்த செய்கை பண்ணக் கூடிய எல்லாக் காணிகளையும் விளைவுப் பெருக்கமுடைய விதத்தில் பயிர்ச் செய்கைகளுக்கு ஈடுபடுத்தி, கிராமிய விவசாய மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதையும், நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்டு, 2014 ஆம் வருடத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் கீழ்க் காணும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

**செய்கை பண்ணாது கைவிடப்பட்ட வயல் காணிகளை செய்கை பண்ணுவதற்கும், சிறிய நீர்ப்பாசனங்களைப் புனரமைப்பதற்குமான நிகழ்ச்சித் திட்டம்**

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுள் செய்கை பண்ணாது கைவிடப்பட்ட வயல் காணிகளை செய்கை பண்ணுவதற்கும், சிறிய நீர்ப்பாசனங்களைப் புனரமைப்பதற்குமான நிகழ்ச்சித் திட்டம் பிரதான இடம் வகிக்கின்றது. அரிசி ஏற்றுமதிப் பொருளாதாரமொன்றை இலக்காகக் கொண்டு தீவு முழுவதும் காணப்படுகின்ற நெற் செய்கைக்கு ஈடுபடுத்திக் கொள்ளக் கூடிய செய்கை பண்ணாது கைவிடப்பட்ட எல்லா வயல் காணிகளையும் மீண்டும் செய்கை பண்ணுவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதுடன், இதற்காக 2014 ஆம் வருடத்திற்கு ரூ. 2,450.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. இந் நிதி ஒதுக்கீடு மூலம் தீவின் 17 மாவட்டங்கள் உட்படுமாறு 2,642 அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டு, இவற்றுள் 1,937 கருத்திட்டங்களின் வேலைகள் முற்றாகப் பூர்த்தி செய்யப்பட்டன. இதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1,197.8 மில்லியனாகும். இவற்றின் மூலம் பயன்பெறும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 578,772 ஆகும்.



புனரமைக்கப்பட்ட மாத்தளை ஹெட்டிப்பொல ரத்கரல்வெவ குளம்



புனரமைக்கப்பட்ட ரத்மல்கொட கரகஸ்தென்ன அமுன - பொல்கஹவளை



புனரமைக்கப்பட்ட பொலநறுவை எக்கசைஸ்வெ குளம்



புனரமைக்கப்பட்ட பொலநறுவை கொல்லுர அமுன - பொல்கஹவளை புனரமைக்கப்பட்ட பொலநறுவை கொல்லுர

## கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களைப் பழுதுபார்த்தல்

கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களைப் பழுதுபார்ப்பதற்காக 2014 ஆம் வருடத்திற்கு ரூ. 30.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், தீவின் 17 மாவட்டங்கள் உட்படுமாறு 22 கருத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டதுடன், இதற்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 25.0 மில்லியனாகும். இதன் மூலம் பயன்பெறும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை சுமார் 419,381 ஆகும்.

## கமநல சேவை நிலையங்களைப் பழுதுபார்த்தல்

சேவைகளைப் பெற்றுக் கொள்ள வருகை தரும் விவசாய மக்களை ஊக்கமளிக்கும் விதத்தில் புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய பயிர்ச் செய்கை முறைகளை ஈடுபடுத்தி மாதிரிச் செய்கைகளுடன் புதிய திட்டமொன்றிற்கு ஏற்ப கமநல சேவை நிலையங்களை பழுதுபார்ப்பதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக 2014 ஆம் வருடத்திற்கு ரூ. 450.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், தீவின் 25 மாவட்டங்களும் உட்படுமாறு தீவு முழுவதும் அமைந்துள்ள கமநல சேவை நிலையங்களை பழுதுபார்ப்பதற்காக 677 கருத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டதுடன், இதற்காக ரூ. 397.0 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டது. இதன் மூலம் பயன்பெறும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை சுமார் 646,594 ஆகும்.



பழுதுபார்க்கப்பட்ட கிரிஎல்ல கமநல சேவை நிலையம்



குருவிட்ட கமநல சேவை நிலையத்தின் வேலியும், வாயிலும் பழுதுபாடது.

## புதிதாக கமநல சேவை நிலையங்களை அமைத்தல்

கமநல சேவை நிலையங்களைப் புதிதாக அமைப்பதற்காக 2014 ஆம் வருடத்தில் ரூ. 150.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், தீவின் 13 மாவட்டங்கள் உட்படுமாறு 18 கமநல சேவை நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. இதற்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 69.0 மில்லியனாகும். இதன் மூலம் பயன்பெறும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை சுமார் 12,731 ஆகும்.



புதிதாக அமைக்கப்பட்ட அம்பாறை பானம கமநல சேவை நிலையம்



புதிதாக அமைக்கப்பட்ட கிளிநொச்சி உருத்திரபுரம் கமநல சேவை நிலையம்

**உரக் களஞ்சியசாலைகளை அமைத்தல்**

உரக் களஞ்சியசாலைகளின் கொள்ளளவை அதிகரிப்பதையும், உர விநியோகத்தை சீராக மேற்கொள்வதையும் நோக்காகக் கொண்டு தீவின் 22 மாவட்டங்கள் உட்படுமாறு 25 உரக் களஞ்சியசாலைகளை (புதிதாக 24 களஞ்சியசாலைகளும் மீதி வேலை 01 களஞ்சியசாலையும்) அமைப்பதற்காக 2014 ஆம் வருடத்திற்காக ரூ. 50.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. இதன் கீழ் 22 உரக் களஞ்சியசாலைகளின் நிர்மாணப் பணிகள் முடிக்கப்பட்டதுடன், செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 39.3 மில்லியனாகும். இதன் மூலம் பயன்பெறும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை சுமார் 21,150 ஆகும்.



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வவுனியா மடுகந்த உரக் களஞ்சியசாலை



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மன்னார் தீவு உரக் களஞ்சியசாலை

**தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2014**

தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 ஆம் வருடத்திற்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ரூ. 24.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. இதன் கீழ் குருணாகல், புத்தளம், கேகாளை ஆகிய மாவட்டங்களில் அபிவிருத்திப் பணிகளுக்காகவும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிர்மாணப் பணிகளுக்காகவும் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 4.32 மில்லியனாகும்.

## கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினூடாக கீழ்க் காட்டப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

- மாத்தறை மாவட்டத்தில் 36 விவசாயப் பாதைகளை அமைப்பதற்காக ரூ. 12.0 மில்லியன் நிதி கமத்தொழில் அமைச்சினால் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டது. இதில் 13 விவசாயப் பாதைகள் அமைத்து முடிக்கப்பட்டதுடன், இதற்கான செலவு ரூ. 1.8 மில்லியனாகும்.
- தீவின் 06 மாவட்டங்களில் 43 சிறிய நீர்ப்பாசனங்களைப் புனரமைப்பதற்காக ரூ. 18.4 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டது.
- இதற்கு மேலதிகமாக வவுனியா, மொனறாகலை மாவட்டங்களில் 02 உரக் களஞ்சியசாலைகளுக்காக ரூ. 2.5 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டது.
- கமநல அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 03 மாவட்டங்களுக்குரிய 11 கருத்திட்டங்கள் சார்பில் ரூ. 0.61 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டது.

**<u>கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்:</u>**

| | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி.) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | வேலை முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை | செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|---|
| 1. | சிறிய நீர்ப்பாசன புனரமைப்பும், செய்கை பண்ணாது கைவிடப்பட்ட வயல் காணிகளை செய்கை பண்ணுதலும் | 2,450.0 | 2,642 | 1,937 | 674 | 1,197.8 |
| 2. | உரக் களஞ்சியசாலைகளை அமைத்தல் | 50.0 | 25 | 22 | 3 | 39.3 |
| 3. | கமநல சேவை நிலையங்களைப் பழுதுபார்த்தல் | 450.0 | 677 | 676 | 1 | 397.0 |
| 4. | மாவட்ட அலுவலகங்களையும் பிரதான அலுவலகத்தையும் பழுதுபார்த்தல் | 30.0 | 34 | 34 | 0 | 25.0 |
| 5. | புதிதாக கமநல சேவை நிலையங்களை அமைத்தல் | 150.0 | 18 | 9 | 9 | 69.0 |
| 6. | விசேட கருத்திட்டம் - திருகோணமலை மாவட்ட சிறிய நீர்ப்பாசனங்கள் | 256.26 | 68 | 30 | 38 | 138.0 |
| 7. | வனசீவராசிகள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திருகோணமலை யானை தடுப்பு வேலி அமைத்தல் | 46.94 | 43 | - | 43 | 11.4 |
| 8. | வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டம் | 55.0 | - | - | - | 51.4 |
| | **மொத்தம்** | 3,488.2 | 3,507 | 2,708 | 768 | 1,928.9 |

**புத்தரிசித் திருவிழா**

ஆதி காலம் தொட்டே இலங்கை மக்களின் பிரதான வாழ்வாதாரமாக விளங்கும் கமத்தொழிலைப் பிரதானமாகக் கொண்ட நெற் செய்கை மூலம் பெறப்படுகின்ற விளைச்சலை ஜயஸ்ரீ மகா போதிக்கு காணிக்கையாக்கும் வழக்கம் விவசாய மக்களின் உயர் நற்செயலாக விளங்கி வருகின்றது.

இவ் உயரிய நற்செயல் ***"புத்தரிசி விழா"*** எனும் பெயரில் தேசிய விழாவாக அரசாங்கத்தின் பூரண அனுசரணையில் வருடாந்தம் நடாத்தும் பொறுப்பு கமநல அபிவிருத்தித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதுடன், இதனை திணைக்களத்திற்குக் கிடைத்த மாபெரும் பாக்கியமென்றே கூறலாம். அதற்கமைய மாண்புமிகு பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினதும், பிரதி அமைச்சரினதும், அமைச்சின் செயலாளரினதும் பணிப்புரைகளுக்கு அமைய, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2014 ஏப்பிறல் மாதம் 10,11 ஆம் திகதிகளில் 47 வது தடவையாகவும் புத்தரிசித் திருவிழா அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் பௌத்த மக்களின் முக்கிய புனித இடமான ஜயஸ்ரீ மகாபோதிக்கு அருகாமையில் நடைபெற்றது.

இதன் போது நான்கு வாசல்களிலும் பால் பொங்குவதிலிருந்து புத்தரிசி ஊர்வலம் ஸ்ரீ மகா போதிக்கு அருகாமையில் வந்து காணிக்கையாக்கும் வரையிலான அனைத்துப் பணிகளும் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டன. தேன் பாணி, பசுணெய் காணிக்கை ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிலா அத்தோ குழுவினரால் நடாத்தப்பட்டது. தீவின் எல்லா கமநல சேவை நிலையங்கள் மூலமும் சேகரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட அரிசி அன்றைய தினம் காணிக்கையாக்கப்பட்டதுடன், அரிசி மற்றும் நிதியுதவி என்பன தீவு முழுவதும் அமைந்துள்ள கமநல அமைப்புகளினால் மேற்கொள்ளப்பட்டது. இம்முறை புத்தரிசித் திருவிழாவை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள், சபைகள், வடமத்திய மாகாண சபை, தனியார் நிறுவனங்கள் என்பன பாரிய பங்களிப்பைச் செய்தன. இதன் போது "தேசிய புத்தரிசித் திருவிழா" எனும் பெயரில் சஞ்சிகையொன்றும் வெளியிடப்பட்டது

## 7.4. இலங்கை ஹதபிம அதிகார சபை

இலங்கை ஹதபிம அதிகார சபை, 1975 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரகாரம், அப்போதைய கமத்தொழில் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்தல், குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையை (நட்சா நிறுவனம்) நிறுவுவதன் அடிப்படை நோக்கமாக, வெளிநாட்டு பெருந் தோட்டப் பொருளாதாரத்திற்குள் அகப்பட்டுக் கொண்டு பயன்படுத்துவதற்கரிதான காணி முறைமைகள் காரணமாக சேதத்திற்கு உள்ளாகியிருந்த மத்திய மலை நாட்டின் சூழல் முறைமையை மீளக் கட்டியெழுப்புவதாக இருந்ததுடன், இக் காணிகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வந்த விவசாயிகள் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை வழமைக்குக் கொண்டு வருவதும் முக்கிய நோக்கமாகக் காணப்பட்டது. இவ் இலக்கை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் சுமார் 15 வருடங்களாக கேகாளை, கண்டி மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்ட இவ் அதிகார சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உலக வங்கியும், உலக உணவு மற்றும் விவசாய அமைப்பும் உதவி வழங்கின.

1989 இல் இக் கருத்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுற்றாடல், சமூக, பொருளாதார சாத்திய வள ஆய்வின் பின் இவ் அதிகார சபையின் கருத்திட்ட ஆளுகைப் பிரதேசங்களை விஸ்தரிப்பதற்கும், இதற்காக உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் **(WFO)** உதவியைப் பெற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து இந் நிறுவனத்தின் உத்தியோகபூர்வப் பெயர் இலங்கை ஹதபிம அதிகார சபை எனத் திருத்தப்பட்டது. அன்றிலிருந்து சுமார் 05 வருட காலமாக அமுல் செய்யப்பட்ட அதிகார சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வழங்கப்படுகின்ற உலக

உணவு அமைப்பின் காலப்பகுதி முடிவடைந்ததுடன், பின்னர் திறைசேரி நிதி ஒதுக்கீடுகளின் கீழ் அதிகார சபையின் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்தும் அமுல் செய்யப்பட்டன.

அதற்கமைய திறைசேரியின் வருடாந்த நிதி ஒதுக்கீடுகளின் கீழ் அதிகார சபையின் வருடாந்த அபிவிருத்தித் திட்டம் வகுக்கப்படுவதுடன், 2014 ஆம் வருடத்திற்காக திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ரூ. 70.0 மில்லியன் நிதியை ஈடுபடுத்தி, 4,000 ஹெக்டயார் காணியை பேணிப் பாதுகாத்து அபிவிருத்தி செய்யும் பொருட்டு இலக்கு வைக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 12,500 விவசாயக் குடும்பங்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

சமூகத்தின் பங்களிப்பை உச்ச மட்டத்தில் பெற்றுக் கொண்ட வண்ணம் 6 மாவட்டங்களைச் சேர்ந்த 40 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களூடாக 2014 ஆம் வருடத்தில் அடையப் பெற்ற செயலாற்றுகை தொடர்பான சுருக்கமான குறிப்பு வருமாறு:

**அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்வதில் செயலாற்றுகை**

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வினைத்திறன் மிக்கவாறும், உற்பத்தி விளைவுப் பெருக்கமுடையதாகவும் அமுல் செய்வதை நோக்காகக் கொண்டு, பிரதான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் துணை அபிவிருத்தித் தொழிற்பாடுகளாக அடையாளம் காணப்பட்டு அமுல் செய்யப்பட்டன. அதற்கமைய, குறித்த பிரதான மற்றும் துணை அபிவிருத்தித் தொழிற்பாடுகளூடாக இச் செயலாற்றுகை அடையப் பெற்றுள்ளது.

### 7.4.1. அடிப்படை அபிவிருத்தித் திட்டமிடல்

**i. சமூக பங்குபற்றுதலுடனான அபிவிருத்தித் திட்டமிடல்**

இலங்கை ஹதபிம அதிகார சபையினால் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இனங் காணப்படுகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குரிய கிராமங்களுக்கு, விவசாய அபிவிருத்தித் திட்டம், அதனுடன் தொடர்புடைய அபிவிருத்தித் தொழிற்பாடுகள் தொடர்பான கால எல்லைகளை வகுத்தல், இக் கிராமங்களின் மனித வளங்களையும் பௌதீக வளங்களையும் இனங் காண்பதற்காக வெளிக்கள நிகழ்ச்சித் திட்டங்களை கிராம மட்டத்தில் அமுல் செய்வதற்கு 2014 ஆம் வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.



| இலக்கு | | முன்னேற்றம் | | பெறுபேறு | பயன்கள் |
|---|---|---|---|---|---|
| பௌதீக | நிதி (ரூ.மி.) | பௌதீக | நிதி (ரூ.மி.) | | |
| 80 நிகழ்ச்சித் திட்டங்கள்<br>12,500 குடும்பங்கள் பங்குபற்றுதல் | 0.4 | 80 நிகழ்ச்சித் திட்டங்கள்<br>11,400 விவசாயக் குடும்பங்கள் | 0.381 | ஒட்டுமொத்த நிகழ்ச்சித திட்டத்திலும் 11,400 விவசாயக் குடும்பங்களின் பங்குபற்றுதலுடன் அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடுதல் | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சமூகப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்.<br>கிராமங்களில் மனித வளப் பயன்பாடு.<br>கிராமிய சமூக அபிவிருத்தியின் பங்காளர்களாகச் செயற்படுதல். |

ii. **தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சி**

இலங்கை ஹதபிம அதிகார சபையினால் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இனங் காணப்படுகின்ற கிராமங்களில் வசிக்கும் இளைஞர் யுவதிகளின் ஆற்றல்களையும், திறமைகளையும் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன், இலக்கு வைக்கப்பட்ட கிராமங்களில் சமூகப் பங்களிப்புடனான அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பில் மிக ஆர்வமும், நம்பிக்கையும் கொண்டுள்ள இளைஞர் யுவதிகளை இனங் கண்டு, அவர்களுக்கென இவ் விடயப் பரப்பு தொடர்பாக சிறந்ததொரு பயிற்சியை வழங்கியதன் பின் இலங்கை ஹதபிம அதிகார சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை கிராம மட்டத்தில் அமுல் செய்யும் சமூக ஒருங்கிணைப்பாளராக செயற்படுவதற்காக ஈடுபடுத்தப்படுகின்றனர்.

| இலக்கு | | முன்னேற்றம் | | பெறுபேறு | பயன்கள் |
|---|---|---|---|---|---|
| பௌதீக | நிதி (ரூ.மி.) | பௌதீக | நிதி (ரூ.மி.) | | |
| 07 நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.91 | 07 நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.906 | 360 கிராமப்புற இளைஞர் யுவதிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சி அளிக்க முடிந்தது. | இளமையின் படைப்பாற்றல்களை அபிவிருத்தித் தொழிற்பாட்டிற்கு ஈடுபடுத்திக் கொள்ளல்.<br>இளைஞர் யுவதிகளை இந் நாட்டுப் பிரஜைகளாக சமூகமயப்படுத்தல்.<br>ஹதபிம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வினைத்திறன் மிக்கவாறு அமுல் செய்தல். |
| 400 சமூக உத்தியோகத்தர்கள் | | 360 சமூக உத்தியோகத்தர்கள் | | | |





### 7.4.2. மண்வளப் பாதுகாப்பும் நீரேந்து பிரதேச முகாமைத்துவமும்

i. **மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் தொழில்நுட்பப் பயிற்சி**

தமது காணி முறைமையில் காணப்படுகின்ற நில வேறுபாடுகளுக்கு அமைய பொருத்தமான மண்வளப் பாதுகாப்பு முறைகளை விஞ்ஞான ரீதியிலான அடிப்படையில் ஈடுபடுத்தும் பொருட்டு, விவசாயிகள் சமூகத்திற்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதை நோக்காகக் கொண்டு வெளிக்கள மட்டத்தில் இத் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

| இலக்கு | | முன்னேற்றம் | | பெறுபேறு | பயன்கள் |
|---|---|---|---|---|---|
| பௌதீக | நிதி (ரூ.மி.) | பௌதீக | நிதி (ரூ.மி.) | | |
| 80 நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.4 | 80 நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.359 | 80 பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் 10,250 விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மண்வளப் பாதுகாப்பு முறைகளை அறிமுகம் செய்தல். | புதிய தொழில்நுட்பங்களை விவசாய மக்களிடத்தில் கொண்டு செல்ல முடிந்தமை. |
| 12,500 விவசாயக் குடும்பங்கள் | | 10,250 விவசாயக் குடும்பங்கள் | | | மண்ணரிப்பைக் குறைக்கும் வகையில் தெளிவூட்டப்பட்ட விவசாயிகள் சமூகமொன்றைத் தோற்றுவிப்பதற்கு முடிந்தமை. |

ii. **மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான விவசாய உபகரணங்களை வழங்குதல்**



இலங்கை ஹதபிம அதிகார சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இனங் காணப்படுகின்ற விவசாயிகள் சமூகத்தில் பெரும்பாலானோர் குறைந்த வருமானமுடைய அல்லது அந்த வரையறைக்குட்பட்டவர்களாக இருப்பதுடன், இவ் விவசாயிகள் சமூகத்தை குறித்துரைக்கப்பட்ட கருத்திட்ட காலப் பணிச்சட்டத்திற்குள் ஈடுபடுத்துவதற்காக ஏதேனும் ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டுமாதலால், இலங்கை ஹதபிம அதிகார சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இனங் காணப்படுகின்றதும் அதே போன்று வெற்றிகரமாக மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முடிக்கப்பட்ட விவசாயிகளுக்காக விவசாய உபகரணமொன்றாக மண்வெட்டியொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| இலக்கு | | முன்னேற்றம் | | பெறுபேறு | பயன்கள் |
|---|---|---|---|---|---|
| பௌதீக | நிதி (ரூ.மி.) | பௌதீக | நிதி (ரூ.மி.) | | |
| 12,500 விவசாயக் குடும்பங்கள் | 8.45 | 10,000 விவசாயக் குடும்பங்கள் | 6.098 | 2014 ஆம் வருடத்தில் 10,000 விவசாயக் குடும்பங்களுக்கு 10,000 மண்வெட்டிகளைப் பெற்றுக் கொடுக்க முடிந்தது. | இலக்கு வைக்கப்பட்ட விவசாயிகள் சமூகத்தை குறித்துரைக்கப்பட்ட கருத்திட்ட காலப் பணிச்சட்டத்திற்குள் ஈடுபடுத்தி மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு முடிந்தது. |
| 12,500 மண்வெட்டிகள் | | 10,000 மண்வெட்டிகள் | | | |

iii. **மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சார்பில் கொடுப்பனவு செலுத்துதல்**

இனங் காணப்பட்ட பிரதேசங்களில் தற்சமயம் இடம்பெற்று வருகின்ற மண்ணரிப்பு நிலைமையை கட்டுப்படுத்தி காணிகளைப் பேணிப் பாதுகாப்பதே இலங்கை ஹதபிம அதிகார சபையின் அடிப்படையானதும், பிரதானமானதுமான பணியாகும். இதற்கமைய 2014 ஆம் வருடத்தில் இவ்வாறு அபிவிருத்தி செய்வதற்காக இனங் காணப்பட்ட காணிகளின் பரப்பளவு 4,000 ஹெக்டயார் ஆகும்.

இதில் 3,925.5 ஹெக்டயார் காணிகளை முறையான மண்வளப் பாதுகாப்பு முறைகளை ஈடுபடுத்தி பேணிப் பாதுகாப்பதற்கு முடிந்தது. இதற்காக வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் ரூ. 30.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 29.4 மில்லியனாகும்.






| இலக்கு | | முன்னேற்றம் | | பெறுபேறு | பயன்கள் |
|---|---|---|---|---|---|
| பௌதீக | நிதி (ரூ.மி.) | பௌதீக | நிதி (ரூ.மி.) | | |
| 4,000 ஹெக்டயார் | 30.0 | 3,925.2 ஹெக்டயார் | 29.439 | 3,925.2 ஹெக்டயார் காணியை மண்வளப் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு அபிவிருத்தி செய்வதற்கு முடிந்தது. | மண்ணரிப்பு நிலைமை கட்டுப்படுத்தப்படுதல்.<br>காணிகளின் உற்பத்தி விளைவுப் பெருக்கம் அதிகரித்தல்.<br>சுற்றாடல் சமநிலை பாதுகாக்கப்படுதல்.<br>மத்திய மலைநாட்டில் சுற்றாடல் புறத்தூண்டுதல் மிக்க பிரதேசங்கள் பேணிப் பாதுகாக்கபடுதல். |
| 12,500 விவசாயக் குடும்பங்கள் | | 10,000 விவசாயக் குடும்பங்கள் | | | |

### 7.4.3. மண்வளப் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முறையாக முடிக்கப்பட்ட இக் காணி முறைமைகளை பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு, மண்ணில் இழக்கப்பட்ட மண்ணின் வளத்தை மீண்டும் ஏற்படுத்துதல் வேண்டும். இதற்கு மிகவும் பொருத்தமான நடவடிக்கையாக இருப்பது, மண்ணுடன் சேதனப் பகுதிகளை சேர்ப்பதாகும். இது தொடர்பில் கவனம் செலுத்திய அதிகார சபை 2014 ஆம் வருடத்தில் சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்தது.

**i. தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சிகள்**

சேதனப் பசளை உற்பத்தியையும், பாவனையையும் விஞ்ஞான ரீதியிலான பின்னணியின் கீழ் மேற்கொள்வதற்காக 2014 ஆம் வருடத்தில் இலக்கு வைக்கப்பட்ட விவசாயிகள் சமூகத்திற்காக தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சிகள் வெளிக்கள மட்டத்தில் நடாத்தப்பட்டன.

| இலக்கு | | முன்னேற்றம் | | பெறுபேறு | பயன்கள் |
|---|---|---|---|---|---|
| பௌதீக | நிதி (ரூ.மி.) | பௌதீக | நிதி (ரூ.மி.) | | |
| 80 நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.4 | 80 நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.326 | 80 பயிற்சி நிகழ்ச்சிகள் ஊடாக 7,139 விவசாயிகளுக்காக புதிய தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. | 7,139 விவசாயக் குடும்பங்களுக்கு புதிய தொழில்நுட்பப் பயிற்சிகளை அளிப்பதினூடாக விஞ்ஞான ரீதியிலான சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் மேற்கொள்வதற்கு முடிந்தது. |
| 6,500 விவசாயக் குடும்பங்கள் | | 7,139 விவசாயக் குடும்பங்கள் | | | |

### ii. பயன்பாட்டுப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல்

சேதனப் பசளை உற்பத்திக்காக இலக்கு வைக்கப்பட்ட விவசாயிகள் சமூகத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, 2014 ஆம் வருடத்தில் இவ் விவசாயிகளுக்கு சேதனப் பசளை உற்பத்திக்குத் தேவையான அடிப்படை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

| இலக்கு | | முன்னேற்றம் | | பெறுபேறு | பயன்கள் |
|---|---|---|---|---|---|
| பௌதீக | நிதி (ரூ.மி.) | பௌதீக | நிதி (ரூ.மி.) | | |
| 6,500 வசாயக் குடும்பங்கள் | 4.575 | 6,500 விவசாயக் குடும்பங்கள் | 3.195 | 6,500 விவசாயிகளுக்கு விவசாய உபகரணமொன்றாக 6,500 சவல்கள் விநியோகிக்கப்பட்டன | 6,500 விவசாயக் குடும்பங்களை சேதனப் பசளை உற்பத்திக்கும், பாவனைக்கும் ஈடுபடுத்துவதற்கு முடிந்தது. |
| 6,500 பயன்பாட்டுப் பொருட்கள் | | 6,500 விவசாய உபகரணங்கள் | | | |

### iii. சேதனப் பசளை உற்பத்தி

உயர் தொழில்நுட்பப் பயிற்சியையும், தேவையான பயன்பாட்டுப் பொருட்களையும் பெற்றுக் கொடுத்ததன் பின், சேதனப் பசளை உற்பத்திக்கு விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டனர். அதற்கமைய பின்வரும் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.





| இலக்கு | முன்னேற்றம் | பெறுபேறு | பயன்கள் |
|---|---|---|---|
| பௌதீக | பௌதீக | | |
| 6,500 விவசாயக் குடும்பங்கள் | 6,500 விவசாயக் குடும்பங்கள் | 6,500 விவசாயக் குடும்பங்களின் சமூகப் பங்களிப்பைப் பெற்று 6,500 மெற்றிக் தொன் சேதனப் பசளையை உற்பத்தி செய்தல். | இலக்கு வைக்கப்பட்ட விவசாயிகள் சமூகத்தை குறித்துரைக்கப்பட்ட கருத்திட்ட காலப் பணிச்சட்டத்திற்குள் ஈடுபடுத்தி மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு முடிந்தது. |
| 6,500 மெற்றிக் தொன் சேதனப் பசளை | 6,500 மெற்றிக் தொன் சேதனப் பசளை | | |

### 7.4.4. காணி அபிவிருத்தியும், பயிர் உற்பத்தி விளைவுப் பெருக்கமும் நிகழ்ச்சித் திட்டம்

மண்வளப் பாதுகாப்பு, மண்வள மீள் நிர்மாண நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்வதினூடாக, பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான நிலமாக மாற்றப்பட்ட காணிகள் சார்பில் அக் காணிகளுக்குப் பொருத்தமான பயிர்ச் செய்கை முறைகளை அறிமுகம் செய்வதற்கு 2014 ஆம் வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**i. தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சிகள்**

மிகச் சரியான விஞ்ஞான ரீதியிலான முறைகளுக்கு அமைய தமது காணிகளில் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்வதற்கு விவசாய மக்களை ஈடுபடுத்துவதை நோக்காகக் கொண்டு வெளிக்கள மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

| இலக்கு | | முன்னேற்றம் | | பெறுபேறு | பயன்கள் |
|---|---|---|---|---|---|
| பௌதீக | நிதி (ரூ.மி.) | பௌதீக | நிதி (ரூ.மி.) | | |
| 80 நிகழ்ச்சித் திட்டங்கள்<br>6,500 விவசாயக் குடும்பங்கள் | 0.4 | 68 நிகழ்ச்சித் திட்டங்கள்<br>5,422 விவசாயக் குடும்பங்கள் | 0.342 | 68 பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் 5,422 விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கையும், காணி முகாமையும் தொடர்பாகப் பயிற்சியளித்தல். | தமது மட்டுப்படுத்தப்பட்ட நிலத்தைக் கொண்ட காணி அலகுகளை பொருத்தமான தொழில்நுட்ப முறையின் கீழ் அபிவிருத்தி செய்து உற்பத்தி விளைவுப் பெருக்கமுடைய அலகொன்றாக மாற்றியமைப்பதற்காக விவசாய மக்களை ஈடுபடுத்துவதற்கு முடிந்தது. |

**ii. நடுகைப் பொருட்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்**

2014 ஆம் வருடத்தில் கீழ்க் காட்டப்பட்டவாறு விவசாயிகளுக்கு விதை மற்றும் நடுகைப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன.

| | விதை இனம் | அளவு (கி.கி.) | செலவு செய்யப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | மிளகாய் | 161 | 531,300.00 |
| 2. | குரக்கன் | 141 | 28,200.00 |
| 3. | கவுப்பி | 823 | 222,210.00 |
| 4. | உளுந்து | 66 | 16,500.00 |
| 5. | பயற்றம் | 809 | 2,168,120.00 |
| 6. | வெண்டிக்காய் | 216 | 237,600.00 |
| 7. | கத்தரிக்காய் | 79 | 322,320.00 |
| 8. | அவரை | 70 | 147,000.00 |
| 9. | மஞ்சள் | 14,425 | 1,065,370.00 |

<u>பெறுபேறு:</u> சுமார் ரூ. 5.71 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு 5,720 விவசாயக் குடும்பங்களுக்கு விதை மற்றும் நடுகைப் பொருட்களை விநியோகிக்க முடிந்தது.

**பயன்கள்:** இலக்கு வைக்கப்பட்ட விவசாயிகள் சமூகத்தினால் பேணிப் பாதுகாக்கப்பட்ட காணி அலகுகளை உற்பத்தி விளைவுப் பெருக்கமுடைய விவசாய உற்பத்தி அலகுகளாக மாற்றியமைக்கும் ஆரம்ப கட்டத்தை துவக்கி வைப்பதற்கு தலையிடுவதன் மூலம் தமது காணியை நிலைபேறான விதத்தில் அபிவிருத்தி செய்வதற்காக விவசாயிகளை ஈடுபடுத்துவதற்கு முடிந்தது.





### 7.4.5. பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட மாதிரிச் செய்கை நிகழ்ச்சித் திட்டம்

தாம் வாழும் சுற்றுப்புறச் சூழல் தொடர்பாகவும் சுற்றாடலைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பாகவும் பாடசாலைச் சமூகத்தைத் தெளிவூட்டுவதை நோக்காகக் கொண்டு, பாடசாலைச் சமூகத்தை இணைத்துக் கொண்டு இனங் காணப்பட்ட பாடசாலைகளில் சுற்றாடலைப் பேணிப் பாதுகாக்கும் மாதிரிகளை நிறுவுவதற்கு இலங்கை ஹதபிம அதிகார சபை 2014 ஆம் வருத்தில் நடவடிக்கை எடுத்தது.

**i. <u>தெளிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்</u>**

சுற்றாடலைப் பேணிப் பாதுகாத்தல், காணி முகாமைத்துவம் என்பன தொடர்பில் மட்டுமல்லாது, சுற்றாடலையும் இயற்கை வளங்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய காலத்தின் தேவை தொடர்பாக பாடசாலைச் சமூகத்திற்கு அறிவைப் பெற்றுக் கொடுப்பதனை நோக்காகக் கொண்டு, பாடசாலைச் சமூகத்திற்கென 50 தெளிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டு, குறித்த பாடசாலைகளில் இதனை அமுல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**ii. <u>மாதிரி அலகுகளை நிறுவுதல்</u>**

மேற்குறிப்பிடப்பட்டவாறு தேவையான பயிற்சிகளையும், தேவையான விவசாய உபகரணத் தொகுதிகளையும் பெற்றுக் கொடுத்ததன் பின், மாதிரி அலகுகளை நிறுவுவதற்கு பாடசாலைச் சமூகம் ஈடுபடுத்தப்படுகின்றது. இதற்காக குறித்த பாடசாலைகளுக்கு தேவையான விவசாய உபகரணங்களையும் அதே போன்று பயிர்ச் செய்கைக்குத் தேவையான செடிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் கீழ் 50 பாடசாலைகள் இனங் காணப்பட்டு மாதிரி அலகுகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக 2014 ஆம் வருடத்தில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 0.344 மில்லியனாகும்.

| | பொருள்/ உபகரணம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மண்வெட்டி | 150 |
| 2. | அலவாங்கு | 100 |
| 3. | முள் மண்வெட்டி | 100 |
| 4. | நீர் தெளிக்கும் வாளிகள் | 100 |
| 5. | இறப்பர் குளாய் (100 அடி) | 50 |
| 6. | வீட்டுத் தோட்ட விதைப் பக்கற் | 50 |

**<u>பெறுபேறு:</u>** இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இனங் காணப்பட்ட 50 பாடசாலைகளில் மண்வளப் பாதுகாப்பு பயிர்ச் செய்கை, சுற்றாடல் பேணிப் பாதுகாத்தல் என 50 அலகுகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அடைய முடிந்த நேரடி விளைவாகும்.

**<u>பயன்கள்:</u>** மண்ணரிப்பினாலும் மண் கழுவிக் கொண்டு செல்வதினாலும் ஏற்படக் கூடிய மோசமான விளைவுகள் தொடர்பாகவும், இந் நிலையைக் கட்டுப்படுத்தி நிலைபேறான விதத்தில் சுற்றாடல் சமநிலையைப் பேணுவது தொடர்பாகவும் நல்ல தெளிவையும் அறிவையும் உடைய சமூகமொன்றை உருவாக்குவதற்கு முடிந்தமை.

### 7.4.6. இல்லம் சார்ந்த போசாக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்வதற்காக இலக்கு வைக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த கிராமிய மக்களின் போசாக்கில் விருத்தியை ஏற்படுத்தி, அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளைத் தோற்றுவித்து இல்லப் பொருளாதாரத்தை வலுவூட்டும் நோக்குடன், ஓரளவு சுற்றித் திரியும் முறைக்கு வளர்க்கக் கூடியவாறு இனப் பெருக்கம் செய்யப்பட்ட ஓரளவு வீடு சார்ந்த கோழிக் குஞ்சுகளை இனங் காணப்பட்ட விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் 2014 ஆம் வருடத்திலும் அமுல் செய்யப்பட்டது. இதற்காக 2014 ஆம் வருடத்திற்கு ரூ. 3.755 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதில் ரூ. 3.550 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு கீழ்க் காட்டப்பட்டவாறு மாவட்ட அடிப்படையில் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டன.

| | மாவட்டம் | விநியோகிக்கப்பட்ட கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கண்டி | 1,370 |
| 2. | மாத்தளை | 2,290 |
| 3. | நுவரெளியா | 1,070 |
| 4. | பதுளை | 800 |
| 5. | கேகாளை | 1,230 |
| 6. | இரத்தினபுரி | 1,120 |
| 7. | குருணாகல் | 740 |
| 8. | மாத்தறை | 540 |
| 9. | களுத்துறை | 360 |
| | **மொத்தம்** | 9,520 |



**<u>பெறுபேறு:</u>** குறைந்த போசாக்கு மட்டத்தையும், குறைந்த பொருளாதார மட்டத்தையும் உடைய கிராமியக் குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகளை வழங்குவதற்கு முடிந்தமை.

**<u>பயன்கள்:</u>** 10,000 விவசாயக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு அமுல் செய்யப்பட்ட இக் கருத்திட்டத்தினூடாக கிராமிய தொழில் வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதற்கான வாய்ப்புகள் கிட்டுதல், கிராமிய மக்களின் போசாக்குத் தரத்தில் விருத்தியை ஏற்படுத்த முடிந்தமை. இதற்காக கூடுதல் ஆர்வமுள்ள விவசாயக் குடும்பங்களை வணிக மட்டம் வரை விருத்தி செய்வதற்கு முடிந்தமையும் இக் கருத்திட்டத்தின் மூலம் அடையப் பெற்ற மற்றுமொரு பிரதான பயனாகும்.

### 7.4.7. விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்

இலங்கை ஹதபிம அதிகார சபையினால் அபிவிருத்தி செய்யப்படுகின்ற கிராமங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளை இடைத் தரகர்களின் தலையீடின்றி விற்பனை செய்து கொள்வதென்பது, இக் கிராமிய மக்கள் முகங் கொடுக்கும் பிரதான பிரச்சினையாகும். இதற்குத் தீர்வாக 2005 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை ஹதபிம அதிகார சபையின் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் பல்வேறு கட்டங்களையும் தாண்டி தற்சமயம் இலங்கை ஹதபிம அதிகார சபையின் பிரதான வருமானம் ஈட்டல் கருத்திட்டமாக மாற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இக் கருத்திட்டத்தைத் தொடர்ந்தும் விஸ்தரிப்பதை நோக்காகக் கொண்டு புதிய சந்தைப்படுத்தல் அலகொன்றை இங்கிரிய பிரதேசத்தில் நிறுவுவதற்காக ரூ. 5.586 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதில் ரூ. 5.585 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு இச் சந்தைப்படுத்தல் அலகு நிறுவப்பட்டுள்ளது.

### 7.4.8. மனித வள அபிவிருத்தி

இலங்கை ஹதபிம அதிகார சபையில் பணியாற்றும் பணியாட் தொகுதியினரதும், வெளிக்களப் பணியாட் தொகுதியினரதும் திறமைகளை வளர்க்கும் நோக்குடன் பணியாட் தொகுதி பயிற்சி நிறுவகத்தின் ஒருங்கிணைப்பில் விசேட பயிற்சி நிகழ்ச்சியொன்று அமுல் செய்யப்பட்டது. அதற்கமைய, ரூ. 0.137 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு 30 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 7.4.9. ஊடக மற்றும் பிரசார ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்

திறைசேரி நிதி ஒதுக்கீடுகளையும், கமத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளையும் ஈடுபடுத்தி, இலங்கை ஹதபிம அதிகார சபையினால் தீவு முழுவதும் அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் தேசிய மட்டத்தைத் தெளிவூட்டும் நோக்குடன் பல்வேறு பிரசார ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் அமுல் செய்யப்பட்டதுடன், இதற்கு மேலதிகமாக, கமத்தொழில் அமைச்சினால் சமகாலத்தில் அமுல் செய்யப்படுகின்ற தேசிய மட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடக பிரசார நடவடிக்கைகளும் இலங்கை ஹதபிம அதிகார சபையினால் அமுல் செய்யப்பட்டது.

| | நிகழ்ச்சி | செலவு செய்யப்பட்ட தொகை (ரூ.மி.) |
|---|---|---|
| 1. | தேசத்திற்கு மகுடம் கண்காட்சி | 0.381 |
| 2. | தேசிய கமக்காரர் வாரம் கண்காட்சி | 0.748 |
| 3. | பிற இலத்திரனியல் அச்சு ஊடகங்களுக்காக | 0.799 |

### 7.4.10. முன்னேற்ற கண்காணிப்பு நடவடிக்கைகள்

இலங்கை ஹதபிம அதிகார சபையின் ஒட்டுமொத்த அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் மாதாந்தம் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படுவதுடன், குறித்த முன்னேற்ற அறிக்கைகள் மாதாந்தம் கமத்தொழில் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அதற்கமைய 2014 ஆம் வருடத்தில் 12 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டதுடன், இதற்காக ரூ. 0.246 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

### 7.4.11. விசேட அபிவிருத்தித் திட்டங்கள்

இலங்கை ஹதபிம அதிகார சபைக்கு திறைசேரியினால் வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற வருடாந்த நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உள்ளூர் உணவு உற்பத்தியை விருத்தி செய்வதற்கான கருத்திட்டங்கள் சார்பில் நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படுவதுடன், 2014 ஆம் வருடத்திற்காக இவ்வாறு அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. மில்லியனாகும். இந் நிதி ஒதுக்கீடுகளை ஈடுபடுத்தி 2014 ஆம் வருடத்தில் கீழ்க் காட்டப்பட்ட கருத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

#### *7.4.11.1. "தேசத்திற்கு மகுடம்" தேசிய கண்காட்சிக்குச் சமாந்திரமாக குருணாகல் மாவட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - உப உணவுப் பயிர் உற்பத்திகளை பரவலாக்கும் திட்டம்*

"தேசத்திற்கு மகுடம்" தேசிய கண்காட்சிக்குச் சமாந்திரமாக குருணாகல் மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்ட இக் கருத்திட்டத்தின் கீழ் குருணாகல் மாவட்டத்தின் கனேவத்தை, இப்பாகமுவை பிரதேச செயலாளர் பிரிவுகளில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு இலக்கு வைக்கப்பட்டது. அதற்கமைய இக் கருத்திட்டத்தின் மூலம் அடையப் பெற்ற முன்னேற்றம் வருமாறு:





| | தொழிற்பாடு | அலகு | இலக்கு | நிதி ஒதுக்கீடு (ரூ.) | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஆரம்ப தெளிவூட்டல் | பயிற்சி வகுப்புகள் | 10 | 75,000.00 | 9 | 64,390.00 |
| 2. | நிலத்தைச் செப்பனிடுதல் | ஏக்கர் | 1,000 | - | 1,000 | - |
| 3. | உப உணவுப் பயிர் விதைகளை விநியோகித்தல் | ஏக்கர் | 1,000 | 1,125,000.00 | 1,000 | 1,004,650.00 |
| 4. | நிருவாகச் செலவுகள் | | | 36,000.00 | | 35,861.75 |
| | **மொத்தம்** | | | 1,236,000.00 | | 1,104,901.75 |

#### *7.4.11.2. "மனிதநேய விவசாய உபசரணை" உப உணவுப் பயிர் அபிவிருத்திக் கருத்திட்டம் (கட்டம் 3 - 1,000 விவசாயக் குடும்பங்கள்)*

மனிதாபிமான நடவடிக்கை முடிவுக்கு வந்ததன் பின் வவுனியா மாவட்டத்தின் கெலேபோகஸ்வெவ கிராமத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட விவசாயக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு, அப் பிரதேசத்தில் உப உணவுப் பயிர்களைப் பரவலாக்கும் இக் கருத்திட்டம் அமுல் செய்யப்பட்டது. இக் கருத்திட்டத்தினூடாக அடையப் பெற்ற முன்னேற்றம் வருமாறு:





| | செயற்பாடு | 2014 நிதி ஒதுக்கீடு (ரூ.) | 2014.12.31 ஆம் திகதிக்கு மொத்தச் செலவு (ரூ.) | அலகு | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பிற விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் | 55,000.00 | 44,000.00 | பயிற்சித் தொடர்களின் எண்ணிக்கை | 5 | 4 | 04 தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு 1,000 விவசாயிகளைத் தெளிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| | | | | பங்குபற்றல் | 1,000 | 1,000 | |
| 2. | விவசாய உபகரணங்களைப் பகிர்ந்தளித்தல் | 2,500,000.00 | 2,036,680.00 | விவசாயிகளின் எண்ணிக்கை | 1,000 | 1,000 | 1,000 உபகரணத் தொகுதிகள் களத்தில் விநியோகிக்கப்பட்டன (போகஸ்வெவ 01 - 112, போகஸ்வெவ 02 - 260, செல லிஹினிகம - 234, நந்திமித்திரகம - 143, நாமல்கம - 251) |
| | | | | உபகரணத் தொகுதிகளின் எண்ணிக்கை | 1,000 | 1,000 | |
| 3. | உப உணவுப் பயிர் விதைகளை விநியோகித்தல் | 1,325,000.00 | 1,324,820.00 | விதை (கி.கி.) | 3,600 | 3,548 | மிளகாய் விதை - 100 கி.கி., கவுப்பி விதை - 1,250 கி.கி., நிலக்கடலை விதை - 1,000 கி.கி., பயறு விதை - 1,198 கி.கி. என்பன களத்தில் விநியோகிக்கப்பட்டன. |
| | | | | ஏக்கர் | 1,000 | 1,000 | |
| 4. | நிருவாகச் செலவுகள் | 120,000.00 | 119,946.40 | | | | |
| | **கூட்டுத் தொகை** | 4,000,000.00 | 3,525,446.40 | | | | |

### *7.4.11.3. "மனிதநேய விவசாய உபசரணை" உப உணவுப் பயிர் அபிவிருத்திக் கருத்திட்டம் (கட்டம் 3 - 300 விவசாயக் குடும்பங்கள்)*

மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்திற்குச் சமாந்திரமாக அப் பிரதேச விவசாய மக்களின் விசேட வேண்டுகோளுக்கு அமைய கமத்தொழில் அமைச்சின் பணிப்புரைகளுக்கு அமைய இக் கருத்திட்டம் அமுல் செய்யப்பட்டது:

| | செயற்பாடு | 2014 நிதி ஒதுக்கீடு (ரூ.) | 2014.12.31 ஆம் திகதிக்கு மொத்தச் செலவு (ரூ.) | அலகு | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பிற விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆரம்ப தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் | 15,000.00 | 15,000.00 | வெளிக்கள விவசாயிகள் சந்திப்புகளின் எண்ணிக்கை | 2 | 2 | 02 வெளிக்கள விவசாயிகள் சந்திப்புகள் நடாத்தப்பட்டு 300 விவசாயிகளுக்குத் தெளிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| 2. | விவசாய உபகரணங்களைப் பகிர்ந்தளித்தல் | 750,000.00 | 507,855.00 | விவசாய உபகரணத் தொகுதிகளின் எண்ணிக்கை | 300 | 300 | 300 உபகரணத் தொகுதிகள் களத்தில் விநியோகிக்கப்பட்டன. இறுதிப் பட்டியல் கிடைக்கப் பெறவில்லை. |
| 3. | நிலத்தைச் செப்பனிடுதல் | - | - | ஏக்கர் | 300 | 300 | நிலத்தைச் செப்பனிடும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 4. | உப உணவுப் பயிர் விதைகளை விநியோகித்தல் | 450,000.00 | 415,660.00 | ஏக்கர் | 300 | 300 | பயறு விதை - 652 கி.கி., கவ்பி விதை - 524 கி.கி., மிளகாய் விதை - 15 கி.கி. என்பன களத்தில் விநியோகிக்கப்பட்டன. இறுதிப் பட்டியல் கிடைக்கப் பெறவில்லை. |
| 5. | நிருவாகச் செலவுகள் | 36,450.00 | 36,255.40 | | | | |
| கூட்டுத் தொகை | | 1,251,450.00 | 974,770.40 | | | | |





## 7.5 ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

கமத்தொழில் அபிவிருத்தியுடனும், கிராமிய கமநல அபிவிருத்தியுடனும் இணைந்த சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ந்து இனங் காணலும், இவற்றிற்கு உரிய தீர்வுகளை எடுக்கும் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்களை வகுப்போரிடத்திலும், கொள்கை வகுப்பாளர்களிடத்திலும் சிபாரிசுகளை முன்வைப்பதுமே ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் பிரதான பணியாகும். இதற்கு மேலதிகமாக, நாட்டில் உணவு வகைகளின் சந்தை விலை நிலவரங்களைத் திரட்டி அவற்றை அறிவித்தல், ஆராய்ச்சிகள் மூலம் பிறப்பிக்கப்படுகின்ற அறிவை, செலமர்வுகள், கருத்தரங்குகள், வெளியீடுகள் என்பவற்றின் மூலம் உரிய தரப்பினர்களுடன் பரிமாறிக் கொள்ளல், பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் விவசாயிகள், உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பிற தரப்பினர்களின் எண்ணங்கள், அறிவு, திறமை என்பற்றை விருத்தி செய்வதும் நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.

2014 ஆம் வருடத்தில் அமுல் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை 18 ஆகுமென்பதுடன், பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 56 ஆகும். இவ் ஆராய்ச்சி, பயிற்சி நடவடிக்கைகளுக்காக திறைசேரியினால் ரூ. 19.85 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. ரூ. 4.24 மில்லியன் நிதி பிற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. (நிதி முன்னேற்றம் அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது). திட்டமிடப்பட்ட ஆய்வுகளுள் 02 ஆய்வுகள் தவிர மற்றைய எல்லா ஆய்வுகளையும் திட்டமிட்டவாறு வருடத்தில் முடிப்பதற்கு முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

**அட்டவணை I: பௌதீக முன்னேற்றம் - ஆராய்ச்சி**

| | **ஆராய்ச்சி முன்னேற்றம்** | 2013 | 2014 |
|---|---|---|---|
| 1. | முடிக்கப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை | 26 | 16 |
| 2. | 75% வீதம் முடிக்கப்பட்ட ஆய்வுகள் | - | 02 |
| 3. | 75% வீதத்திற்குக் குறைவாக முடிக்கப்பட்ட ஆய்வுகள் | 01 | - |
| | **ஆய்வுகளின் மொத்த எண்ணிக்கை** | 27 | 18 |

**அட்டவணை II: நிதி முன்னேற்றம் - ஆராய்ச்சியும் பயிற்சியும்**

| **விபரம்** | 2013 **(ரூ. மி.)** | 2014 **(ரூ. மி.)** |
|---|---|---|
| திறைசேரி நிதி ஒதுக்கீடு | 25.76 | 19.85 |
| பிற நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற்றவை | 1.42 | 4.24 |
| **மொத்தம்** | 27.18 | 24.09 |
| **செலவு** | | |
| திறைசேரி நிதி ஒதுக்கீடு | 20.60 | 15.36 |
| பிற நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற்றவை | 1.00 | 3.54 |
| **மொத்தம்** | 21.60 | 18.0 |

வருடத்தில் அமுல் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளுள் பெரும்பாலானவை, பல்வேறு நிறுவனங்களினாலும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் போது, முகங் கொடுக்க நேர்ந்த பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மீது முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே, அவற்றின் கண்டுபிடிப்புகளும், சிபாரிசுகளும் நேரடியாக கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டது.

**2014 ஆம் வருடத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சிலவற்றின் கண்டுபிடிப்புகளும் சிபாரிசுகளும்**

**i. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணிகளுக்கு சுதந்திர உரித்தைப் பெற்றுக் கொடுப்பதனால் விவசாயத்துறைக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள்**

குடியிருப்பாளர்களுள் பெரும்பாலானோர் (**65%**) ஏற்கனவே தமது காணிகளுக்கு சுதந்திர உரித்து உள்ளதென நம்புகின்றனர். அதே போன்று குடியிருப்பாளர்களுள் சுமார் **60%** வீதமானோர் பயிர்ச் செய்கையை மேற்கொண்டும், ஏனையோர் பிற வழிகள் மூலமும் வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியுமென நம்புகின்றனர். தற்போது காணப்படுகின்ற முறைக்கு அமைவாக காணியின் உரிமை பாதுகாக்கப்படுவதற்காக உரிமையைக் கையளித்தல் தொடர்பாக நிலவும் சட்டத் தடைகள் காரணமாக அமைந்துள்ளதால், அவற்றை அவ்வாறே பேணிச் செல்வது பிரச்சினையாக இருக்க மாட்டாதென ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

**ii. அநுராதபுரம் மாவட்டத்தில் நெற் செய்கை விவசாயிகளின் வருமான பல்வகைப்படுத்தலுக்காக உள்ள வாய்ப்புகளையும் தடைகளையும் கண்டறிதல்**

நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுள் சுமார் 90% வீதமானோருக்கு மேலதிக வருமான வழிகளில் ஈடுபடுவதற்கான கால நேரம் உள்ளதென அவதானிக்கப்பட்டது. இருந்த போதிலும் 98% வீதமானோர் விவசாயம் சார்ந்த அல்லது அதற்கு வெளியே ஏதேனும் வருமானம் ஈட்டல் வழிகளில் ஈடுபட்டுள்ளனர். பிற்போக்கு எண்ணங்கள், சந்தைத் தளம்பல் போன்ற காரணிகள் இதற்கான இடைஞ்சல்களாக உள்ளன. வருமான பல்வகைப்படுத்தலுக்கான பயிற்சிகள் மூலம் எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமும், திறன் விருத்தி மூலமும் இவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டுமென சிபாரிசு முன்வைக்கப்பட்டுள்ளது.

**iii. பாரம்பரிய அரிசி உற்பத்தியும் விற்பனையும்; தற்போதைய நிலவரமும் எதிர்கால வாய்ப்புகளும்**

பல்வேறு வகையான அரிசி வகைகள் காணப்பட்டாலும், சுவந்தில், குருலுதுட, ஹீனட்டி, பச்சபெருமாள், கஹவனு முதலான அரிசி வகைகளே மிகவும் பிரபல்யமடைந்து காணப்படுகின்றன. இவ் அரிசி வகைகளை உற்பத்தி செய்யும் போது 87% வீதமான விவசாயிகள் இரசாயன உரத்தைப் பாவிக்கவில்லை என்பதுடன், சேதனப் பசளை (55%), வைக்கோல் (50%), சாணம் (41%), இலை உரம் (40%) என்றவாறு பாவிக்கப்பட்டது. பாரம்பரிய அரிசி வகைகளுக்கு உள்நாட்டிலும் அதே போன்று வெளிநாட்டுச் சந்தையிலும் கூடிய கேள்வி காணப்படுவதால், அரிசி விற்பனையின் போது சந்தையில் பிற அரிசி வகைகளுடன் கலந்து விற்பனை செய்யும் மோசடிச் செயல்களை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

**iv. ஈர வலயத்தில் அமைந்துள்ள வயல் காணிகள் நிரப்பப்படுவதற்கான காரணிகளும் அதன் தாக்கங்களும்**

இவ்வாறு நிரப்பப்படுகின்ற வயல் காணிகளுள் 70% வீதமான வயல் காணிகள் செய்கை பண்ணாது கைவிடப்பட்ட காணிகளாக இருப்பதுடன், தரைக் காணிகளுக்கு அதிகரித்த கேள்வி (57%) காணப்படுவதும், தொழில் வாய்ப்புகளை நாடி விவசாயத்திலிருந்து பிற நடவடிக்கைகளின் பக்கம் செல்வதும் (12%) இவ்வாறு வயல் காணிகள் நிரப்பப்படுவதற்கான காரணிகளாகக் காணப்படுகின்றன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் போது, செய்கை பண்ணாது கைவிடப்பட்ட வயல் காணிகளை செய்கைக்கு ஈடுபடுத்துவதும், செய்கை பண்ண முடியாத வயல் காணிகளை மாற்றுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவற்கான வழிகளை ஏற்படுத்துவதும் இப் பிரச்சினைக்கான தீர்வாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

01. **சந்தைப்படுத்தல் தகவல் கருத்திட்டமும் அதன் முன்னேற்றமும்**

உணவுப் பொருட்களின் மொத்த, சில்லரை விற்பனை விலைகளை கொழும்பிலும், தீவின் ஏனைய பகுதிகளிலும் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் மூலம் சேகரிப்பதும், அத் தகவல்களை, தீர்மானங்களை எடுக்கும் கொள்கை வகுப்பாளர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், நுகர்வோர் என்போருக்குப் பெற்றுக் கொடுப்பதும் இக் கருத்திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. குறித்த தகவல்களைப் பகுப்பாய்வு செய்து தயாரிக்கப்பட்ட 52 வாராந்த உணவுப் பொருள் விவரண சஞ்சிகைகளும், 11 மாதாந்த உணவுப் பொருள் தகவல் சஞ்சிகைகளும் அச்சிட்டு வெளியிடப்பட்டன. மேற்சொன்ன தகவல்களை நாளாந்தம் பெற்றுக் கொடுக்கும் 6666 எனும் மொபிரெல் குறுஞ் செய்திச் சேவை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள அழைப்புகளின் எண்ணிக்கை 117,554 ஆகும்.

02. **பயிற்சி நிகழ்ச்சிகளும் அவற்றின் முன்னேற்றமும்**

மனித வள மற்றும் தாபன அபிவிருத்திப் பிரிவினால், மனித வள அபிவிருத்தியின் பொருட்டு தீவின் பல பாகங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமுல் செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 56 ஆகுமென்பதுடன், இதன் கீழ் 4,713 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அந்தந்த பயிற்சி நிகழ்ச்சியின் முன்னேற்றம் வருமாறு.

**i. கிராமிய/ சமூக அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தலுக்கும், முகாமைத்துவத்திற்கான பங்கு பற்றல் திறமுறைகளைப் (RRA/ PRA/ PCM) பாவிப்பதற்குமான பயிற்சி நிகழ்ச்சி**



பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவோருக்கு பற்குபற்றல் அபிவிருத்தியின் முக்கியத்துவம் தொடர்பில் எடுத்துக் காட்டுவதற்கு மேலதிகமாக, அதற்காகப் பாவிக்கக் கூடிய பல்வேறு நுட்ப முறைகள் தொடர்பில் அறிவையும் அதே போன்று பாவிக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொடுப்பதும் இதன் நோக்கங்களாக இருப்பதுடன், இதன் கீழ் இதுவரை ஒரு பயிற்சி நிகழ்ச்சித் நடாத்தப்பட்டு 30 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**ii. கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தலுக்கான பங்குபற்றல் திறமுறைகளைப் பாவிப்பது தொடர்பான ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சி**



சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில் வர்த்தக நோக்குடனான மாம்பழச் செய்கையை பிரபல்யப்படுத்தும் முன்னோடிக் கருத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட 77 கிராமவாசிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இப் பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இறுதியில் இதற்காக திட்டமொன்றும் வகுக்கப்பட்டதுடன், அதனை அமுல் செய்யும் பொறுப்பு பிரதேச அரசியல் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

**iii. சந்தைப்படுத்தல் விரிவாக்கல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி**



சந்தைப்படுத்தல் விரிவாக்கலையும் வியாபாரத் திட்டங்களை வகுப்பதையும் நோக்காகக் கொண்டு, இதன் கீழ் இரண்டு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வடமேல் மாகாண விவசாய உத்தியோகத்தர்கள் 60 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**iv. சமூக இயக்கவியல் தொடர்பான பயிற்சிப் பாடநெறி**



சமூக இயக்கவியலுடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள், நுட்பமுறைகள் தொடர்பாக பங்கு பற்றுவோருக்கு அறிவைப் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்ட இப் பயிற்சிப் பாடநெறியின் கீழ் 04 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு மாத்தளை மாவட்டத்தின் 144 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**v. கமநல அமைப்புகளைப் பலப்படுத்தும் பொருட்டு தலைமைத்துவப் பயிற்சி**



மாத்தறை மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய கமக்காரர் வாரத்திற்குச் சமாந்திரமாக விவசாயிகள் தலைவர்களின் தலைமைத்துவ ஆற்றலை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்ட 22 பயிற்சி நிகழ்ச்சிகள் ஊடாக 2,372 விவசாயிகள் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**vi. கமநல அமைப்புகளைப் பலப்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சி**

குருணாகல் மாவட்டத்தில் நடைபெற்ற "தேசத்திற்கு மகுடம்" நிகழ்ச்சித் திட்டத்திற்குச் சமாந்திரமாக 26 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு 2,037 விவசாயிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**03. செயலமர்வுகள், கருத்தரங்குகள், பட்டப் படிப்புப் பாடநெறி**

பங்களாதேஷில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திக்கான ஆசிய பசுபிக் வலய நிலையத்துடன் இணைந்து இந் நிறுவனத்தினால், "மரக்கறி, பழங்களை சந்தைப்படுத்தும் போது ஏற்படக் கூடிய அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைப்பதற்கான முறைகள்" எனும் தலைப்பில் 2014.03.17 தொடக்கம் 20 வரை பயிற்சி பாடநெறியொன்று நடாத்தப்பட்டமை சர்வதேச ரீதியில் எடுக்கப்பட்ட மிக முக்கிய நடவடிக்கையாகும். இதில் உள்நாட்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 34 பேர் கலந்து கொண்டனர்.

"விவசாயப் பொருளியல்" எனும் தலைப்பில் ஒருங்கிணைந்த பட்டப் படிப்புப் பாடநெறியொன்றை நடாத்துவதற்காக கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்மொன்று செய்து கொள்ளப்பட்டமையும் தாபனத்தின் மற்றுமொரு முன்னோக்கிய நடவடிக்கையாகும்.

## 7.6. தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை




தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை 2014 ஆம் வருடத்தில் 14 கருத்திட்டங்களை அமுல் செய்ததுடன், இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட கருத்திட்டங்களின் சுருக்கமான பொழிப்பு வருமாறு:

### 7.6.1. "சுவபோஷ" போசாக்கு உணவை அறிமுகம் செய்யும் கருத்திட்டம்

ஒதுக்கப்பட்ட தொகை: ரூ. 7.16 மில்லியன்     வருமானம்: ரூ. 8.49 மில்லியன்

சுவபோஷ தானிய உணவு உற்பத்திக் கைத்தொழிற்சாலையொன்று கன்னோருவை உணவு ஆராய்ச்சி அலகில் நிறுவப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் இவ் வருடத்தில் 200 கிராம் எடை கொண்ட 157,466 **"சுவபோசா"** பக்கற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

### 7.6.2. குறை நிறைக் கர்ப்பிணித் தாய்மார்களுக்காக "மவ்போஷ" போசாக்கு உணவை அறிமுகம் செய்யும் கருத்திட்டம்




ஒதுக்கப்பட்ட தொகை: ரூ. 15.34 மில்லியன்     வருமானம்: ரூ. 19.2 மில்லியன்

மவ்போஷ தானிய உணவு உற்பத்திக் கைத்தொழிற்சாலை கன்னோருவை உணவு ஆராய்ச்சி அலகில் நிறுவப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் இவ் வருடத்தில் 200 கிராம் எடை கொண்ட 78,733 மவ்போஷ பக்கற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. இதற்கான செலவு ரூ. **15.34** மில்லியனாகுமென்பதுடன், செலவு ரூ.19.2 மில்லியனாகும்.

### 7.6.3. பெருந்தோட்டப் பகுதிகளில் அரிசி மா பாவனையை பிரபல்யப்படுத்தும் திட்டம்

ஒதுக்கப்பட்ட தொகை: ரூ. 12.8 மில்லியன்     வருமானம்: ரூ. 14.37 மில்லியன்




இத் திட்டத்தின் கீழ் எமது நிறுவனத்தினால் விசேட அரிசி மா கலவையொன்றும், விசேட தோசை மா கலவையொன்றும் உற்பத்தி செய்யப்பட்டது. இவ் உற்த்திகள் கலங்குட்டிய கைத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவதுடன், விசேட அரிசி மா கலவை, விசேட தோசை மா கலவை என்றவாறு 157,466 பக்கற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

### 7.6.4. சிசுபோஷ போசாக்கு உணவை அறிமுகம் செய்யும் கருத்திட்டம்



இது வடமத்திய மாகாண பாடசாலை மாணவர்களின் போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்காக அமுல் செய்யப்படவுள்ள புதிய கருத்திட்டமொன்றாகும்.

**7.6.5. புத்தல விவசாயப் பண்ணை அபிவிருத்தி (10 ஏக்கர்)**

2014 ஆம் வருடத்தின் முதல் 06 மாத காலப்பகுதியில் நிறுவனத்தின் செலவில் சிறியளவில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆகஸ்ட் மாதத்திலிருந்து அமைச்சிலிருந்து நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றதினால், முறையான செயற் திட்டத்திற்கு அமைவாக பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. விவசாயப் பண்ணைக்குச் சொந்தமான விவசாயக் கிணறுகள் இரண்டையும் ஆழமாக்கி பழுது பார்ப்பதற்காக ரூ. 0.473 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டது. அத்துடன், காட்டு யானைகளிடமிருந்து விவசாயப் பண்ணையைப் பாதுகாக்கும் பொருட்டு விவசாயப் பண்ணையைச் சுற்றி மின்சார வேலியொன்று அமைக்கப்பட்டதுடன், இதற்காக ரூ. 1.017 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டது. விவசாயப் பண்ணை உபகரணங்களைப் பழுது பார்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் ரூ. 0.187 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இங்கு 3.5 ஏக்கர் நிலப்பரப்பில் சோளம் செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன், இதற்காக ரூ. 0.035 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. ஏப்பிறல் மாதமளவில் விளைச்சலை அறுவடை செய்யக் கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ரூ. 0.057 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு மரக்கறிச் செய்கை செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன், இதன் முதற் சுற்று வருமானமாக ரூ. 0.016 மில்லியன் நிதி பெறப்பட்டுள்ளது. மீண்டும் மீண்டும் சில தடவைகள் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இவ் விவசாயப் பண்ணையில் நிரந்தரப் பயிர்களாக மா, தோடை, வாழை, தெங்கு முதலான பயிர்கள் செய்கை பண்ணப்பட்டு பேணிச் செல்லப்படுவதுடன், இவற்றைப் பராமரிப்பதற்காக ரூ. 0.124 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இவை இன்னும் விளைச்சலைப் பெற்றுத் தரக்கூடிய பருவத்தில் இல்லையென்பதால், வருமானம் ஏதும் பெறப்படவில்லை. இவ் விவசாயப் பண்ணையில் நிரந்தரத் தொழிலாளர்கள் மூவர் இருப்பதுடன், காவல் தொழிலாளி நாட் சம்பள அடிப்படையில் வேலை செய்கின்றார். விவசாயப் பண்ணையின் தேவைக்கேற்ப தொடர்ந்தும் நாட் சம்பள அடிப்படையில் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். கடந்த வருட ஆகஸ்ட் மாதம் தொடக்கம் இதுவரை இவ் விவசாயப் பண்ணை சார்பில் ரூ. 1.944 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.





**7.6.6. தனமல்விலை விவசாயப் பண்ணை அபிவிருத்தி (16 ஏக்கர்)**

2014 ஆம் வருடத்தின் முதல் 06 மாத காலப்பகுதியில் நிறுவனத்தின் செலவில் சிறியளவில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆகஸ்ட் மாதத்திலிருந்து அமைச்சிலிருந்து நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றதினால், முறையான செயற் திட்டத்திற்கு அமைவாக பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. நெற் செய்கைக்கு 08 ஏக்கர் வயல் நிலத்தை ஒதுக்கக் கூடியதாக இருந்த போதிலும், குளத்தின் நீர் மட்டம் குறைவாக இருந்ததினால் இம் முறை 4.5 ஏக்கரில் மட்டுமே நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இவ் விவசாயப் பண்ணையில் சுவந்தில் பாரம்பரிய நெல்லினம் செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன், இதற்காக ரூ. 0.14 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து சுமார் 5,000 மெற்றிக் தொன் நெல் விளைச்சல் எதிர்பார்க்கப்படுவதுடன், இம்மாத இறுதியில் விளைச்சல் அறுவடை செய்யப்படவுள்ளதால், இதன் நிதி முன்னேற்றத்தைச் சரியாகக்

குறிப்பிட முடியாதுள்ளது. இங்கு 100 முருங்கைச் செடிகள் நடப்பட்டதுடன் இதற்கான செலவு ரூ. 0.012 மில்லியனாகும். இம் முருங்கைச் செடிகளின் வயது சுமார் 02 மாதங்களாகும். இங்கு கட்டை முருங்கை இனம் நடப்பட்டுள்ளது. 1 ஏக்கர் நிலப்பரப்பில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், .......... நிறுவனத்திடமிருந்து விதைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இதற்கான செலவு ரூ. 0.005 மில்லியனாகும். மார்ச் மாதமளவில் விளைச்சலை அறுவடை செய்யக் கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வட்டக்காய் மற்றும் பயற்றங்காய் என்பன 0.25 ஏக்கர் வீதம் செய்கை பண்ணப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 0.002 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. கத்தரிக்காய் விதை நாற்றுமேடையில் தூவப்பட்டுள்ளது. இவற்றிற்கு மேலதிகமாக 100 மாம்பழச் செடிகள் நடப்பட்டுள்ளன. இயந்திரோபகரணங்கள் பழுதுபார்ப்பின் கீழ் 5040 டிராக்டர் முழுமையாகப் பழுது பார்க்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 0.220 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டது. விவசாயக் கிணறொன்று அமைக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக ரூ. 0.542 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், விவசாயப் பண்ணையின் கட்டிடமொன்று பழுது பார்க்கப்பட்டதுடன், இதற்கான செலவு ரூ. 0.468 மில்லியனாகும்.



நெற் செய்கை



விவசாயக் கிணறு



பழுதுபார்க்கப்பட்ட கட்டிடம்



சோளச் செய்கை

**7.6.7. கமக்காரர் வாரம்**

ஒதுக்கப்பட்ட தொகை: ரூ. 0.8 மில்லியன் செலவு: ரூ. 1.036 மில்லியன்

இதன் கீழ், எமது நிறுவனத்தின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையமொன்று நடாத்தப்பட்டது.

**7.6.8. தேசத்திற்கு மகுடம்** 2014

இதன் கீழ் மாதிரி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இவற்றிற்கான மொத்தச் செலவு ரூ. 0.1 மில்லியனாகும்.

**7.6.9. நாற்றுமேடை - நாராஹேன்பிட்டி**

இதன் கீழ் நகர்ப்புறங்களில் வசிப்போரின் வீட்டுத் தோட்ட அபிவிருத்திக்குத் தேவையான செடிகள், உரம், கருவிகள் என்பன விநியோகிக்கப்பட்டன. இவ் வருடத்திற்கான செலவு ரூ. 6.102 மில்லியனாகும் என்பதுடன், வருமானம் ரூ. 6.128 மில்லியனாகக் காணப்பட்டது.

**7.6.10. விவசாய உற்பத்தி விற்பனை நிலையம் - தெகிவளை**

இவ் விவசாய உற்பத்தி விற்பனை நிலையத்தில் 18 ஊழியர்கள் சேவையாற்றுகின்றனர். இந் நிலையத்திற்கான செலவு ரூ. 42.87 மில்லியனாக இருப்பதுடன், வருமானம் ரூ. 45.144 மில்லியனாகக் காணப்பட்டது.

#### 7.6.11. ஹெல்தி புட் உணவகம் - நாராஹேன்பிட்டி

இதன் கீழ் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 18.09 மில்லியனாக இருப்பதுடன், ஈட்டபட்ட வருமானம் ரூ. 16.40 மில்லியனாகும். இங்கு உள்ளூர் உணவு வகைகள் விற்பனை செய்யப்படுவதுடன், காலை உணவு வேளைக்காக அரிசி மாவு உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

#### 7.6.12. தேசிய உணவு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் (மாவட்ட, பிரதேச நிகழ்ச்சித் திட்டங்கள்)

தீவின் 05 மாவட்டங்கள் உட்படுமாறு இந் நிகழ்ச்சித் தொடர் நடாத்தப்பட்டது. உள்ளூர் உணவு வகைகளை நாட்டில் பிரபல்யப்படுத்துவதினூடாக மந்த போசாக்கையும், செயற்கை உணவு வகைகளின் நுகர்வையும் குறைத்தல், உள்ளூர் விவசாயத்துறையை ஊக்குவித்தல், உள்ளூர் உணவு வகைகளின் சுகாதாரம், தரம் என்பன தொடர்பில் இல்லத்தரசிகளைத் தெளிவூட்டல், தொற்றாத நோய்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான பின்னணியை விளக்குதல், வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுவதற்கு பெண்களை ஊக்குவித்தல், பெண்களுக்கு சுயதொழில்களில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்து அவர்களை சுயதொழில்களில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல் என்பன இதன் பிரதான நோக்கங்களாகும்.

இத் திட்டத்தின் செயற்பாடுகளாக, பங்குபற்றுவோருக்கு சுவபோஷ பக்கற்றுகளையும், அரிசி மா பக்கற்றுகளையும் விநியோகித்தல், உள்ளூர் உணவு பானங்களை நேரடியாகத் தயாரித்து செய்து காட்டுதல், உணவு தயாரிக்கும் முறைகள் அடங்கிய சிறிய புத்தகங்களை அச்சிட்டு வெளியிடல், ஏற்பாட்டாளர்களின் போக்குவரத்து, உணவு, பானங்கள், தங்குமிட வசதிகள், வருகை தரு விரிவுரையாளர்களின் விரிவுரை மற்றும் உதவியாளர்களுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல் என்பன அடங்கும். இதன் கீழ் 2014 ஆம் வருடத்தில் ரூ. 5.23 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 20,750 ஆகும். இந் நிகழ்ச்சித் தொடர் மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கிளிநொச்சி, பொலநறுவை, கொழும்பு ஆகிய மாவட்டங்கள் உட்படுமாறு 34 மாவட்ட நிகழ்ச்சித் தொடர்களும், 105 பிரதேச நிகழ்ச்சித் தொடர்களும் நடாத்தப்பட்டன.

### 7.7. அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம்

#### 7.7.1. திறைசேரி நிதி ஒதுக்கீடுகளின் கீழ் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்

**1.1 மரக்கறி பழங்களின் இரட்டை உற்பத்தித் தொழில்நுட்பத்தை அதாவது, அதிகுளிரூட்டி, உலர்த்துதல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தலும், ஊக்குவித்தலும்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 1,000,000.00 உண்மையான செலவு: ரூ. 1,031,187.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** மரக்கறி பழங்களின் இரட்டை உற்பத்தித் தொழில்நுட்பத்தை அதாவது, அதிகுளிரூட்டி, உலரவைத்தல் தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுதல். இதன் மூலம் புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளிடத்தல் அறிமுகம் செய்யப்படுதலும், அறுவடைக்குப் பிந்திய சேதங்கள் குறைக்கப்படுதலும் இடம்பெறும்.

**1.2 அரிசி, தானியம், அவரையினப் பயிர்கள் சார்ந்த எக்ஸ்ரூடர் உற்பத்திகளை மேம்படுத்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 300,000.00 உண்மையான செலவு: ரூ. 75,900.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** அரிசியிலிருந்து எக்ஸ்ரூடர் உற்பத்தியை மேற்கொள்வதற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டதன் மூலம் நாட்டிற்கு புதியதோர் உற்பத்தி அறிமுகப்படுத்தப்படுதல்.

**1.3 சிறுநீரக நோய் பரவலாகக் காணப்படும் பிரதேசங்களில் வாழும் மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பாகவும், உட் கொள்ளும் உணவு வகைகள் தொடர்பாகவும் தேடிப் பார்த்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 140,000.00 உண்மையான செலவு: ரூ. 129,219.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** சுமார் 484 மதிப்பீட்டு அறிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சிறுநீரக நோய் பரவலாகக் காணப்படும் பிரதேசங்களில் வாழும் மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**1.4 மா, பப்பாசி, அண்ணாசி சாற்றை பிழிந்தெடுப்பதற்காக அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் சாறு பிழிந்தெடுக்கும் இயந்திரத்தை மதிப்பீடு செய்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 133,000.00 உண்மையான செலவு: ரூ. 48,450.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** மா, பப்பாசி, அண்ணாசி ஆகிய பழங்கள் சாற்றை பிழிந்தெடுப்பதற்குப் பொருத்தமான பழங்களாக இனங் காணப்பட்டன.

**1.5 மீதைல் சைக்லோ புரொப்பைன் பாவிப்பதன் மூலம் புளி வாழைப்பழத்தின் அறுவடைக்குப் பிந்திய ஆயுட் காலத்தை நீடித்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 365,000.00 உண்மையான செலவு: ரூ. 30,608.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** புளி வாழைப்பழத்திற்கு மீதைல் சைக்லோ புரொப்பைன் பாவிப்பது பொருத்தமானதென இனங் காணப்பட்டது.

**1.6 பிரதானமாக நெல் உற்பத்தி இடம்பெறுகின்ற பிரதேசங்களில் நெல்லைக் களஞ்சியப்படுத்தி வைப்பதிலுள்ள தற்போதைய நிலவரம் தொடர்பாக மதிப்பீடு செய்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 150,000.00 உண்மையான செலவு: ரூ. 84,245.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களில் அரிசி ஆலை உரிமையாளர்களிமிருந்தும், நெல் இருப்புகளைக் களஞ்சியப்படுத்தி வைப்போர்களிடமிருந்தும் 105 வினாக்கொத்துகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

**1.7 குரக்கன் தானியத்திலிருந்து கல்லையும், மணலையும் நீக்குவதற்கான இயந்திரமொன்றை நிர்மாணித்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 200,000.00 உண்மையான செலவு: ரூ. 151,155.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** குரக்கன் தானியத்திலிருந்து கல்லையும், மணலையும் நீக்குவதற்கான இயந்திரமொன்று நிர்மாணிக்கப்பட்டது. இதன் மூலம் குரக்கன் உற்பத்தியாளர்கள் முகங் கொடுத்து வந்த பிரதான பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

**1.8 நெல்லை ஊற வைக்கும் போது பதற்றை நீக்குவதற்கான இயந்திரமொன்றை நிர்மாணித்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 155,000.00 உண்மையான செலவு: ரூ. 61,905.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** பதற்றை நீக்குவதற்கான இயந்திரமொன்று நிர்மாணிக்கப்பட்டது.

**1.9 எக்ஸ்ரூடர் வகையைச் சேர்ந்த எண்ணெய் பிழிந்தெடுக்கும் இயந்திரத்தின் மூலம் இலுப்பை விதையிலிருந்து எண்ணெய் எடுப்பதைத் தேடிப் பார்த்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 130,000.00 உண்மையான செலவு: ரூ. 74,385.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** எக்ஸ்ரூடர் வகையைச் சேர்ந்த இயந்திரம் இலுப்பை விதையிலிருந்து எண்ணெய் எடுப்பதற்குப் பொருத்தமானது.

**1.10 இலங்கையில் மாம்பழ உற்பத்தியில் காணப்படுகின்ற அறுவடைக்குப் பிந்திய பிரச்சினைகளைக் கண்டறிவதற்கான வெளிக்கள மதிப்பீட்டுச் சோதனை**

நிதி ஒதுக்கீடு: ரூ. 300,000.00 உண்மையான செலவு: ரூ. 79,074.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** 75 வினாக் கொத்துகளின் விபரங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

**7.7.2. பிரத்தியேக உதவிகளின் கீழ் அமுல் செய்யப்படுகின்ற கருத்திட்டங்கள்**

**2.1. குறைந்த செலவுடைய எள்ளு மிதிக்கும் இயந்திரமொன்றை விருத்தி செய்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 215,000.00
உண்மையான செலவு: -

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

**2.2. கிருமிநாசினிகளைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்ட தானிய உறைகளின் தகைமையை இலங்கையின் தர நிர்ணயங்களுக்கு அமைய பரீட்சித்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 105,000.00 உண்மையான செலவு: ரூ. 64,600.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** தானியங்களை பொதிகளில் இட்டு களஞ்சியப்படுத்தி வைப்பது பொருத்தமானது

**2.3. பதனிட்டுத் தயாரிக்கப்பட்ட பழங்கள் சார்ந்த இடையுணவுகளின் தரத்தை மேம்படுத்தலும், காலாவதியாகும் காலத்தை நீடித்தலும்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 121,000.00 உண்மையான செலவு: ரூ. 12,000.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** பழங்கள் சார்ந்த இடையுணவுகளின் தரத்தை மேம்படுத்துவதின் மூலம் 03 மாதங்கள் வரை பழுதடையாது வைத்திருக்க முடியும்.

**1.11 புதிதாக அறுவடை செய்யப்பட்ட ஈரமான நெல்லை உலர்த்துவதற்காக நடமாடும் நெல் உலர்த்தியொன்றை தயாரித்தல்**

நிதி ஒதுக்கீடு: ரூ. 1,085,000.00 உண்மையான செலவு: ரூ. 690,410.00

**ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு:** இவ் இயந்திரத்தை நிர்மாணிக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

**7.7.4. ஆராய்ச்சி அறிக்கைகளை மதிப்பீடு செய்தல்**

இந் நிறுவனத்தின் பணிப்பாளரான கலாநிதி (திருமதி) பி.எம்.கே. சுவர்ணஷிகா திலக்கரத்ன அவர்களினால் 2010 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டம் சர்வதேச ஆராய்ச்சிச் சஞ்சிகையில் வெளிவந்ததின் காரணமாக பாராட்டுச் சான்றிதழொன்று தேசிய ஆராய்ச்சிப் பேரவையினால் வழங்கப்பட்டுள்ளது. இது 2010 செயலாற்றுகை அறிக்கையில் பிரசுரிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

**7.7.4.** 2014 **ஆம் வருடத்தில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்**

| | **கருத்திட்டம்** | **பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை** | **பயிற்சியாளர்களின் எண்ணிக்கை** | **கருத்திட்டத்தின் இலக்கு** |
|---|---|---|---|---|
| 4.1 | அரிசி மாவு சார்ந்த உணவு வகைகளை பாடசாலை மாணவர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் வகையில் பாடசாலை விற்பனை நிலையப் பொறுப்பாளர்களைத் தெளிவூட்டும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 200,000) | 10 | 498 | - |
| 4.2 | உயர் தரத்திலான உள்ளூர் அரிசி நுகர்வைப் பிரபல்யப்படுத்தும் வகையில் பிரதான நகரங்கள் சார்ந்ததாக விற்பனை நிலையங்களை மேம்படுத்தும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 100,000) | 01 | 30 | - |
| 4.3 | அரிசி ஆலைகளை நவீனமயப்படுத்தும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 90,000) | 05 | 134 | 13 |
| 4.4 | அரிசி சார்ந்த உற்பத்திகளை பிரபல்யப்படுத்தும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 200,000) | 14 | 597 | - |
| 4.5 | அரிசி மாவு உற்பத்தி ஆலைகளை ஆரம்பிக்கும்/ நவீனமயப்படுத்தும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 100,000) | 04 | 115 | 11 |
| 4.6 | உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தானியங்களைக் களஞ்சியப்படுத்தும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 200,000) | 10 | 466 | - |
| 4.7 | வாசனைத் திரவியங்களை வகுத்தமைக்கும் நிலையங்களை நிறுவும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 100,000) | 08 | 314 | 03 |
| 4.8 | பழங்கள்/ புளியம்பழம் சார்ந்த உற்பத்திகளை பிரபல்யப்படுத்தும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 160,000) | 11 | 397 | - |
| 4.9 | நல்லெண்ணை பிழிந்தெடுத்தலை அறிமுகம் செய்யும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 80,000) | 04 | 86 | 02 |
| 4.10 | உள்ளூர் உணவு வகைகளைப் பிரபல்யப்படுத்தல் தொடர்பான மனையியல் ஆசிரியர்களையும் பாடசாலை மாணவர்களையும் தெளிவூட்டும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 119,000) | 08 | 461 | - |
| 4.11 | சுத்தம் சுகாதாரம் பேணப்பட்ட பழ விற்பனை நிலையங்களை நிறுவும் கருத்திட்டம் (நிதி ஒதுக்கீடு - ரூ. 100,000) | 05 | 192 | - |

`

**7.7.5. சர்வதேச ஆராய்ச்சி மாநாடும் கண்காட்சியும்**

2013, 2014 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளை வெளியிடுவதற்காக சர்வதேச ஆராய்ச்சி மாநாடொன்றும், கண்காட்சியும் நடாத்தப்பட

**7.7.6. நிறுவனத்தின் பயிற்சிப் பாடநெறிகள்**

நிறுவனத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற கருத்திட்டங்களின் பெறுபேறுகளை பயிற்சியாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதே இப் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துவதன் நோக்கமாகும். மேலும், அறுவடைக்குப் பிந்திய சேதங்களை குறைக்கும் தொழிற்பாடு தொடர்பான பயிற்சியும் இதன் கீழ் வழங்கப்படுகின்றது.

| | வதிவிடம் | வெளி | விரிவாக்கல் |
|---|---|---|---|
| பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை | 53 | 18 | 36 |
| பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | 1,808 | 1,901 | 1,400 |

**7.7.7. ஆலோசனைச் சேவைகள்**

1. 14 அரிசி ஆலைகள் நவீனமயப்படுத்தப்பட்டன. இதன் கீழ் மிகச் சிறந்த இயந்திரங்கள், உபகரணங்கள் பாவிக்கப்படுவதின் காரணமாக, உற்பத்தி செய்யப்படுகின்ற அரிசியின் தரம் ஏற்றமதித் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கூடிய விலையைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அத்துடன், முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுற்றாடல் மாசடைவதைக் குறைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.
2. 11 அரிசி மாவு உற்பத்தி ஆலைகள் நவீனமயப்படுத்தப்பட்டன. இதன் போது நல்ல தரத்திலான இயந்திரங்கள், உபகரணங்கள் பாவிக்கப்படுவதினால் அரிசி மாவு மிகவும் நுண்ணிய துகல்களாக அரைக்கப்படுவதால் உயர் தரத்திலான அரிசி மாவு உற்பத்தி செய்யப்படுகின்றது.
3. 09 வாசனைத் திரவிய அலகுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தரத்தில் சிறந்த உற்பத்திகளை நுகர்வோருக்குப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக உள்ளது.
4. 04 நல்லெண்ணெய், வேப்பெண்ணை, இழுப்பெண்ணை அலகுகள் நிறுவப்பட்டன. இதன் மூலம் சுயதொழில்களுக்கான வாய்ப்புகள் தோற்றம் பெற்றுள்ளன.

**7.7.8. நிறுவனத்தின் வெளியீடுகளை வெளியிடுதல்**

2014 ஆம் வருடத்தில் 22,965 நிறுவனத்தின் வெளியீடுகள் வெளியிடப்பட்டன. இதன் மூலம் நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பெறுபேறுகள், அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைப்பதற்கான செயற்பாடுகள், அறுவடைக்குப் பிந்திய பொறிமுறைகள் என்பன தொடர்பில் தெளிவும், விளக்கமும் அளிக்கப்படுகின்றது.

**7.7.9. வருடத்தின் நிதி முன்னேற்றம்**

| | 2014 செலவு மதிப்பீடு (ரூ.) | 2014 உண்மையான செலவு (ரூ.) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவுகள்** | | |
| தனிநபர் வேதனாதிகள் | 57,204,250 | 55,868,238 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 20,650,000 | 19,921,683 |
| **மீண்டெழும் செலவுகளின் கூட்டுத்தொகை** | 77,854,250 | 75,789,921 |
| **மூலதனச் செலவுகள்** | | |
| மூலதனச் சொத்துக்களை எடுத்துக் கொள்ளல் | 75,000,000 | 70,400,163 |
| **மூலதனச் செலவுகளின் கூட்டுத்தொகை** | 75,000,000 | 70,400,163 |
| **கூட்டு மொத்தம்** | 152,854,250 | 146,190,084 |


## 7.8. இலங்கை விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை

1987 திசெம்பர் 22 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை, விவசாயத்துறையில் ஆராய்ச்சிக் கொள்கைகளை வகுப்பதில் முன்னோடி நிறுவனமாகச் செயற்படும் நிறுவனமாக விளங்குகின்றது. நிதி உள்ளிட்ட வசதிகளை வழங்குதல், அவற்றை மதிப்பீடு செய்து மீளாய்வுக்கு உட்படுத்துதல், ஆராய்ச்சிப் பணிகளை சிறந்த முறையில் ஒருங்கிணைப்புச் செய்தலும் முகாமை செய்தலும் முதலான குறிக்கோள்களை இலக்காகக் கொண்டு நிறுவனம் செயற்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, விவசாய விஞ்ஞானிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் இந் நிறுவனத்தின் பணியாகும். இந் நிறுவனத்தின் மூலம் மிக வெற்றிகரமாகத் தயாரிக்கப்பட்ட தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை அமுல் செய்வதினூடாக, விவசாயத்துறையில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு உந்துதல் அளிக்கப்படுகின்றது.

2014 ஆம் வருடத்திற்கான முன்னேற்ற மீளாய்வுகள் அடங்கிய இவ் அறிக்கையில், இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைப் பேரவையின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்ள், தாபன நியதி ஒழுங்குவிதி 13 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

2014 சனவரி மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை 1 - 13 வரையிலான ஆராய்ச்சி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்.

| நிகழ்ச்சித் திட்ட இல. | நிதி ஒதுக்கீடு (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| 1. | 0.5 | 0.205 |
| 2. | 0.78 | 1.31 |
| 3. | 1.2 | 0.58 |
| 4. | 0.6 | 0.41 |
| 5. | 0.4 | 0.31 |
| 6. | 10.54 | 8.35 |
| 7. | 0.1 | 0.047 |
| 8. | 0.06 | 0.047 |
| 9. | 0.05 | 0.047 |
| 10. | 2.5 | 2.5 |
| 11. | 0.2 | 0.2 |
| 12. | 2.95 | 3.5 |
| 13. | 0.4 | 0.32 |




**நிகழ்ச்சித் திட்டம் 01 - தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம்:**

தேசிய விவசாய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு தொழில்நுட்பத் தீர்வுகளை ஆராயும் வகையில், தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் - 2014 தயாரிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறையில் இயந்திரமயமாக்கல், விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி, இயற்கை வள முகாமைத்துவம், அலங்கார மலர்ச் செடி வகைகளைக் வளர்த்தல், மிருக வளர்ப்பு முதலான துறைகள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ் ஆராய்ச்சிகள் எமது பேரவைக்கு இணைக்கப்பட்ட தேசிய நிபுணர் குழுவினதும், ஆராய்ச்சி, நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள் தொடர்பான தேசிய குழுக்களினதும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதுடன், இவை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றது. 2015 ஆம் வருடத்தில் 36 புதிய ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள், நீடிக்கப்பட்ட 03 கருத்திட்டங்கள், தற்போது முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற 23 கருத்திட்டங்கள் என்பன தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இக் கருத்திட்டங்களுக்காக 2015

ஆம் வருடத்திற்கு ரூ. 77.7 மில்லியன் நிதியை ஒதுக்குவதற்கு அரசாங்கம் திறைசேரியிடம் சிபாரிசு முன்வைத்துள்ளது. பல்கலைக்கழக கருத்திட்டங்கள் தொடர்பில் காணப்பட்ட நிதிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, தற்சமயம் 70 ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டுள்ளது.

**நிகழ்ச்சித் திட்டம் 02 - தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளும் முன்னுரிமைகளும்:**

2012 - 2016 காலப்பகுதிக்காக **2012 - 2016 NAPOL** தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கை வகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இக் கொள்கை மூலம் விவசாயத்துறையில் காணப்படுகின்ற குறைபாடுகள், மனிதவள அபிவிருத்தி, வள முகாமைத்துவம், விவசாயத்துறை சார்ந்த அறிவைப் பகிர்ந்து கொள்ளல் முதலான எல்லாத் துறைகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. விவசாயத்துறை இயந்திரோபகரணங்கள் தொடர்பான தேசிய முன்னுரிமை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இயற்கை வள முகாமைத்துவம், சேதன விவசாயம் என்பன தொடர்பிலும் முன்னுரிமை வகுக்கப்பட்டு வருகின்றன.

**நிகழ்ச்சித் திட்டம் 03 - தேசிய விவசாய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் உற்பத்தி விளைவுப் பெருக்கத்தை அதிகரித்தல்:**

2014 சனவரி முதல் யூன் மாதம் வரை முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற எல்லா தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டங்களையும் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு என்பன உரிய தேசிய குழுக்களினால் முடிக்கப்பட்டுள்ளன. 2014 யூன் தொடக்கம் திசெம்பர் மாதம் வரையிலான மதிப்பீடுகள் 2015 சனவரி மாதம் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு முடிக்கப்பட்ட கருத்திட்ட மதிப்பீடுகளின் எண்ணிக்கை 26 ஆகும்.

**நிகழ்ச்சித் திட்டம் 04 - ஆராய்ச்சி நிறுவகங்களும் அமைப்புகளும் தொடர்பான சிபாரிசுகள்:**

INFORM நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக 03 நிறுவனங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. 11 நிறுவனங்களுக்காக தரவுகள் சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தேசிய மட்டத்திலான 02 தரவுக் கோப்புகள் பூர்த்தி செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இவ் அறிக்கையின் கீழ் மனித வளங்கள் தொடர்பிலான தகவல்களும், அதே போன்று அந்தந்த நிறுவனங்களினால் தற்சமயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்களும், வரவு - செலவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. AGRINET கோவையின் கீழ் எமது நிறுவன இணையத்தளத்தினூடாக புத்தக விபரக் கொத்துகளை இணையத் தளத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நிகழ்ச்சித் திட்டம் 05 - NARS நிறுவகங்களின் வெளி முன்னேற்ற மீளாய்வு:**

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் தொடர்பில் வெளி மீளாய்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**நிகழ்ச்சித் திட்டம் 06** -

**(அ) விவசாய ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான சர்வதேச கருத்தரங்கு:**

ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உறுதி செய்யப்பட்ட விவசாயத்துறையுடன் தொடர்புடைய புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகளை பகிரங்கப்படுத்துவதற்காக எமது நிறுவனத்தினால் முதற் தடவையாக ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச விவசாய ஆராய்ச்சிக் கருத்தரங்கு 2014 ஆகஸ்ட் 11, 12 ஆம் திகதிகளில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. இக் கருத்தரங்கு மூலம், உணவு, போசாக்குப் பாதுகாப்பு மற்றும் இயற்கை மாற்றங்கள் தொடர்பான ஆராய்ச்சித் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான விஞ்ஞான ரீதியிலான பின்னணியொன்றை வகுத்துக் கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சிக்காக உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதுடன், அவற்றுள் 180 பொழிப்புப் பத்திரங்களும், கண்காட்சிக்காக 128 விஞ்ஞானப் பத்திரங்களும்

தேர்ந்தெடுக்கப்பட்டன. கலாநிதி ஆர்.எஸ். பரோடா உள்ளிட்ட நிபுணர்களின் தலைமையில் இவ் விழா நடாத்தப்பட்டதுடன், இதில் 330 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**(ஆ) SLCARP சபையின் தேசிய விருதுகள் 2014 :**

விவசாய ஆராய்ச்சித் துறையில் மிகச் சிறந்து விளங்குவதற்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் பொருட்டு எமது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய விருது விழா 2014 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்டது. இதன் போது மிகச் சிறந்த ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய விருதுகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார்கள். இந் நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரஞ்சித் மாப்பா உள்ளிட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்ட “உலர் வலய மண் வகைப்படுத்தலும், தேசப்படமயமாக்கலும்” தொடர்பான கருத்திட்டத்திற்கு பிரதான விருது கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**(இ) ஆராய்ச்சிக் கொடுப்பனவு:**

விவசாயத்துறையில் காணப்படுகின்ற சவால்களை வெற்றி கொள்வதற்காக முன்னெடுக்கப்படுகின்ற மிகச் சிறந்த மட்டத்திலான ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் பொறிமுறையொன்றாக, அவ் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றைச் செலுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் 2/2014 ஆம் இலக்கச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இச் சுற்ற றிக்கைக்கு அமைய செயற்பட்டு, எமது நிறுவனத்தின் மூலம், விவசாயத்துறையில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 2014 ஆம் வருடத்தில் 63 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. இதற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுள் 12 பேருக்கு மட்டும் இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

**(ஈ) இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைப் பேரவைச் சட்டத்திற்கான திருத்தம்:**

இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைப் பேரவைச் சட்டத்திற்காக சிபாரிசு செய்யப்பட்ட திருத்தங்கள் பேரவையின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

**நிகழ்ச்சித் திட்டம் 07 -**

அரசாங்கத்திற்கும் NARS இற்கும் இடையில் ஒரு இடைமுகவெட்டை ஏற்படுத்தி வகுத்தமைத்தல்.

**நிகழ்ச்சித் திட்டம் 08 -**

ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையில் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தல்.

**நிகழ்ச்சித் திட்டம் 09 - தகவல் மூலங்களுக்கான பிரவேசம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்:**

தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் என்பது, 2014 ஆம் வருடத்திற்கு எமது நிறுவனத்தின் மூலம் தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டமாகும்.

**நிகழ்ச்சித் திட்டம் 10 - உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கிடையில் தொடர்புகளைப் பேணிச் செல்லல்:**

ஆசிய பசுபிக் விவசாய ஆராய்ச்சிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு இந்தியாவின் புதுடில்லி நகரில் 2014 பெப்ரவரி மாதம் 17 தொடக்கம் 28 வரை நடைபெற்ற, செடி மரபணு பாதுகாத்தல் தொடர்பான குறுகியகாலப் பயிற்சி மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி எமது நிறுவனத்தினூடாக விவசாயத் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

**நிகழ்ச்சித் திட்டம் 11 - விவசாயத்துறையுடன் தொடர்புடைய முக்கியமானதும், தற்காலத்திற்குரியதுமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்:**

தற்காலத்திற்குரியதான முக்கியமான விவசாயத்துறையுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்த்தல், விவசாயத்துறை ஆராய்ச்சி யோசனைகளைத் தயாரித்தல் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சியொன்று எமது நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது.

**நிகழ்ச்சித் திட்டம் 12 - பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்:**

இலங்கை விவசாய ஆராய்ச்சி முறைமையினுள் சர்வதேச பயிற்சிகளை அளிக்க வேண்டிய தேவைகளை இனங் கண்டு, சர்வதேச பயிற்சிகளுக்கான வழிகாட்டல் முறையொன்று எமது நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டது. செடிப் பாதுகாப்பு தொடர்பில் குறுகியகால மற்றும் பட்டப்பின் படிப்பு மட்டத்திலான பயிற்சியின் கீழ் 20 பேருக்குப் பயிற்சி அளிப்பதற்காக பேராதனை விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவனத்திடம் முன்வைக்கப்பட்டனர். மேலும், ஆராய்ச்சியாளர்கள் இருவர் இந் நிகழ்ச்சியின் கீழ் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் தொடர்பிலும், ஆய்வுகூட பாதுகாப்பு தொடர்பிலும் பயிற்சிகளை முடித்துள்ளனர்.

**நிகழ்ச்சித் திட்டம் 13 - தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் செயலாற்றுகை பற்றிய மீளாய்வு:**

ஒப்பந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் பெறுபேறுகள் தொடர்பிலான செயலாற்றுகை அறிக்கை எமது பேரவையின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது

**2014 ஆம் வருடத்தில் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுள் சில.**






கலாநிதி ஆர்.எஸ். பரோடா அவர்களின் சர்வதேச விவசாய ஆராய்ச்சி கருத்தரங்கில் நிபுணர்கள் உரையாற்றும் போது ...

கலாநிதி (திரு.) எஸ்.கே.டீ.என். நெரஞ்சன், சிரேஷ்ட விஞ்ஞானியும் கருத்தரங்கு ஏற்பாட்டாளருமான பிரபாத் விமல் குமார, பணிப்பாளர், இலங்கை விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை, கலாநிதி ஜே.டீ. சமரசிங்ஹ, தலைவர், இலங்கை விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை, மாண்புமிகு பெசில் ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்தன, கமத்தொழில் அமைச்சர், கலாநிதி ஜேரம் பர்ட், பணிப்பாளர், சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், கலாநிதி டீ.எம்.என். திசாநாயக்க, மேலதிக செயலாளர், கமத்தொழில் அமைச்சு, பேராசிரியர் புத்தி மாரம்பே, தலைவர் கருத்தரங்கு பதிப்பாளர் குழு, பேராசிரியர், பயிரியல் பிரிவு, பேராதனைப் பல்கலைக்கழகம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் கரங்களினால் பேராசிரியர் ரஞ்சித் மாப்பா அவர்கள் விருது பெற்றுக் கொள்ளும் போது ...



விவசாயத்துறை தகவல் வலையமைப்பு தொடர்பில் நடைபெற்ற செயலமர்வொன்றின் போது ...



















## 7.9. விவசாய, கமநல காப்புறுதிச் சபை

இலங்கையின் விவசாயத்துறைக்கு முறையான ஆபத்து முகாமைத்துவ முறையொன்றாக விவசாயக் காப்புறுதி முறை அறிமுகம் செய்யப்பட்டு, 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க விவசாயக் காப்புறுதிச் சட்டத்தினூடாக நிறுவப்பட்ட விவசாயக் காப்புறுதிச் சபையானது, அதன் பணிகளை மேலும் விஸ்தரிக்கும் வகையில் 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க விவசாய, கமநல காப்புறுதிச் சட்டத்தினூடாக விவசாய, கமநல காப்புறுதிச் சபை தாபிக்கப்பட்டு அதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இந் நிறுவனம் அதன் 42 வது வருடத்தை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விவசாயத்துறையில் காப்புறுதிச் சேவையை வழங்கும் தீவின் ஒரேயொரு அரச நிறுவனமாக உள்ளூர் விவசாயத்துறையை கட்டியெழுப்புதல், கமத்தொழிலாளிகளின் பொருளாதாரத்தை நிலைபெறச் செய்தல் என்பவற்றின் போது விவசாய, கமநல காப்புறுதிச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை உச்ச மட்டத்தில் நிறைவேற்றுவதை நோக்காகக் கொண்டு, 2014 ஆம் வருடத்திலும் பல்வேறு திட்டங்களை தீவு முழுவதும் அமுல் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்தது. இவற்றின் மூலம் 2014 ஆம் வருடத்தில் விவசாய, கமநல காப்புறுதிச் சபை அறவிட்டுக் கொண்ட காப்புறுதித் தவணைப் பணத்தின் பெறுமதி ரூ. 117.0 மில்லியனாகும்.

